தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## முல்லைப் பெரியாறு: கேரள அரசின் சட்டம் செல்லாது: உச்ச நீதிமன்றம்



**புது தில்லி,**

"முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்தாமல் இருக்க கேரள அரசு அம் மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்றிய தனிச் சட்டம் செல்லாது; அது சட்டவிரோதமானது' என்று உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்தது. இது தொடர்பாக கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் விசாரணை நடத்தி ஒத்திவைக்கப்பட்ட தீர்ப்பை தலைமை நீதிபதி ஆர்.எம். லோதா, நீதிபதிகள் எச்.எல். தத்து, சந்திரமௌலி குமார் பிரசாத், மதன் பி. லோகுர், எம்.ஒய். இக்பால் ஆகிய 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு புதன்கிழமை அளித்த தீர்ப்பு விவரம்:

**தமிழகத்துக்கு சம உரிமை:** "முல்லைப் பெரியாறு நீர் தங்கள் மாநிலத்துக்குள் ஓடும் நீர் என்ற கேரள அரசின் வாதம் தவறானது. இது தொடர்பாக 2006-ஆம் ஆண்டில் அளித்த தீர்ப்பை எதிர்த்து கேரளம் தாக்கல் செய்த மறுஆய்வு மனுவைத் தள்ளுபடி செய்து பிறப்பித்த உத்தரவிலேயே உச்ச நீதிமன்றம் தெளிவாகக்

குறிப்பிட்டிருந்தது. மாநிலங்களுக்கு இடையேயான நதி நீர் விவகாரம் என்பதால்தான், அரசியலமைப்புச் சட்டத்துக்கு உள்பட்டு இந்த விவகாரத்தை உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு விசாரித்தது.

அதில், "முல்லைப் பெரியாறு நதி கேரளத்தில் தோன்றினாலும் அதன் பாதை தமிழகத்தின் சுமார் 114 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக்கு வந்து செல்வதால், அதை மாநிலங்கள் இடையே ஓடும் நதியாகத்தான் கருத முடியும். எனவே, முல்லைப் பெரியாறு நதியை கேரளம் மட்டும் சொந்தம் கொண்டாட முடியாது. அதில் தமிழகத்துக்கும் சம உரிமை உள்ளது' எனத் தெரிவித்து அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்த வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

**புதிய அணை கூடாது:** முல்லைப் பெரியாறு அணையின் நீரியல், புவியியல் ரீதியான ஸ்திரத்தன்மை தொடர்பாக ஆய்வு செய்த அதிகாரமளிக்கப்பட்ட குழுவும் அணை வலுவுடன் இருப்பதாகக் கூறியுள்ளது. மாற்று ஏற்பாடாக கேரளம் புதிய அணையைக் கட்ட விரும்பினால், தமிழகத்துடன் ஆலோசித்து அதற்கான வாய்ப்புகளை ஆராயலாம் என்றும் அக் குழு யோசனை தெரிவித்திருந்தது. ஆனால், அதற்குத் தமிழகம் உடன்படாததால், இரு தரப்பிலும் இணக்கமான சூழல் நிலவவில்லை. ஆகவே, புதிய அணை கட்ட வேண்டும் என்ற கேரளத்தின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தினால் மட்டுமே தமிழகத்தில் உள்ள தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய வறட்சியால் பாதித்த மாவட்டங்களில் நீர்ப்பாசனம் செய்ய முடியும். இதனால், விவசாயிகள், வேளாண் தொழிலாளர்கள் என சுமார் 6.8 லட்சம் பேர் பயன் பெறுவர். உரிய நேரத்தில் தண்ணீர் கிடைக்காமல் போனால், அந்த மக்களின் வாழ்வாதாரமே பாதிக்கப்படும் என்று தமிழக அரசு முன்வைத்த வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறது.

**சட்டவிரோதமானது:** இந்த அம்சங்களைக் கவனத்தில் கொண்டு, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்தாமல் இருப்பதற்காக கேரள அரசு அந்த மாநில சட்டப்பேரவையில், திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றிய "கேரள நீர்ப்பாசனம், பராமரிப்புச் சட்டம்' செல்லாது; அந்நடவடிக்கை

சட்டவிரோதமானது' என்று நீதிமன்றம் அறிவிக்கிறது. அச் சட்டத்தை எந்த வடிவிலும் இனி செயல்படுத்தக் கூடாது என்றும் கேரள அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிடுகிறது' என்று தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மூவர் குழு நியமனம்**

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்தும் நடவடிக்கையைக் கண்காணிக்க மத்திய நீர் வள ஆணையப் பிரதிநிதி தலைமையில் மூவர் குழுவை உச்ச நீதிமன்றம் நியமித்துள்ளது. இது தொடர்பாக அரசியல் சாசன அமர்வு அளித்த தீர்ப்பில் கூறியிருப்பதாவது:

"2006-இல் அளித்த தீர்ப்பில், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. அதைச் செயல்படுத்துவதால், அணையின் பாதுகாப்பு கேள்விக்குறியாகும் என கேரள அரசு அச்சம் கொண்டுள்ளது. அதைக் களையும் வகையில், நீர்மட்டத்தை உயர்த்தும் நடவடிக்கையைக் கண்காணிக்க மூவர் குழுவை நீதிமன்றம் நியமிக்கிறது.

அதன்படி, மூவர் குழுவின் தலைவராக மத்திய நீர்வள ஆணையப் பிரதிநிதி இருப்பார். குழுவின் பிரதிநிதிகளாக தமிழகம், கேரளம் ஆகிய மாநில அரசுகளின் பிரதிநிதியாக தலா ஒருவர் இருக்க வேண்டும்.

இக் குழுவுக்கான அலுவலகத்தைக் கேரள அரசு தீர்மானிக்கும். குழுவின் செயல்பாடுகளுக்கான முழுச் செலவினத்தைத் தமிழகம் ஏற்க வேண்டும்.

அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவது, அணையை அவ்வப்போது பார்வையிடுவது, குறிப்பாக மழைக் காலம் தொடங்கும் முன்பும், மழைக் காலத்தின்போதும் அணையின் பாதுகாப்பு நிலையை மிகவும் தீவிரமாக ஆய்வு செய்வது; அதைத் தொடர்ந்து அணை பராமரிப்புக்கான பணிகள் தொடர்பாக தமிழக அரசுக்கு பரிந்துரை செய்வது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் மூவர் குழுவுக்கு அளிக்கப்படுகிறது' என்று தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாவட்டத்தில் பரவலாக மழை

**காஞ்சிபுரம்,**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் புதன்கிழமை பகலில் பரவலாக கோடை மழை பெய்தது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த மே 4-ஆம் தேதி முதல் வானம் மேகமூட்டத்துடனே காணப்படுகிறது.

அவ்வபோது தூறல் பெய்து குளிர்ந்த சூழ்நிலையை உருவாக்கி வருகிறது. மாவட்டத்தில் புதன்கிழமை காலை 6 மணி நிலவரப்படி திருக்கழுகுன்றத்தில் 6.7 மி.மீ., கேளம்பாக்கத்தில் 5.80 மி.மீ., மதுராந்தகத்தில் 5.75 மி.மீ., தாம்பரத்தில் 4 மி.மீ., செங்கல்பட்டில் 1 மி.மீ. மழை பதிவானது. இந்நிலையில் புதன்கிழமை காலை 9 மணிக்கு மேல் காஞ்சிபுரத்தில் அரை மணி நேரம் நல்ல மழை பெய்தது.

இதனால் பணிக்கு செல்வோர் மழையில் நனைந்தபடி சென்றனர். சிலர் இருசக்கர வாகனத்தில் குடை பிடித்தபடியும் சென்றனர்.

கத்திரி வெயில் நேரத்தில் மழை பெய்து வருவது மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அரை மணி நேர மழையைத் தொடர்ந்து பகல் முழுவதும் வானம் மேகமூட்டத்துடனே இருந்தது.

## திண்டுக்கல் மாவட்டத்தில் தொடர் மழை

**திண்டுக்கல்,**

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தின் காரணமாக, கடந்த 2 நாள்களாக தென் தமிழகத்தில் பெய்து வரும் தொடர் மழையில், திண்டுக்கல் மாவட்டத்துக்கு 356 மில்லி மீட்டர் கிடைத்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் நிலவி வந்த வெப்பமான சூழ்நிலை, கடந்த இரு தினங்களாக பெய்து வரும் கோடை மழையால் மாற்றம் அடைந்துள்ளது. அக்னி நட்சத்திரம் தொடங்கிய ஞாயிற்றுக்கிழமை முதல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மிதமான சாரல் மழை பெய்து வந்தது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை முதல் பெரும்பாலான பகுதிகளில் லேசான மழையும்,

கொடைக்கானல் மற்றும் சிறுமலை உள்ளிட்ட வனப் பகுதிகளில் பலத்த மழையும் பெய்யத் தொடங்கியது.

இரவு முழுவதும் பெய்த தூறல் மழையால் குளுமையான சூழல் நிலவுகிறது. மேலும், தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் மழை நீர் புகுந்தது.

தொடர்ந்து, புதன்கிழமையும் காலை முதலே மாவட்டத்தின் பல பகுதிகளிலும் விட்டு விட்டு பலத்த மழை கொட்டத் தொடங்கியது. காற்று இல்லாததால், அந்தந்த பகுதியில் திரண்ட கருமேகம் கலையாமல், மழை நீராகப் பொழிந்தது. மேலும், இடி, மின்னல் இல்லாததால், சேதங்கள் ஏதும் தெரிய வரவில்லை.

மாவட்டத்தில் மிகுந்த வறட்சிப் பகுதியான குஜிலியம்பாறை ஒன்றியத்தில், நண்பகல் நேரத்தில் பெய்த பலத்த மழையால், தாழ்வான பகுதிகள், சாலைகள் மற்றும் நீரோடைகளில் மழை நீர் வெள்ளமாக ஓடியது. இதனால், வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமம் அடைந்தனர்.

திண்டுக்கல்-கரூர் சாலையில் எதிரே வரும் வாகனங்கள் தெரியாத அளவுக்கு பலத்த மழை பெய்ததால், வாகனங்கள் விளக்குகளை ஒளிரவிட்டபடியே சென்றன.

புதன்கிழமை காலை வரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பெய்த மழையளவு (மி.மீட்டரில்): திண்டுக்கல் - 28.80, கொடைக்கானல் - 60.60, நத்தம் - 45.50, நிலக்கோட்டை - 28.40, பழனி - 36.00, வேடசந்தூர் - 18.84, சத்திரப்பட்டி (ஒட்டன்சத்திரம்) - 52.70, புகையிலை நிலையம் (வேடசந்தூர்) - 20.02, கொடைக்கானல் போட் கிளப் - 60, காமாட்சிபுரம் - 18.70. மொத்தம் 369.56 மி.மீட்டர் பதிவாகியுள்ள மழையின் சராசரி - 36.96.

## பழனியில் சாரல் மழை: மக்கள் மகிழ்ச்சி

**பழனி,**

பழனியில் பெய்து வரும் தொடர் சாரல் மழையால், பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய்த்த நிலையில், பழனி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடுமையான வறட்சி நிலவி வந்தது. பழனி அருகே தொப்பம்பட்டி, பாப்பம்பட்டி, அமரபூண்டி உள்ளிட்ட பல்வேறு ஊர்களிலும்

தென்னந் தோப்புகள் காய்ந்து சாய்ந்துவிட்ட நிலையில், காற்றில் ஈரப்பதம் இல்லாமல் விளைநிலங்கள் பாளம் பாளமாக விரிந்து கிடந்தன. பல இடங்களிலும் பல நூறு அடிக்கு ஆழ்துளைக் கிணறு அமைத்தும் தண்ணீர் பெற முடியவில்லை. கிராமங்களிலேயே பொதுமக்கள் குடிநீரை விலை கொடுத்து வாங்கும் நிலை நேரிட்டது.

கடந்த இரு தினங்களாக பெய்து வரும் சாரல் மழையினால், கத்திரி வெயிலின் வெப்பம் காணாமல், குளுமையான சூழல் நிலவி வருகிறது. செவ்வாய்க்கிழமை இரவு துவங்கிய சாரல் மழை விடிய, விடிய பெய்தது. புதன்கிழமையும் விட்டு விட்டுத் தொடர்ந்தது. இதனால் பல்வேறு இடங்களிலும் மழைநீர் தேங்கியது. சுமார் 36 மி.மீ. அளவுக்கு மழை பெய்திருந்தாலும், உழவுக்கு போதிய அளவு மழை இல்லை. மேலும், பழனியைச் சுற்றியுள்ள அணைகளுக்கும் நீர்வரத்து இல்லை. இருப்பினும், இதேபோல் தொடர்ந்து மழை பெய்தால் விவசாயத்துக்கும், குடிநீருக்கும் தட்டுப்பாடு குறையும் என்று, பொதுமக்கள் எதிர்பார்த்து உள்ளனர்.

## <u>விருதுநகர் மாவட்டத்தில் தொடர் மழை திருச்சுழி பகுதியில் 53 மி.மீ மழை பதிவு</u>

**விருதுநகர்,**

விருதுநகர் மாவட்டப் பகுதியில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் கோடை மழையால் நீர்நிலைகள் நிரம்பவில்லை என்றாலும், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மாவட்டத்தில் அதிகபட்சமாக திருச்சுழி பகுதியில் 53 மி.மீ. மழையளவு பதிவாகியுள்ளது.

மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாகவே வெயில் மற்றும் வெப்பம் பொதுமக்களை வாட்டி வதைத்தது. நீர் நிலைகளிலும், கிணறுகளிலும் தண்ணீர் வற்றியது. பொதுமக்கள் குடிநீரை விலை கொடுத்து வாங்கி சமாளித்து வந்தனர். மாவட்ட நிர்வாகமும் பற்றாக்குறையை சமாளிப்பது குறித்து ஆலோசனை நடத்தி வந்தது.

இந்நிலையில் கடந்த வாரம் திடீரென 1 மணி நேரம் பெய்த மழையால் ஓரளவு வெப்பம் தணிந்தது. இந்நிலையில் வங்கக்கடலில் உருவான, குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த 3 நாள்களாக விட்டு, விட்டு தொடர்ந்து மழை பெய்து வருகிறது. செவ்வாய்க்கிழமை மாலை முதல் தொடர்ந்து மழை பெய்து

வருகிறது. புதன்கிழமை காலையிலும் சாரல் மழையும், பிற்பகல் 1 மணிக்கு பலத்த மழையும் பெய்தது.

இம்மாவட்டத்தில் செவ்வாய்கிழமை பெய்த மழை அளவு விவரம் வருமாறு: அதிகபட்சமாக திருச்சுழி-53 மி.மீ, பிளவக்கல் அணை-50 மி.மீ, காரியாபட்டி-44.60 மி.மீ, ராஜபாளையம்-40 மி.மீ, வத்திராயிருப்பு-38 மி.மீ, கோல்வார்பட்டி-32.80 மி.மீ, விருதுநகர்-28.20 மி.மீ, அருப்புக்கோட்டை-27.50 மி.மீ, சிவகாசி-26.20 மி.மீ, வெம்பக்கோட்டை-24.60 மி.மீ, ஸ்ரீவில்லிபுத்தூர்-20 மி.மீ, சாத்தூர்-15 மி.மீட்டரும் பெய்துள்ளது.

இம்மழையால் விருதுநகர் பகுதியில் உள்ள பட்டாசு ஆலைகளில் பொதுமக்கள் வேலைக்கு செல்ல முடியாத நிலையேற்பட்டுள்ளது. அதனால் கிராமங்களில் செயல்படுத்தப்படும் தேசிய ஊரக வேலை உறுதி திட்ட வேலைக்கு ஆள்கள் அதிகமாக சென்றனர்.

அங்கும் வேலையில் ஈடுபட முடியாமல் மழை தொடர்ந்து பெய்த காரணத்தால் திரும்பி வந்தனர். தொடர்ந்து மழை பெய்து வந்தாலும், ஓடைகளில் நீர் வரத்து இல்லாத காரணத்தால் கண்மாய், குளம் ஆகிய நீர் நிலைகளுக்கும் போதிய தண்ணீர் வரத்தில்லை.

கிணற்றுப் பாசன காய்கறிகள், சூரியகாந்தி, மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்கள் கருகிவந்தன. தற்போது, பெய்து வரும் மழையால் அவை மீண்டும் துளிர்க்கும் என விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## "அல்போன்சா' ஏற்றுமதி தடையால் பாதிப்பு இல்லை -ஆர்.வேல்முருகன்-

**கோவை,**

அல்போன்சா மாம்பழ இறக்குமதிக்கு ஐரோப்பாவில் தடை விதித்ததால் இந்தியாவுக்குக் கண்டிப்பாகப் பாதிப்பில்லை என்று, மாம்பழ உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். அல்போன்சா மாம்பழத்தைப் பொறுத்தவரையில் மகாராஷ்டிர மாநிலம் ரத்தினகிரியில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டது. இங்கிருந்துதான் பெரும்பாலான வெளிநாடுகளுக்கு அல்போன்சா மாம்பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. கடந்த சில ஆண்டுகளாகப் பொய்த்துப் போன பருவமழை மற்றும் அதிகளவு பெய்த மழை காரணமாக ரத்தினகிரியில் மாம்பழ

உற்பத்தி கடும் பாதிப்புக்கு உள்ளானது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் தருமபுரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், பழனி ஆகிய இடங்களில் அல்போன்சா மாமரங்கள் அதிக அளவில் நடப்பட்டு மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஏற்றுமதிக்கென தனியாகப் பல்வேறு அளவுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஏற்றுமதி செய்யப்படும் மாம்பழம் குறைந்தபட்சம் 300 கிராம் இருக்க வேண்டும். இதுதவிர, குறிப்பிட்ட அளவில் பேக்கிங் செய்திருக்க வேண்டும். குறிப்பிட்ட அளவுக்கு மேல் ரசாயன மருந்துகளைத் தெளித்திருக்கக் கூடாது என ஏகப்பட்ட கட்டுப்பாடுகள் உண்டு.

கடந்த சில ஆண்டுகளாகப் பொய்த்துப் போன பருவமழை, கூடுதல் வெயில் ஆகிய காரணங்களால் நாடு முழுவதும் அல்போன்சா மாமரங்களில் பெரும்பாலானவற்றில் மாம்பழம் 300 கிராம் எடையில் இல்லை. இதுதவிர வறட்சி காரணமாக ரத்தினகிரி உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் மாம்பழ வரத்து பெருமளவில் குறைந்துவிட்டது. இதனால்தான் அதிகளவில் ஏற்றுமதி செய்ய முடியவில்லை. இச் சூழ்நிலையில் இந்தியாவில் இருந்து அல்போன்சா மாம்பழ இறக்குமதிக்கு ஐரோப்பா தடை விதித்துள்ளது.

இதுதொடர்பாக, சிறந்த முறையில் அல்போன்சா மாம்பழம் விளைவித்ததற்காகப் பரிசு பெற்ற பழனி கிரிஸ்டர் கார்டன் உரிமையாளர் டி.சேதுபதி கூறியது: கடும் வறட்சி மற்றும் வெயில் காரணமாக இந்த ஆண்டு அல்போன்சா மாம்பழ உற்பத்தி பெருமளவில் குறைந்துள்ளது. மேலும், இப்போது சீசன் முடியும் நேரம். இதனால், இறக்குமதிக்கு விதித்த தடையால் பெரும் பாதிப்புக் கிடையாது. உற்பத்தியாகும் மாம்பழங்கள் உள்நாட்டிலும் மாம்பழ ஜூஸ் தயாரிக்கவும் செல்கிறது. இதனால், இங்குள்ள விவசாயிகளுக்கு எவ்விதப் பாதிப்பும் இல்லை என்றார்.

## நல்லூரில் 110 மி.மீ. மழை

**கோவை,**

பொள்ளாச்சி அருகே நல்லூர் பகுதியில் புதன்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 110 மி.மீ. மழை பெய்துள்ளது.

பிற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.ல்): சோலையாறு 15, பரம்பிக்குளம் 26, ஆழியாறு 50.4, திருமூர்த்தி 23, அமராவதி 12, அப்பர் நீராறு 8, லோயர் நீராறு 7, வால்பாறை 8, வேட்டைக்காரன்புதூர் 42, மணக்கடவு 35, மாக்கினாம்பட்டி 71, நவமலை 47, நெகமம் 45, தூணக்கடவு 19, பெருவாரிப்பள்ளம் 23, அன்னூர் 24, கோவை விமான நிலையம் 29.5, மேட்டுப்பாளையம் 15.2, பொள்ளாச்சி 49, பெரியநாயக்கன்பாளையம் 26, சூலூர் 29.2, வேளாண் பல்கலைக்கழகம் 25.8, சின்கோனா 20, கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் 20.

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு தேங்காய் பருப்பு வரத்து குறைவு

**வெள்ளக்கோவில்,**

வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதன்கிழமை நடந்த ஏலத்துக்கு தேங்காய் பருப்பு வரத்து குறைந்திருந்தது. பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வாரந்தோறும் புதன்கிழமை தேங்காய் பருப்பு ஏல விற்பனை நடைபெற்று வருகிறது. இந்த வாரம் மொத்தம் 381 மூட்டைகள் வந்திருந்தன. மழை காரணமாக அனைத்து மூட்டைகளும் பாதுகாப்பான கிடங்கில் வைக்கப்பட்டிருந்தன. உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து பலர் தேங்காய் பருப்புகளை வாங்க வந்திருந்தனர். முதல் தரம் அதிக பட்ச விலை கிலோ ரூ. 100.65, மட்ட ரகம் ரூ. 82.65 என ஏலம் போனது. மொத்தம் வந்திருந்த 19 ஆயிரத்து 141 கிலோ தேங்காய் பருப்பு, ரூ. 17.73 லட்சத்துக்கு விற்பனையானது. கடந்த வாரம் 750 மூட்டைகள் வந்திருந்த நிலையில், இந்த வாரம் வரத்தும், விலையும் குறைந்திருந்தது.

## திருப்பூரில் விடிய, விடிய கனமழை: மக்கள் மகிழ்ச்சி

**திருப்பூர்,**

திருப்பூரில் கோடை வெயில் மக்களை வாட்டி எடுத்து வந்த நிலையில், செவ்வாய்க்கிழமை மாலையில் துவங்கிய மழை தொடர்ந்து விடிய,விடிய பெய்ததால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். திருப்பூர் மற்றும் சுற்றுவட்டாரப்

பகுதிகளில் கடந்த சில நாள்களாக கோடை வெயில் மக்களை வாட்டி வதைத்தது. மழை பெய்யாதா என மக்கள் ஏங்கி வந்தனர்.

இந்நிலையில், அவர்களின் ஏக்கத்தை போக்கும் வகையில் செவ்வாய்க்கிழமை காலை முதல் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. மேலும், மதியம் லேசான சாரல் மழை அவ்வப்போது பெய்தது. மாலை 3 மணி முதல் சுமார் ஒரு மணி நேரம் நல்ல மழை பெய்தது. இதனால், திருப்பூர் மாநகரமே குளிர்ந்தது. செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முழுவதும் பெய்த மழை புதன்கிழமையும் தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது.

இத்தொடர் மழை காரணமாக, பெருமாநல்லூர் சாலை, குமரன் சாலை, பல்லடம் சாலை, அவிநாசி சாலைகளில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்தோடியது.

இதனால், வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்திற்குள்ளாகி, போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மேலும், ஆங்காங்கே உள்ள தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி நின்று குளம் போல் காட்சியளித்தது.

இதேபோல், பல்லடம், பொங்கலூர், அவிநாசி, குன்னத்தூர், ஊத்துக்குளி பகுதிகளிலும் மழை பெய்தது. இம்மழையால் விவசாயிகளும், மக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## அமராவதி அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

**உடுமலை,**

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்து வரும் மழையின் காரணமாக உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணைக்கு நீர் வரத்து அதிகரித்து வருகிறது.

உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையின் மூலம் திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களில் உள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. மேலும், நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இந்த அணை விளங்கி வருகிறது.

இந்நிலையில், அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பொய்த்துப் போனதால் அணையில் போதுமான தண்ணீர் இல்லாத சூழ்நிலை நிலவி வந்தது. கோடைக் காலமான தற்போது அணையின் நீர் மட்டம் அதல பாதாளத்திற்கு சென்றது.

இருப்பினும் கரையோரக் கிராமங்களின் குடிநீர் தேவைகளுக்காக கடந்த சில நாள்களுக்கு முன்னர் திறந்து விடப்பட்டது. இதனால் அணையின் நீர்மட்டம் 17 அடியாக குறைந்தது. இதனால், நூற்றுக்கணக்கான கிராமங்களில் குடிநீர் பிரச்னை ஏற்படும் அபாயம் நிலவி வந்தது. இந்நிலையில், அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கோடை மழையால் புதன்கிழமை காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு 105 கன அடி தண்ணீர் வந்து கொ ண்டிருந்தது. தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் குடிநீர் பிரச்னையை ஓரளவுக்கு சமாளிக்க முடியும் என பொதுப் பணித்துறையினர் தெரிவித்தனர்.

## அவிநாசியில் பருத்தி வரத்துக் குறைந்தது

**அவிநாசி,**

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் பருத்தி வரத்துக் குறைந்து ரூ. 18.50 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது.

ஏ.சி.எம்.எஸ். மையத்தில் நடைபெற்ற ஏலத்துக்கு, 900 பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. குவிண்டால் ஒன்றுக்கு ஆர்.சி.எச். ரகப்பருத்தி ரூ. 5,000 முதல் ரூ. 5,600 வரையிலும், டி.சி.எச். ரகப்பருத்தி ரூ. 5,500 முதல் ரூ. 6,100 வரையிலும், மட்டரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2,500 முதல் ரூ. 3,000 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 18.50 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

இதில், கோபி, அந்தியூர், குன்னத்தூர், செங்கப்பள்ளி, சேலம், திருப்பத்தூர், ஆத்தூர், மேட்டூர், தருமபுரி, பொம்மிடிப்பூண்டி, குண்டடம், கிணத்துக்கடவு, அன்னூர், நீச்சாம்பாளையம் ஆகிய பகுதிகளிலிருந்து 93 பருத்தி விவசாயிகளும், 9 பருத்தி வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## கவுந்தப்பாடியில் 30 மி.மீ. மழை பதிவு

**ஈரோடு,**

ஈரோடு மாவட்டத்தில் அதிகபட்சமாக கவுந்தப்பாடியில் 30 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை மாலை முதல்

புதன்கிழமை காலை வரை பதிவான மழை அளவு விவரம் (மழை அளவு மி.மீட்டரில்):

கவுந்தப்பாடி-30, சிவகிரி-28, ஈரோடு-20, புங்கம்பாடி-20, சென்னிமலை-19, மொடக்குறிச்சி-18, இலந்தகுட்டைமேடு-18, கோபி-16, பவானி-15.4, கொடிவேரி அணை-12, ஒரத்துப்பாளையம் அணை-12, அரச்சலூர்-12, ஓலப்பாளையம்-11, பெருந்துறை-10, பெரும்பள்ளம் அணை-10, பவானிசாகர் அணை-9.2, குண்டேரிப்பள்ளம் அணை-8.

## அடைமழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

**ஈரோடு,**

ஈரோடு மாவட்டம் முழுவதும் அடைமழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மாவட்டம் முழுவதும் செவ்வாய்க்கிழமை மாலையில் இருந்தே மழை பெய்யத் தொடங்கியது. இரவில் பெய்த கனமழையால் நகரில் தாழ்வான பகுதியில் மழை நீர் பாய்ந்து ஓடியது.

இரவில் சிறிது நேரம் நின்ற மழை, நள்ளிரவு 12 மணிக்கு மேல் மீண்டும் பலமாக பெய்தது. புதன்கிழமை மாலை வரை அடைமழை தொடர்ந்தது.

இந்த மழையால் ஈரோடு நகர மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். மழை காரணமாக கொல்லம்பாளையம், மூலப்பாளையம், மூலப்பட்டறை மற்றும் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டது.

கோபி, சத்தியமங்கலம், பவானிசாகர், பு.புளியம்பட்டி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளிலும் நல்ல மழை பெய்தது. பவானிசாகர் அணையை சுற்றி மழை கொட்டியதால் அணைக்கு மழைநீர் வந்து சேர்ந்தது.

சத்தி வனப்பகுதி மற்றும் பவானிசாகர் வனப்பகுதி, கோபி அருகே உள்ள குண்டேரிப்பள்ளம் அணை பகுதியிலும் மழை கொட்டித் தீர்த்தது. பவானி, சித்தோடு, கவுந்தப்பாடி, பெருமாள் மலை, அம்மாபேட்டை, நெரிஞ்சிபேட்டை ஆகிய பகுதிகளில் மழை பெய்தது. அந்தியூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளிலும் செவ்வாய்க்கிழமை மாலை மற்றும் இரவில் மழை பெய்தது. இதே

போல் அந்தியூர், பர்கூர் வனப்பகுதியிலும் கோடை மழை பெய்து வனப்பகுதியை செழுமையாக்கியது. மேலும் பெருந்துறை, மொடக்குறிச்சி, அரச்சலூர், கொடுமுடி, சிவகிரி, அம்மன் கோவில் உள்பட மாவட்டம் முழுவதும் மழை கொட்டியது.

கீழ்பவானி, காலிங்கராயன், தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனப் பகுதிகளில் கடும் வறட்சி நிலவி வருவதால் பயிர்கள் காய்ந்து வருகின்றன. அதேபோல லட்சக்கணக்கான தென்னை மரங்கள் வறட்சியால் கருகி வருகின்றன. இந்நிலையில், திடீர் அடைமழையால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பருவமழைக் காலத்தைப் போல மாறியது உதகை

**உதகை,**

உதகையில் செவ்வாய்க்கிழமை பிற்பகலிலிருந்து தொடர்ந்து பெய்துவரும் மழையின் காரணமாக நகரின் பருவநிலையே மாறிவிட்டது.

வழக்கமாக நிலவும் சீசன் காலநிலை மாறி, ஜூன், ஜூலை மாதங்களில் பருவமழைக் காலத்தின்போது நிலவும் தட்பவெப்ப நிலையைப்போல கடும் குளிராகவும், மேக மூட்டத்துடனும் உள்ளது. இதனால், உதகை சீசனை அனுபவிக்க வந்துள்ள சுற்றுலாப் பயணிகள் முதல் உள்ளூர் மக்கள் வரை அனைவரின் இயல்பு வாழ்க்கையும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. மழையுடன் காற்றும் வீசி வருவதால் குளிர் அதிகரித்துள்ளதோடு, அவ்வப்போது மின் தடையும் ஏற்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் ஏப்ரல், மே மாதங்கள் கோடை சீசன் மாதங்கள் என்பதால் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகளவில் இருக்கும். உதகை உள்ளிட்ட ஒருசில பகுதிகளில் மட்டும் தினந்தோறும் ஒருசில மணி நேரத்துக்கு கோடை மழை பெய்து பருவநிலையிலும் மாற்றம் ஏற்படும். இத்தகைய பருவநிலையே நிலவி வந்த சூழலில், கடந்த 2 நாள்களாக உதகையில் மட்டுமின்றி மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக பெய்துவரும் மழை குடிநீருக்கும், விவசாயத் தேவைகளுக்கும் ஏற்றதாக இருந்தாலும், சுற்றுலாத் தொழிலை வெகுவாக பாதித்துள்ளது. பொதுவாகவே உதகையில் சீசன் காலநிலையைப் பொறுத்தமட்டில் காலை நேரத்தில் வெயிலும், பகலில் மழையும், மாலை நேரத்தில்

இதமான காலநிலையும், இரவில் இதமான குளிருமாக இருக்கும். ஆனால், தற்போது தொடர்ந்து பரவலாக பெய்துவரும் மழையால் அனைத்து பகுதிகளிலும் கடும் குளிர் நிலவுகிறது. இதன் காரணமாக ஏராளமான சுற்றுலாப் பயணிகள் உதகையில் இரவில் தங்குவதை தவிர்த்துவிட்டு சொந்த இடங்களுக்கு திரும்பி வருகின்றனர். இதனால் தனியார் தங்கும் விடுதிகளும் கூட்டமின்றி காணப்படுகின்றன.

அதேபோல, முக்கிய சுற்றுலா மையங்களைத் தவிர ஏனைய சுற்றுலா மையங்களும் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. உதகையில் தொட்டபெட்டா மலைச்சிகரப் பகுதி கடுமையான மேக மூட்டத்துடன் காணப்படுவதால், சுற்றுலாப் பயணிகள் செவ்வாய்க் கிழமை மாலையிலிருந்தே அங்கு செல்வதை தவிர்த்து வந்தனர்.

தொடர் மழையின் காரணமாக படகு இல்லத்திலும் படகு சவாரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் குறைவாகவே உள்ளது. மோட்டார் படகுகளைத் தவிர மிதி படகுகளிலும், துடுப்பு படகுகளிலும் செல்ல சுற்றுலாப் பயணிகள் முன்வராத நிலையே உள்ளது.

அரசினர் தாவரவியல் பூங்காவைப் பொறுத்தமட்டில் சுற்றுலாப் பயணிகள் கூட்டம் ஓரளவுக்கு உள்ளது. மழை பெய்தாலும் பூங்காவில் பூத்துள்ள மலர்களைக காண ஏராளமானோர் வந்து செல்கின்றனர். அதேபோல, ரோஜா பூங்காவில் இவ்வார இறுதியில் ரோஜா காட்சி நடைபெறவுள்ளதால் முன்னதாகவே அதைப் பார்த்துவிடும் ஆவலில் அங்கும் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் ஓரளவுக்கு உள்ளது.

தொடர் மழையின் காரணமாகவும், குண்டும் குழியுமான சாலைகளாலும் உதகை நகரில் அனைத்து சாலைகளிலும், சுற்றுலா மையங்களுக்கு செல்லும் பாதைகளிலும் மழைநீர் தேங்கியிருப்பதால் நடந்து செல்லும் பொதுமக்களும், சுற்றுலாப் பயணிகளும் பெரிதும் அவதிப்படுகின்றனர்.

மாவட்டத்தில் புதன்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் 333.2 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இதில் அதிகபட்சமாக கோத்தகிரி பகுதியில் 64 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தின் பிற பகுதிகளில் பதிவான மழை அளவு விவரம் ( மி.மீட்டரில்): கேத்தி-52, கொடநாடு-26.4, அவலாஞ்சி-26, குன்னூர்-25.8, உதகை-

25, அப்பர்பவானி, குந்தா -19, பர்லியார்-15, எமரால்டு-17, கெத்தை-12, கிண்ணக்கொரை-10, நடுவட்டம்-8, கிளன்மார்கன், கூடலூர் -6, தேவாலா-2 மி.மீ.

## திட்டமிட்டபடி ரோஜா கண்காட்சி

**உதகை,**

நீலகிரி மாவட்டத்தில் பரவலாக பலத்த மழை பெய்து வந்தாலும், திட்டமிட்டபடி இம்மாதம் 10, 11ஆம் தேதிகளில் ரோஜா கண்காட்சி நடத்தப்படுமென மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஆட்சியர் தெரிவித்துள்ளதாவது: உதகையில் கோடை சீசனையொட்டி அரசினர் ரோஜா பூங்காவில் இம்மாதம் 10, 11ஆம் தேதிகளில் ரோஜா கண்காட்சி சிறப்பாக நடத்தப்படும்.

மாவட்ட தோட்டக்கலைத் துறையின் சார்பில் பலவண்ண ரோஜா மலர்களைக் கொண்டு நுழைவு வாயிலில் அலங்கார வளைவு அமைக்கப்படும். அதேபோல, 15,000 ரோஜா மலர்களைக் கொண்டு 18 அடி நீளத்திலும், 6 அடி உயரத்திலும் அலங்கார வீணை வடிவம் அமைக்கப்படவுள்ளது. ரோஜா கண்காட்சியை சிறப்பிக்கும் வகையில் கோவை, தருமபுரி, கிருஷ்ணகிரி, கொடைக்கானல், மதுரை, சேலம் ஆகிய 6 மாவட்டங்களிலிருந்து தோட்டக்கலைத் துறையின் சார்பில் பலவண்ண ரோஜா மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பல்வேறு வடிவங்கள் மற்றும் காட்சி அரங்குகள் அமைக்கப்படும் என்றார்.

## சாரல் மழையால் குளிர்ந்தது வால்பாறை

**வால்பாறை,**

கடும் வெயில் காரணமாக ஏமாற்றத்துடன் திரும்பி வரும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வகையில் கடந்த இரண்டு தினங்களாகப் பெய்த மழையால் வால்பாறை முழுவதும் குளிர்ச்சி அடைந்துள்ளது.

கோடை விடுமுறைச் சமயங்களில் சுற்றுலாப் பயணிகள் மலைப் பிரதேசங்களை நாடி வருவது வழக்கம். இதில், வால்பாறைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள்,

இப்பகுதியில் பொழுதுபோக்கு அம்சங்கள் இல்லாவிட்டாலும், சீதோஷணத்தை அனுபவிப்பதற்காகவே இங்கு வருகின்றனர்.

இந்த வருடம் துவக்கத்தில் இருந்தே வால்பாறையில் சீதோஷண நிலை மாறிவிட்டது. கடும் வெயில் காரணமாக ஆறுகளில் தண்ணீர் குறைந்து வறட்சி நிலவியது.

இதனால், இப்பகுதிக்கு வந்த சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

இந் நிலையில், கடந்த இரண்டு தினங்களாகப் பெய்து வரும் சாரல் மழையால் வெப்பம் தணிந்து குளிரடிக்கத் துவங்கிவிட்டது.

சோலையார் அணை நீர்மட்டம் 3.48 அடியாக உள்ளது. இந்த மழை தொடர்ந்து நீடித்தால் அணை நீர்மட்டம் கணிசமாக உயரும் வாய்ப்புள்ளது.

## உதகையில் தொடர் மழை:அணைகளில் நீர்மட்டம் உயர்வு

**உதகை,**

உதகையில் தொடர்ந்து பெய்துவரும் மழையால் அணைகளில் நீர்மட்டம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

பார்சன்ஸ்வேலி நீர்த்தேக்கத்தை தவிர ஏனைய அனைத்து நீர்த்தேக்கங்களிலும் கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் இருந்த தண்ணீரைவிட நடப்பாண்டில் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

பார்சன்ஸ்வேலி நீர்த்தேக்கத்தில் கடந்த ஆண்டு மே 7ஆம் தேதி 30 அடி தண்ணீர் இருந்தது. நடப்பாண்டில் இது 19.8 அடியாக குறைந்துள்ளது. நகரின் தண்ணீர் தேவை அதிகரித்துள்ளதாலும், நீர்மின் உற்பத்திக்கு அதிகளவில் தண்ணீர் எடுக்கப்படுவதாலும் இங்கு நீர்மட்டம் குறைந்துள்ளதாக கூறப்படுகிறது. இருப்பினும் இப்பகுதிகளில் பெய்துவரும் மழையின் காரணமாக அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

மார்லிமந்து நீர்த்தேக்கத்தில் கடந்த ஆண்டில் 4 அடியாக இருந்த நீர்மட்டம், தற்போது 5 அடியாகவும், டைகர் ஹில்லில் 4 அடியாக இருந்தது தற்போது 16 அடியாகவும், கோரிசோலையில் 3 அடியாக இருந்தது தற்போது 3.5 அடியாகவும், மேல் தொட்டபெட்டாவில் 2 அடியாக இருந்தது தற்போது 15.5 அடியாகவும், மேல்

கோடப்பமந்தில் 2.5 அடியாக இருந்தது தற்போது 8 அடியாகவும், லோயர் கோடப்பமந்தில் 3 அடியாக இருந்தது தற்போது 10 அடியாகவும், ஓல்டு ஊட்டியில் 2 அடியாக இருந்தது தற்போது 4 அடியாகவும், கிளன்ராக்கில் 2 அடியாக இருந்தது தற்போது 5 அடியாகவும் அதிகரித்துள்ளது.

லோயர் தொட்டபெட்டா நீர்த்தேக்கம் முழு கொள்ளளவான 14 அடியை எட்டியுள்ளது.எனவே, உதகையிலுள்ள அனைத்து நீர்த்தேக்கங்களிலும் போதிய அளவுக்கு தண்ணீர் இருப்பதால் கோடை சீசன் காலத்திலோ அல்லது எதிர்வரும் மாதங்களிலோ உதகை நகரில் குடிநீர் விநியோகத்தில் எவ்வித பிரச்னையும் இருக்காது என அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## வேலூரில் 2-வது நாளாக மழை

**வேலூர்,**

வேலூர் மாவட்டத்தில் 2-வது நாளாக புதன்கிழமை நல்ல மழை பெய்தது. மாவட்டத்தில் அதிகபட்சமாக ஆற்காட்டில் 40.10 மில்லி மீட்டர் மழை பதிவானது. தமிழகத்தின் பல பகுதிகளிலும் பரவலாக கன மழை பெய்துள்ளது.

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள தீவிர காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி காரணமாக வேலூர் மாவட்டத்தில் பரவலாக செவ்வாய்க்கிழமை பிற்பகல் முதல் நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் புதன்கிழமை வெயிலின் தாக்கம் மாவட்டத்தில் முழுமையாக குறைந்துபோனது.

மாவட்டத்தில் புதன்கிழமை காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் மிகக் குறைந்த அளவாக வாணியம்பாடியில் 1.60 மி.மீட்டர் மழை பதிவானது. அதிகபட்சமாக ஆற்காட்டில் 40.1 மி.மீட்டர் மழை பதிவானது. மாவட்டத்தில் பிற இடங்களில் பெய்த மழை அளவு (மி.மீட்டரில்):

ஆம்பூர் 10, அரக்கோணம் 10.3, குடியாத்தம் 3.3, திருப்பத்தூர் 2.2, வேலூர் 16, வாலாஜா 31, ஆலங்காயம் 3, மேல்ஆலத்தூர் 3.2, காவேரிப்பாக்கம் 11.2.

## ஆரணியில் அதிகபட்ச மழை

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலை மாவட்டத்திலேயே அதிகபட்சமாக ஆரணியில் 27.80 மி.மீ. மழை அளவு பதிவாகி உள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் செவ்வாய்க்கிழமை மாலை முதல் பரவலாக மழை பெய்து வருகிறது.

இதில் மாவட்டத்திலேயே அதிகபட்சமாக ஆரணியில் 27.80 மி.மீ. மழை அளவு பதிவாகி உள்ளது. செய்யாறில் 3 மி.மீ., செங்கத்தில் 15.80 மி.மீ., சாத்தனூர் அணையில் 2.80 மி.மீ., வந்தவாசியில் 5 மி.மீ., போளூரில் 17.20 மி.மீ., திருவண்ணாமலையில் 15.10 மி.மீ. மழை அளவு பதிவாகி உள்ளது.

தொடர்ந்து, புதன்கிழமை காலை முதல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக லேசான மழை பெய்தபடியே இருந்தது.

## மாரண்டஹள்ளியில் 52 மி.மீ மழை

**தருமபுரி,**

தருமபுரி மாவட்டத்தில் அதிகபட்சமாக மாரண்டஹள்ளியில் 52 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக 100 டிகிரிக்கும் அதிகமாக வெயில் சுட்டெரித்தது.

இதனால் பகல் வேளைகளில் வீடுகளை விட்டு வெளியே செல்ல பொதுமக்கள் அஞ்சி வந்தனர். மேலும் கோடை வெயிலின் உக்கிரத்தை சமாளிக்க ஆங்காங்கே புற்றீசல் போல் முளைத்துள்ள குளிர்பானக் கடைகளில் மக்கள் கூட்டம் அலைமோதியதை பல இடங்களில் காண முடிந்தது.

இந்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை காலை முதல் வெயிலின் உக்கிரம் குறைந்து காணப்பட்ட நிலையில், மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் இரவில் மிதமான மழை பெய்தது. குடிநீர், விவசாயப் பணிகளை மேற்கொள்ள முடியாமல் அவதிப்பட்டு வந்த நிலையில், பெய்த மழை விவசாயிகளை மட்டுமன்றி பொதுமக்களையும் மகிழ்ச்சியடைய வைத்துள்ளது. தருமபுரி மாவட்டத்தில்

புதன்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு விவரம் (மி.மீட்டரில்):

தருமபுரி - 13, ஆட்சியரகம் - 14, அரூர் - 18, பாப்பிரெட்டிப்பட்டி - 8.10, பாலக்கோடு - 8.30, பென்னாகரம் - 4, ஒகேனக்கல் -6.20, மாரண்டஹள்ளி - 52, சராசரியாக - 15.66.

## மவுசு குறையாத நாட்டு மாடுகள்

**தருமபுரி,**

கலப்பின மாடுகளின் ஆதிக்கம் அதிகரித்தபோதிலும், பழைமை மாறாமல் பாரம்பரியமிக்க நாட்டு மாடுகளை தருமபுரி மாவட்ட கால்நடை விவசாயிகள் பட்டி போட்டு வளர்த்து வருகின்றனர்.

தருமபுரி மாவட்டம், விவசாயம், அதைச் சார்ந்த தொழில்களை மட்டுமே நம்பி உள்ள மாவட்டமாகும். இங்கு குறிப்பிடும் படியாக தொழில்சாலைகள் ஏதும் இல்லாததால், விவசாயத்தையே இந்த மாவட்ட மக்கள் தங்களது வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர். மேலும், வேளாண் தொழிலோடு கால்நடைகளை வளர்த்து அதன் மூலம் வருவாயை ஈட்டி வருகின்றனர்.

தருமபுரி மாவட்டத்தில் பெரிய அளவிலான பாசன வசதிகள் இல்லாததால் ஏரி, கிணற்றுப் பாசனத்தை நம்பியே இங்குள்ளவர்கள் விவசாயம் செய்து வருகின்றனர். இதனால், இந்த மாவட்டத்தில் பெரும்பாலான நிலங்கள் மேட்டு நிலங்களாக உள்ளன.

தங்களது பிரதான தொழிலான விவசாயத்துடன் கால்நடை வளர்ப்புத் தொழிலையும் சேர்த்தே செய்து வருகின்றனர்.

இங்குள்ள கால்நடை விவசாயிகள் சுமார் 25-ஆண்டுகளுக்கு முன்புவரை நாட்டு மாடுகளை மட்டுமே வளர்த்து வந்தனர். ஆனால், தற்போது சீமை மாடுகள் எனப்படும் கலப்பின மாடுகளின் ஆதிக்கம் பெருகி, அவற்றை அதிக அளவில் கால்நடை விவசாயிகள் வளர்த்து வருகின்றனர்.

எனினும், சில பகுதிகளில் பழைமை மாறாமல் நாட்டு மாடுகளை நூற்றுக்கணக்கில் வைத்து அதை பட்டிபோட்டு வைத்து வளர்த்து வருகின்றனர்.

இந்த மாடுகளை பெரும்பாலும் அறுவடைக் காலங்களில் பென்னாகரம், ஒகேனக்கல், அஞ்செட்டி ஆகிய வனப் பகுதிகளில் மேய்ச்சலுக்காக அதன் உரிமையாளர்கள் கொண்டு செல்வர்.

இதில், ஒவ்வொரு ஆண்டும் அறுவடை முடிந்த பின்னர் மே மாதங்களில் காலியாக உள்ள மேட்டு நிலங்களில் இந்த மாடுகளை பட்டிவைத்து மேய்த்து வருகின்றனர். தருமபுரியில் இன்றளவும் பழைமை மாறாமல், நல்லம்பள்ளி, நார்த்தம்பட்டி, நூலஅள்ளி, முக்கல்நாய்க்கன்பட்டி, கொமத்தம்பட்டி, சிவாடி, தண்டுகாரனஅள்ளி, பாகல்பட்டி உள்ளிட்ட இடங்களில் நூற்றுக்கணக்கான மாடுகள் வளர்த்து வருகின்றனர்.

அதிக அளவு பால் கறந்து தங்களுக்கு போதிய வருவாயை கலப்பின மாடுகள் பெற்றுத் தந்தாலும், சுவை, அதிக அடர்த்தி, நோய் எதிர்ப்பு சக்தி, மருத்துவ குணம் ஆகியவை நாட்டு மாடுகளின் பாலில் மட்டுமே கிடைப்பதால் அதை தாங்கள் பெருமையுடன் வளர்த்து வருவதாக கால்நடை விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து நார்த்தம்பட்டியைச் சேர்ந்த கால்நடை விவசாயி நஞ்சப்பன் கூறியது:

வறட்சி, தண்ணீர் பற்றாக்குறை, வனப் பகுதியில் மேய்ச்சலுக்கு அனுமதி மறுப்பது இவற்றையெல்லாம் கடந்து கலப்பின மாடுகளின் தாக்கம் மிகப் பெரிய அளவில் இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான நாட்டு மாடுகள் இருந்த இந்த மாவட்டத்தில் தற்போது சில ஆயிரம் எண்ணிக்கையில்தான் உள்ளன. எனினும், பாரம்பரிய மாறாத நாட்டு மாடுகளை வளர்ப்பது எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது என்றார் அவர்.

## <u>நாமக்கல் மாவட்டத்தில் பரவலாக மழை</u>

**நாமக்கல்,**

நாமக்கல் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் குளிர்ச்சி நிலவுகிறது. கத்திரி வெயில் தொடங்கியுள்ள நிலையில், நாமக்கல் மாவட்டத்தில் கடுமையான வெயில் வாட்டியது. தொடர்ந்து வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவிலும், 5 மணியளவிலும் பலத்த மழை பெய்தது. தவிர, இரவிலும் பலத்த மழை பெய்ததால், மாவட்டம் முழுவதும் சாலைகளில் ஆங்காங்கே மழை நீர் தேங்கியது.

இதன்படி, செவ்வாய்க்கிழமை காலை 6 மணி முதல் புதன்கிழமை காலை 6 மணி வரை இந்த மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது.

இதில், அதிகபட்சமாக பரமத்திவேலூரில் 69 மிமீ மழையும், குறைந்தபட்சமாக புதுச்சத்திரத்தில் 1.50 மிமீ மழையும் பதிவானது. நாமக்கல்லில் 40 மிமீ, ராசிபுரத்தில் 16.20 மிமீ, சேந்தமங்கலத்தில் 13.20 மிமீ, திருச்செங்கோட்டில் 7 மிமீ, எருமப்பட்டியில் 20 மிமீ, மங்களபுரத்தில் 21 மிமீ, குமாரபாளையத்தில் 10 மிமீ, மோகனூரில் 25 மிமீ மழையும் பெய்ததாக வருவாய்த் துறையின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்தொடர்ச்சியாக, புதன்கிழமை காலை முதலே நாமக்கல் மாவட்டத்தில் லேசான மழை பெய்தது. இதனால், நகர் பகுதிகளில் மக்கள் நடமாட்டம் சற்றே குறைந்திருந்தது. தொடர்ந்து மழை பெய்து வருவதால், கத்திரி வெயிலின் தாக்கம் குறைந்து குளிர்ச்சி நிலவுகிறது.

## பழக் கன்றுகள், சம்பங்கி விதை விற்பனை அறிவிப்பு

**நாமக்கல்,**

பழக் கன்றுகள், சம்பங்கி விதைக் கிழங்கு ரகங்கள் நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து அந்த நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல்லில் மோகனூர் சாலையில் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தற்போது பலா, மாதுளை, கொய்யா, சப்போட்டா, நெல்லி, ஆரஞ்சு, சாத்துக் கொடி, மா கன்றுகளான அல்போன்சா, பங்கனபள்ளி, இமாம்பசந்த், பெங்களூரா, சேலம் பெங்களூரா, நீலம் போன்ற ரகங்கள் நடவு செய்ய விற்பனைக்கு தயாராக உள்ளன.

தவிர, காய்கறி விதைகளான தக்காளி, புடலை, பாகல், பூசணி, பரங்கி, சிறுகீரை, தண்டுக்கீரை, செடிமுருங்கை, செடி அவரை விதைகள், சம்பங்கி விதை கிழங்குகள் ஆகியவையும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. நடவு செய்ய விருப்பமுள்ள

விவசாயிகள் வேளாண்மை அறிவியல் நிலையத்தை அணுகி பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு 04286 -266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு பெறலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பரவலாக பலத்த மழை

**கிருஷ்ணகிரி,**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை பரவலாக பலத்த மழை பெய்தது. அதிகபட்சமாக தேன்கனிக்கோட்டையில் 56 மிமீ. மழை பதிவானது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடும் வெயில் அடித்து வந்த நிலையில், கடந்த இரண்டு நாள்களாக தொடர்ந்து பரவலாக பலத்த மழை பெய்து வருகிறது.

இதனால் வெயிலின் தாக்கம் தணிந்து, குளுமையான பருவநிலை நிலவுகிறது.

புதன்கிழமை காலை 8 மணி நிலவரப்படி, மாவட்டத்தில் பதிவான மழை அளவு (மி.மீட்டர்):

தேன்கனிக்கோட்டை 56, ராயக்கோட்டை 55, ஊத்தங்கரை 47, அஞ்செட்டி 30, கிருஷ்ணகிரி 24.20, சூளகிரி 15, தளி 11, பெனுகொண்டாபுரம் 10.7, நெடுங்கல் 7.40, போச்சம்பள்ளி 7, பர்கூர் 5.8, ஒசூர் 5 என மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது.

அதிகபட்சமாக தேன்கனிக்கோட்டையில் 56 மிமீ. மழை பதிவானது.

தொடர் மழையால் மா விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## அரவக்குறிச்சியில் பலத்த மழை: 79.60 மி.மீ பதிவு

**கரூர்/அரவக்குறிச்சி,**

கரூர் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை மாலை முதல் புதன்கிழமை வரை விடிய,விடிய பரவலாக மழை பெய்தது. அரவக்குறிச்சியில் 79.60 மி.மீ. மழை பதிவானது. கரூர் மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக வடகிழக்கு மற்றும் தென்மேற்குப் பருவமழை பொய்த்ததால் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. நிலத்தடி

நீர்மட்டம் 800 அடிக்கும் கீழே சென்றுவிட்டது. இதனால், மாவட்டத்தில் விவசாயம் அடியோடு பாதிக்கப்பட்டுள்ளது.

பல இடங்களில் குடிநீர் கிடைக்காததால் பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் கத்தரி வெயில் என்னும் அக்னி நட்சத்திரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. கத்தரி வெயில் தொடங்கும் முன்பே, மார்ச் மாதம் முதலே கோடை வெயில் சுட்டெரிக்கத் தொடங்கியது. சாலைகள் அனைத்திலும் கானல்நீரே தென்பட்டது. இந்நிலையில், கத்தரி வெயில் தொடங்கியதும், வெப்பத்தின் தாக்கம் அதிகம் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாள் முதல் அவ்வப்போது மேகக்கூட்டங்கள் வெயிலின் தாக்கத்தை குறைத்தன. இந்த நிலையில், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வெப்பச் சலனம் காரணமாக தென்மேற்கு வங்கக்கடலில் கடந்த சில நாட்களுக்கு முன்பு காற்றழுத்த தாழ்வுநிலை உருவானது. இதன் காரணமாக தமிழகம் முழுவதும் ஆங்காங்கே கோடை மழை பெய்து வருகிறது.

கரூர் மாவட்டத்திலும் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி முதல் விடிய, விடிய மழை பெய்து வருவதால் ஆங்காங்கே வறண்டு கிடந்த நிலங்கள் மற்றும் தாழ்வான இடங்களில் தண்ணீர் தேங்கத் தொடங்கியுள்ளது. அரவக்குறிச்சியில் மட்டும் 79.60 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் நள்ளிரவு முதல் விடியற்காலை வரை பெய்த மழையின் அளவு (மி.மீட்டரில்): அரவக்குறிச்சி-79.60, க.பரமத்தி-24.40, குளித்தலை-14.20, மாயனூர்-21, கரூர்-30, அணைப்பாளையம்-35, பஞ்சபட்டி-23.20, பாலவிடுதி-40, கடவூர்-26.20, கிருஷ்ணராயபுரம்-26, மைலம்பட்டி 52.30.

அரவக்குறிச்சி

அரவக்குறிச்சி பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு முதல் புதன்கிழமை காலை வரை பலத்த மழை பெய்தது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இப்பகுதி விவசாயிகளின் முக்கிய பயிரான முருங்கை மரங்கள் சுமார் 50 சதவீதத்திற்கும் அதிகமாகக் காய்ந்துவிட்டன. தென்னை மரங்கள் சுமார் 60 சதவீதம் காய்ந்துவிட்டன. சில இடங்களில் குடிநீருக்கே பொதுமக்கள் சிரமப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த இரண்டு நாட்களாக வெப்பச்சலனம் காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதன்காரணமாக,

அரவக்குறிச்சி வட்டாரத்தில் செவ்வாய்க்கிழமை இரவு சுமார் 11 மணியளவில் மழை பெய்யத் தொடங்கியது. வேகமான காற்று இல்லாமல் விடிய விடிய மழை கொட்டியது. புதன்கிழமை பகல் முழுவதும் விட்டுவிட்டு மழை பெய்தது. இதனால், சாலைகள், தெருக்களில் நீண்ட காலத்திற்குப் பிறகு மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. அரவக்குறிச்சி பகுதியில் 79.6 மி.மீ மழை பெய்துள்ளது. இதனால், அரவக்குறிச்சி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து நாம் விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் செல்வராஜ் கூறியது:

மழை இல்லாமல் வறட்சியில் வாடிய நிலையில் தற்போது பெய்துள்ள இந்த மழை விவசாயிகளுக்கு பெரிய மகிழ்ச்சி அளித்துள்ளது. இப்பகுதியில் முருங்கை, தென்னை உள்ளிட்ட பயிர்கள் காய்ந்துவிட்டன. தண்ணீர், பசுந்தீவனம் இல்லாமல் விவசாயிகள் ஆடு, மாடுகளை விற்றுவிட்டனர். தற்போது பெய்துள்ள மழையை வைத்து இனி விவசாயிகள் புதிதாக விவசாயம் செய்வது போல தொடங்க வேண்டும். இந்த மழையின் பயனாக ஆடு, மாடு வைத்திருப்போருக்கு பசுந்தீவனம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

வறட்சியில் காய்ந்து போகும் நிலையில் உள்ள முருங்கை மரங்கள் மீண்டும் துளிர வாய்ப்பாக இருக்கும். காயாமல் எஞ்சியுள்ள தென்னை மரங்களுக்கு இந்த மழை கைகொடுக்கும். குறிப்பாக, அடுத்து வரக்கூடிய பருவத்திற்கு விளை நிலங்களை பக்குவப்படுத்த இது நல்ல தருணம்.

இதனால், கடலை, சூரியகாந்தி, சோளப்பயிர்கள் போன்றவை பயிரிட இந்த மழை விவசாயிகளுக்கு கைகொடுத்துள்ளது என்றார்.

## உணவு காளான் உற்பத்தி குறித்து ஒரு நாள் பயிற்சி

**நீடாமங்கலம்,**

நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் மே 13-ம் தேதி உணவு காளான் உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்த ஒரு நாள் பயிற்சி நடைபெறவுள்ளது. இதுகுறித்து நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் க. சோழன் புதன்கிழமை வெளிட்ட செய்திக்குறிப்பு: நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 13-ம் தேதி உணவு காளான் உற்பத்தி குறித்த ஒரு நாள் நிலையப் பயிற்சி நடைபெறவுள்ளது. பயிற்சியில் காளான் வகைகள், மருத்துவ

குணங்கள், உற்பத்தி முறைகள், மதிப்பூட்டப்பட்ட உணவு பொருள்கள் தயாரித்தல் மற்றும் விற்பனை வாய்ப்புகள் குறித்து செயல்விளக்கத்துடன் பயிற்சியளிக்கப்படவுள்ளது. பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் 04367-260666-261444 ஆகிய தொலைபேசி எண்ணிலோ அல்லது நேரிலோ தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்.

## வேளாண்மை பட்டதாரிகள் சங்க நிர்வாகிகள் கூட்டம்

**பெரம்பலூர்,**

பெரம்பலூரில், மாநில அளவிலான வேளாண்மை பட்டதாரிகள் சங்க நிர்வாகிகள் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்தில், சங்கத்தின் மாநிலத் தலைவர் ஸ்டேன்லி, மாநில இணைச் செயலாளர் அய்யம்பெருமாள், மாநிலப் பொருளாளர் விவேகானந்தன், வேளாண்மை விற்பனை துறை தவசுமுத்து, பெரம்பலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் அழகிரிசாமி, அரியலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் குணசேகரன் உள்ளிட்டோர் பேசினர்.

கூட்டத்தில், அரசு வழிமுறைகளின்படி தமிழ்நாட்டின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் உயர அனைவரும் பணியாற்றுவது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தொடர்ந்து, 2013-14-ம் ஆண்டில் உணவு உற்பத்தியில் 103 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு சாதனை புரிந்த, அனைத்து வேளாண்மை பட்டதாரி

களும் பாராட்டி கெüரவிக்கப்பட்டனர். பணி ஓய்வு பெற்றவர்களுக்கும், பெறுவோருக்கும் பொன்னாடை அணிவிக்கப்பட்டது.

சங்கத்தின் பெரம்பலூர், அரியலூர் மாவட்ட நிர்வாகிகள் பழனிசாமி, அசோகன், கீதா, தெய்வீகன், ரமேஷ், சாந்தி, விஜயலட்சுமி, ராமலிங்கம், சுகந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பெரம்பலூர் மாவட்டத் தலைவர் செந்தமிழ்ச்செல்வன் வரவேற்றார். அரியலூர் மாவட்டத் தலைவர் முரளிதரன் நன்றி கூறினார்.

## தழுதாழையில் 35 மி.மீ. மழை பதிவு

**பெரம்பலூர்,**

பெரம்பலூர் மாவட்டத்தில் சராசரியாக 28.4 மி.மீ. மழையும், தழுதாழையில் அதிகப்பட்சமாக 35 மி.மீ மழையும் பெய்துள்ளது.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வெப்பச் சலனம் காரணமாக தென்மேற்கு வங்கக்கடலில் கடந்த சில நாள்களுக்கு முன்பு காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. இதன் காரணமாக கடந்த 3 நாள்களாக பெரம்பலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில், 6-ம் தேதி மாலை 3.30 மணியளவில் லேசான மழை பெய்தது. மாலை 5.30 மணியளவில் தொடங்கிய மழை இரவு 10 மணி வரை பெய்தது. தொடர்ந்து, புதன்கிழமை அதிகாலை 5 மணி முதல் காலை 7 மணி வரை விட்டு,விட்டு பலத்த மழை பெய்து வருகிறது.

செவ்வாய்க்கிழமை இரவு 8 மணி முதல் புதன்கிழமை காலை 8 மணி வரை செட்டிக்குளத்தில் -28 மி.மீ., பெரம்பலூரில் -34 மி.மீ., வேப்பந்தட்டையில் -33 மி.மீ., தழுதாழையில் -35 மி.மீ., பாடாலூரில் 12 மி.மீ மழை பெய்துள்ளது.

## அதிக லாபம் தரும் வெண்பன்றி வளர்ப்பு

**நாகர்கோவில்,**

வெண்பன்றிப் பண்ணை அமைத்து நல்ல வருவாய் பெறலாம் என குருந்தன்கோடு கால்நடை உதவி மருத்துவர் ஆர். முருகேசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

கால்நடை பராமரிப்பை மூலத் தொழிலாகக் கொண்டு, பண்ணை பராமரிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வெண்பன்றி வளர்ப்பானது குறைந்த முதலீட்டில் அதிக லாபம் கிடைக்கும் தொழிலாகும். வெண்பன்றிப் பண்ணை அமைப்பதற்கு தேவையான கொட்டகை, தீவனம் ஆகியவற்றுக்கான முதலீடு மிகவும் குறைவு. பன்றி இறைச்சியில் உயர்தர புரதச்சத்து உள்ளது. இப்போதைய சூழ்நிலையில் ஆடு, கோழி இறைச்சியைவிட வெண்பன்றி இறைச்சி மலிவாகக் கிடைக்கிறது. வெண்பன்றி ஆண்டுக்கு இருமுறை குட்டிகளை ஈனும். குறுகிய காலத்தில் அதிக உடல் வளர்ச்சியை

அடையும் தன்மை கொண்டது. சமையலறைக் கழிவுகள் மற்றும் உணவகங்களில் கிடைக்கும் கழிவுகளைக் கொண்டே வெண்பன்றி வளர்க்கலாம்.

பன்றிப் பண்ணை அமைக்க ரூ. 50 ஆயிரம் முதலீடு போதுமானது. சந்தைப்படுத்துதல் மிகவும் எளிமையானது. புதிதாக கால்நடைப் பண்ணை பராமரிப்புத் தொழிலில் ஈடுபடுவோர் தங்கள் பகுதியில் உள்ள கால்நடை மருத்துவ நிலையங்களில் உள்ள மருத்துவர்களை தொடர்பு கொள்ளலாம் என அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்ரீவைகுண்டம் பகுதியில் தொடர் மழை: வாழை, பூ விவசாயிகள் மகிழ்ச்சி

**சாத்தான்குளம்,**

ஸ்ரீவைகுண்டம், செய்துங்கநல்லூர் பகுதியில் கோடையில் பெய்த திடீர் மழையால் வாழை, பூ விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஸ்ரீவைகுண்டம் அருகேயுள்ள செய்துங்கநல்லூர் பகுதியில் தாமிரவருணி பாசனப் பகுதியான மருதூர் மேலக்கால்வாய் உள்ளது. இந்தக் கால்வாயில் சுமார் 12 ஏக்கர் பாசன பரப்பு பாசன வசதி பெறுகிறது. இங்கு வாழை, வெள்ளரி, பூ பயிர்கள் பயிரிடப்பட்டு வருகிறது. இதில் தொடர்ந்து ஏற்பட்ட வறட்சி காரணமாக இந்த பயிர்கள் கருகின. இதனால் விவசாயிகள் மிகவும் கவலையடைந்தனர். நிலத்தடிநீர் மூலம் தண்ணீர் பாய்ச்ச முயற்சி செய்தனர். அதுவும் போதிய அளவுக்கு முடியவில்லை. எனவே என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தனர்.

இந்நிலையில் இப்பகுதியில் தொடர்ந்து மூன்று நாள்களாக நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வாழைப் பயிருக்கு தேவையான உரம் வைத்தல் பணிகளை தொடங்கியுள்ளனர். இங்கு பயிரிட்ட பூ பயிரான சம்பங்கி, பிச்சி, மல்லி, அரளி, ரோஜா போன்ற பூக்கள் தண்ணீர் இல்லாமல் மகசூல் குறைந்து இருந்தது. திடீர் மழை பெய்த காரணத்தினால் இதன் மகசூல் கூடும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

மேலும் விவசாயிகள் தூதுகுழி குளத்துக்குள் வெள்ளரி பயிர் செய்து வருகின்றனர். இவர்கள் தொடர்ந்து ஏற்பட்ட வறட்சியின் காரணமாக நோயால் தாக்கும் அபாயத்தில் இருந்தனர். இந்த மழையின் காரணமான நோய் தீரும் நிலைமை ஏற்பட்டது. மேலும் குறிப்பிட்ட காலத்துக்கு முன்பே வெள்ளரிக்காய் பிஞ்சு

விளையும் நிலையும் ஏற்பட்டுள்ளது. அதே நேரம் தூதுகுழி குளத்துக்குள் தண்ணீர் வந்தால் வெள்ளரிக்காய் பயிர் அழிந்து விடும் அபாயமும் உள்ளது.

இதுகுறித்து இந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயி சித்திரைபாண்டி கூறுகையில்: எங்கள் பகுதியில் கடந்த ஓராண்டாக சரியான மழை இல்லை. தற்போது மூன்று நாள்களாக பெய்யும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் என்றார் அவர்.

## கருப்பாநதி அணை நீர்மட்டம்: ஒரே நாளில் 16 அடி உயர்வு

**கடையநல்லூர்,**

கடையநல்லூர் கருப்பாநதி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை இரவு முழுவதும் பெய்த மழையால் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 16 அடி உயர்ந்துள்ளது.

செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 25.36 அடியாக இருந்த நீர்மட்டம், புதன்கிழமை 42 அடியாக உயர்ந்தது.

அணைக்கு 200 கன அடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து தண்ணீர் வெளியேற்றப்படவில்லை.

## மாவட்டத்தில் உளுந்தூர்பேட்டையில் அதிக மழையளவு பதிவு

**விழுப்புரம்,**

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் அதிக அளவாக 40 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மற்ற இடங்களில் பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்): செஞ்சி 8, திருக்கோவிலூர் 12.50, திண்டிவனம் 12, விழுப்புரம் 26, வானூர் 7, சங்கராபுரம் 12.50, கள்ளக்குறிச்சி 25, மரக்காணம் 10 என பதிவாகியுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் முழுவதும் 153 மி.மீ. மழையளவு பதிவாகியுள்ளது. சராசரி மழையளவு 17 மி.மீ. ஆகும்.

# தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரியாறு அணை



மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, மேற்கு நோக்கி பாய்ந்து வீணாக கடலில் கலக்கும் தண்ணீரை, அணை கட்டி தேக்கி, தமிழகத்திற்கு பயனளிக்கும் வகையில் செயல்படுத்த உருவான திட்டம்தான் முல்லைப்பெரியாறு அணை. இத்திட்டத்திற்காக, அன்றைய ஆங்கிலேய அரசின், சென்னை மாகாண செயலருக்கும், அன்றய திருவாங்கூர் சமஸ்தான மகாராஜாவிற்கும் இடையே 1886 அக்.,29 ல் 999 ஆண்டுகளுக்கு இந்த ஒப்பந்தம் எழுதப்பட்டது.ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, அணை கட்டுமானப் பணிகள் துவங்கியது. ஆங்கிலேயப் பொறியாளர் பென்னிகுவிக் வசம், அணை கட்டுமானப் பணிகளை ஒப்படைக்கப்பட்டது. 1887ல் முதற்கட்டப் பணிகளை துவக்கினார். அலுவலர்கள், கூலியாட்கள் தங்குவதற்கான குடியிருப்புகள் கட்டும் பணி முடித்து, அணை கட்டுவதற்கான இடம் தேர்வு செய்ய சர்வே செய்யப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட இடத்தில் அணை கட்டும் பணி பல்வேறு சிரமங்களுக்கு இடையே நடந்தது.1889ல் பலத்த மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில், அணை கட்டுமானப் பணிகள் பாதிக்கப்பட்டது. இருந்த போதிலும், பென்னிகுவிக் மனம் தளராமல், மீண்டும் அணை கட்டுமானப் பணிகளை துவக்கினார்.1894ல் அணை கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களுக்கு காலரா நோய் பரவி, பொறியாளர்கள் உட்பட 45

தொழிலாளர்கள் பலியானார்கள். இது போன்ற பல்வேறு சிரமங்களுக்கு இடையே பெரியாறு அணை கட்டி முடிக்கப்பட்டு, 1895 அக்.,10 மாலை 6 மணிக்கு திறக்கப்பட்டது. 152 அடி நீர் தேக்கும் அளவுள்ள பெரியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் மூலம், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள 2 லட்சத்து 17 ஆயிரம் ஏக்கரில் பாசன நிலங்கள் பயன் பெற்றது. குடிநீர் ஆதாரமும் இந்த அணை தான்.

## அணை ஒப்பந்த சரத்துக்கள்

அணையின் உயரம் 155 அடி இருக்க வேண்டும். 8000 ஏக்கர் பரப்பளவில் தண்ணீர் தேக்கிக் கொள்ள வேண்டும். 100 ஏக்கர் அணை பராமரிப்பு, கட்டுமானம், இன்னும் பிறதேவைக்காக பயன்படுத்தி கொள்ளலாம். மொத்த நீர்மட்டம் 152 அடி உயரத்திற்கு 15.5 டி.எம்.சி. தண்ணீர் தேக்கிக் கொள்ளலாம்.104 அடிக்கு மேல் தேக்கப்படும் தண்ணீரை தமிழகம் பயன்படுத்திக் கொள்ளலாம். அணையின் பராமரிப்பை தமிழகம் செய்து கொள்ள வேண்டும். 8100 ஏக்கரில் தேக்கப்படும் தண்ணீருக்காக தமிழக அரசு ஆண்டுதோறும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.5 வீதம் கேரளாவிற்கு குத்தகை தொகை கொடுக்க வேண்டும், என விரிவான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. குத்தகை தொகை ஏக்கர் 1க்கு ரூ.5 வீதம் 1896 முதல் 1970 வரை வழங்கப்பட்டு உள்ளது.

## அணை கட்டும் பணி

1887ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அணை கட்டும் பணி துவங்கப்பட்டது. 1893-ல் 60 அடி உயரமும், 1994-ல் 94 அடி உயரமாகவும், 1895 டிசம்பரில் 155 அடி உயரமாகவும் கட்டி முடிக்கப்பட்டது. கட்டுமான பணிக்காக சுமார் 80 ஆயிரம் டன் சுண்ணாம்புக்கல் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1985ல் சென்னை மாகாண கவர்னர் வெண்லாக் பிரபு திறந்து வைத்தார்.

## ஒப்பந்தம் புதுப்பிப்பு

1970 ஆம் ஆண்டு கேரள அரசின் பிடிவாதத்தால் குத்தகை ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது. 8100 ஏக்கர் நீர் பிடிப்பு பகுதிக்கு, ஆண்டு குத்தகை ஏக்கர் 1க்கு ரூ.5 என இருந்ததை ஏக்கர் 1க்கு ரூ.30 எனவும், அணையின் நீர் பிடிப்பு பகுதியில் மீன்பிடிப்பு உரிமை கேரளாவிற்கு எனவும்,999 ஆண்டுகளுக்கு

தமிழ்நாடு அரசு நீரை பயன்படுத்திக் கொள்ளலாம், எனவும் ஒப்பந்தம் திருத்தப்பட்டது.

## மின் உற்பத்தி

1955ம் ஆண்டு பெரியாற்று தண்ணீர் தமிழகத்தில் புகும் இடமான லோயர்கேம்ப் என்னுமிடத்தில் மின் உற்பத்தி செய்வதற்கு திட்டம் வகுக்கப்பட்டது. 1970ம் ஆண்டு தமிழக அரசு கேரள அரசுடன் செய்து கொண்ட புது ஒப்பந்தத்தின்படி மேற்கண்ட இடத்தில், தமிழக அரசு 140 மெகாவாட் மின் உற்பத்தி செய்து கொள்ளலாம். அதன்படி மின்உற்பத்தி நடக்கிறது.

## இடுக்கி அணை

முல்லைப்பெரியாறு அணையின் கீழ்பாசனத்தில், இடுக்கி என்னுமிடத்தில் 1966ஆம் ஆண்டு கேரள அரசு புதிய அணையை கட்ட ஆரம்பித்தது. 1976 ஆம் ஆண்டு 555 அடி உயரத்திற்கு சுமார் 36,000 சதுர ஏக்கர் நீர் பிடிப்பு பகுதியில் இடுக்கி அணை கட்டப்பட்டது.

இடுக்கி அணையின் மொத்த மொத்த கொள்ளளவு 72 டி.எம்.சி. ஆகவும், அதன் மூலம் 780 மெகாவாட் நீர் மின் உற்பத்தி திட்டமும் செயல்படுத்தப்பட்டு, முல்லைப்பெரியாறு அணைக்கு வரும் நீரை, பல வழிகளில் திருப்பி இடுக்கி அணைக்கு கொண்டு செல்கின்றனர்.

இடுக்கி அணையில் தேக்கப்படும் நீர், மின் உற்பத்திக்கு தவிர்த்து வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படவில்லை.

## பெரியாறு அணை பிரச்னை

1979ம் ஆண்டு கேரளாவில் வெளிவரும் நாளிதழ், முல்லைப்பெரியாறு அணை பலமிழந்து உள்ளது, அணையின் சுவற்றுக்குள் யானை போக முடியும், என்ற வதந்தியை பரப்பியதன் விளைவாக அணை பற்றி சர்ச்சை துவங்கியது. கேரள அரசு அணையின் உயரத்தை 136 அடியாக குறைத்தது.

தமிழ்நாடு அரசு சிறு சிறு கசிவுகளை சரி செய்ய பல்வேறு கட்டமாக நிதி ஒதுக்கீடு செய்து, தமிழ்நாடு பொதுப்பணித்துறை மூலம் அணை பலப்படுத்தப் பட்டது.

## உச்சநீதிமன்ற தீர்ப்பு

இரு மாநில அரசுகளும் உச்சநீதிமன்றத்திற்கு சென்றதன் அடிப்படையில், உச்சநீதிமன்றம் பல்வேறு கட்ட ஆய்வுக்கு பின், 2006 ஆம் ஆண்டு துவக்கத்தில், 'அணை பலப்படுத்தப்பட்டதற்கான வல்லுனர் குழு ஆய்வு அறிக்கையின் அடிப்படையில், அணை நீர் மட்டத்தை முதற் கட்டமாக 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்திடவும், பேபி அணையை பலப்படுத்திய பின் 152 அடியாக நீர்மட்டத்தை உயர்த்தலாம், என தீர்ப்பு வழங்கியது.உச்ச நீதிமன்ற தீர்ப்பை ஏற்க மறுத்து, 2006 மார்ச் மாதத்தில் அப்போதைய காங்கிரஸ் தலைமையிலான கேரள அரசு, சட்டசபையில் 'அணை பாதுகாப்பு சட்டம்' என்ற புதிய சட்டத்தை இயற்றியது. தற்போது புதிய அணை கட்ட வேண்டும் எனக் கூறி வருகிறது.

## விவசாய, பொருளாதார இழப்பு

1979ஆம் ஆண்டு முதல், அணை நீர்மட்டத்தை 136 அடியாக குறைந்தததால் தமிழகத்தில் விவசாய உற்பத்தி இழப்பு ஆண்டுக்கு சுமார் 50 கோடி என்ற அளவில் உள்ளது. இதுவரை 30 ஆண்டுகளில், 1500 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

## அணையா, தடுப்பு சுவரா

மேற்கு நோக்கி பாயும் பெரியாற்றின் மீது கட்டப்பட்டுள்ள அணை, தெற்கு பக்கம் பலமான மேற்கு தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது. அணையின் வடக்கு பக்கம் மேற்கு தொடர்ச்சி மலையின் இன்னொரு பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது. வடக்கு பக்கம் அமைந்துள்ள மலையின் கிழக்கு நோக்கிய நீளம் 2 கி.மீ.வடக்கு பக்க அணை இணைப்பு, மலையின் 500 மீட்டர் துாரத்தில் வடக்கு பக்கம் மதகு அமைக்கப்பட்டுள்ளது.

பொதுவாக அணையின் அடிப்பகுதி அல்லது அதை ஒட்டிய பகுதியில் இருந்து தான் மதகு அமைக்கப்படும். இவ்வணையின் சிறப்பு, மதகு பகுதி சுமார் 500 மீட்டர் வடக்கு பகுதியில் தனித்து அமைக்கப்பட்டுள்ளது.பலமாக இரு மலைகளின் இடையில் அமைக்கப்பட்டுள்ள அணையின் சுவற்றை ஆற்றின் மீது கட்டப்பட்ட தடுப்பு சுவராகத்தான் கருத முடியும்.அணையின் வடமேற்கே அமைந்துள்ள மதகு பகுதியானது, இயற்கையாகவே தரை மட்டம் 136 அடி உயரத்திற்கு அமைந்துள்ளது. 136 அடிக்கு மேல் தண்ணீர் தேக்கினால் மட்டும் அமைந்துள்ள மதகிற்கு வேலை வரும்.

பலமாக கட்டப்பட்டு, வலுவாக இருக்கும் அணை உடையாது. கேரள அரசின் கூற்றுப்படி ஒருவேளை அணை உடையுமானால், சுமார் 35 லட்சம் மக்கள் வெள்ளத்தில் அடிக்கப்பட்டு அரபிக் கடலில் மூழ்குவர் என்பது தவறானது.இந்த ஆறு பள்ளத்தாக்கில் ஓடுவதாகும். அணை உடைந்து அணையின் மொத்த நீரும் வெளியேறுமானால், இவ்வணையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இடுக்கி அணைக்குத்தான் மொத்த நீரும் சென்று சேரும். முல்லைப் பெரியாறு அணையின் மொத்த கொள்ளவு 15.5 டி.எம்சி., எனவே உடைந்தால் ஏற்படும் நீர், இடுக்கி அணை (கொள்ளளவு 72 டி.எம்.சி.,)யை தாண்டி செல்லாது. கேரள அரசின் பொய் பிரசாரங்களும்தமிழகத்தில் நடந்த போராட்டங்களும் பெரியாறு அணையில் நீர்த்தேக்குவது தொடர்பாக, 1979ம் ஆண்டு வரை எந்தப் பிரச்னையும் இல்லை. 1979ல் அணை பலமிழந்து விட்டதாக முதன் முதலில், கேரள தலைமை பொறியாளர் பரமேஸ்வரன் நாயர் புகார் கூறினார். அதன்பின் அது அரசியலாக்கப்பட்டு பிரச்னை பெரிதானது.

2000 ஜூன் 19ல் அணையை ஒட்டியுள்ள பகுதியில், தாழ்வாக சென்ற மின்கம்பியில் உரசி யானை பலியானது. அணைப்பகுதிக்கு செல்லும் மின்கம்பியால்தான், வனவிலங்குகள் பலியாவதாக பொய்ப் பிரசாரம் செய்து, அன்று முதல் அணைப்பகுதிக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. 2006ல் பெரியாறு அணையில் இருந்து 17 கி.மீ., தொலைவில் 2.1 ரிக்டர் அளவில் பூகம்பம் ஏற்பட்டதாக கேரளா கூறியது. இதனைத் தொடர்ந்து, பூகம்பத்தால் அணை இடிந்து விடும் என்ற பொய்ப்பிரசாரத்தை கேரளா துவக்கியது.அதன்பின், பெரியாறு அணை உடைவது போலவும், அதனால் கேரள பகுதிகள் அழிந்து லட்சக்கணக்கான மக்கள் பலியாவது போலவும், கிராபிக்ஸ் மூலம் 'சிடி' வெளியிட்டு கேரள மக்களிடையே பீதியை கிளப்பியது.பெரியாறு அணை நீர்மட்டம் உயரும் போது, அணை உடைந்து விடும் என்று, அணையை ஒட்டியுள்ள வல்லக்கடவு பகுதி மக்களை மேடான பகுதியில் குடியிருக்க செய்து, அவர்களிடத்தில் பயத்தை கேரள அரசு ஏற்படுத்தியது.கேரள அரசின் இதுபோன்ற பல்வேறு பொய்ப்பிரசாரங்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், தமிழகத்தில் பல்வேறு போராட்டங்கள் நடந்தன.கடந்த 2006ல் கேரள அரசு, பெரியாறு அணை தீர்ப்புக்கு எதிராக ஏற்படுத்திய சட்ட திருத்த மசோதாவை கண்டித்து, வைகோ

தலைமையில் மதுரையிலும், தேனியிலும் ஊர்வலம் நடந்தது. இதனைத் தொடர்ந்து கூடலூர் வரை நடைபயணம் நடந்தது.

2009ல் கேரளாவுக்கு பொருட்களை கொண்டு செல்லும் வாகனங்களை தடுத்து, கம்பத்தில் மறியல் நடந்தது.

2010ல் கேரளாவுக்கு செல்லும் 13 ரோடுகளில் பல்வேறு அமைப்புகள் சார்பில் மறியல் நடந்தது. இதனால், கேரளாவுக்கு வாகனப்போக்குவரத்து தடைபட்டது. 2011 டிசம்பரில் தமிழகத்தில் மிக தீவிர போராட்டம் நடந்தது, . டிச.,9ல் தேனி மாவட்டத்தில் பல இடங்களில் கிராம மக்கள் ஒன்று திரண்டு உண்ணாவிரத போராட்டத்தை துவக்கினர்.

டிச.,10ல் கூடலூர் பகுதி மக்கள் குமுளி மலைப்பாதையில் கேரளாவை நோக்கி முற்றுகையிட்டனர். இப்போராட்டத்தில் லட்சக்கணக்கான பொதுமக்கள் திரண்டனர். இதில் தடியடி, தீ வைப்பு உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் நடந்தன. துப்பாக்கி சூடும் நடந்தது. மேலும் 144 தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. இந்த தொடர் போராட்டத்தால், தமிழகத்தில் இருந்து கேரளாவிற்கு, உணவுப் பொருட்கள் செல்லவில்லை.இதனால் கேரளாவில் விலைஉயர்ந்தது. ஒரு மாதத்திற்கு பின் நிலைமை சீரடைந்தது. இச்சம்பவத்திற்குப் பின், கேரளாவில் பெரியாறு அணைப்பிரச்னை குறித்த போராட்டங்கள் தொய்வு அடைந்தன.

முல்லை பெரியாறு அணை வழக்கு: கடந்து வந்த பாதை

1979 ஆக.,: குஜராத் மாநிலத்தில் உள்ள மொர்பி அணை உடைந்து பல்லாயிரக்கணக்கானோர் பலியாகினர். தைஅதத்தொடர்ந்து, முல்லைப் பெரியாறு அணை அருகே, 6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டால், அணை உடையும் ஆபத்து உள்ளதாக கேரள புவியியல் ஆய்வு மையம் தகவல். 1979 அணையில் விரிசல் ஏற்பட்டு இருப்பதாக கூறிய கேரள அரசு, நீர்மட்டத்தை 152ல் இருந்து, 136 அடியாக குறைத்தது. அணையில் பராமரிப்பு பணிகள் முடிந்த பின், மீண்டும் உயர்த்திக் கொள்ளலாம் எனவும், கேரள அரசு கூறியது. இதற்கு தமிழகம் சம்மதித்தது. ஆனால், பராமரிப்பு பணி முடிந்தும் மீண்டும், நீர்மட்டத்தை உயர்த்த, கேரளா அனுமதிக்கவில்லை. இதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில், தமிழக அரசு வழக்கு. 136 அடியாக குறைத்ததால், மூழ்கும் நிலப்பரப்பு, 4,677 ஏக்கராக குறைந்தது. எனவே மூழ்காத மீதி நிலப்பரப்பில், கேளிக்கை விடுதிகளை கேரளா நிறுவியது. இருப்பினும் தமிழகம், 8,000 ஏக்கருக்கும் சேர்த்து வாடகை பணம் செலுத்தியது.

2006 பிப்., 26: இந்த வழக்கில், 142 அடியாக உயர்த்திக் கொள்ள சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு. மராமத்து பணிகள் முடிவடைந்த பின், 152 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் எனவும், சுப்ரீம் கோர்ட் தெரிவித்தது.

2006 மார்ச் 18: சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை நிராகரிக்கும் வகையில், அதை ஏற்க மறுத்த கேரள அரசு, கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிராக, முல்லை பெரியாறு அணை பாதுகாப்பு திருத்த சட்டம் ஒன்றை இயற்றியது. இதை எதிர்த்து, தமிழக அரசு மீண்டும் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு.

2007 டிச., 19: அணை விவகாரம் தொடர்பாக, தமிழக முதல்வரும், -கேரள முதல்வரும், மத்திய நீர்வளத்துறை அமைச்சர் முன்பு விவாதித்தனர்.

2010 பிப்., 18: அணையின் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிப்பதற்காக, சுப்ரீம் கோர்ட் முன்னாள் நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையில், ஐந்து பேர் கொண்ட குழு அமைத்தது.

2012 ஏப்., 25: பல்வேறு கட்ட ஆய்வுக்குப் பிறகு, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பானதாக உள்ளதாகவும், சமீபத்தில் ஏற்பட்ட நில அதிர்வுகளால் கூட அணைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் வல்லுனர் குழு அறிக்கை.

2013 ஆக., 13: இறுதி விசாரணை முடிவடைந்து, தீர்ப்பு ஒத்திவைப்பு.

2014 மே 7: **அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம்; கேரள அரசு தன்னிச்சையாக கொண்டு வந்த சட்டம் ரத்து செய்யப்படுகிறது; அணை பாதுகாப்பை உறுதி செய்ய மூன்று பேர் கொண்ட குழு அமைப்பு என சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு.**

## நெல்லையில் கனமழை - பாபநாசம் அணை நீர்மட்டம் : ஒரே நாளில் 10 அடி உயர்வு

**திருநெல்வேலி**: கன்னியாகுமரி அருகே வங்கக்கடலில், ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால், நெல்லை மாவட்டத்தில் தொடர்ந்து 3 நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், மாவட்டத்தில் உள்ள அனைத்து அணைகளின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பலத்த மழை பெய்தது. இதனால், பாபநாசம் அணைக்கு வினாடிக்கு 4 ஆயிரம் கன அடிவீதமும், சேர்வலாறு அணைக்கு 21 ஆயிரம் கனஅடி வீதமும் தண்ணீர் வந்தது.பாபநாசம்

கீழ் அணையில் 408 மி.மீ.,யும், மேல் அணையில் 300 மி.மீ.,யும் மழை பதிவானது. நேற்று முன்தினம் காலை பாபநாசம் அணை நீர்மட்டம் 32.50 அடியாக இருந்தது. மாலையில் 10 அடி உயர்ந்து, 42.80 அடியாக இருந்தது. நேற்றுமுன்தினம் 47.50 அடியாக இருந்த, சேர்வலாறு அணையின் நீர்மட்டம், நேற்று ஒரே நாளில் 32 அடி உயர்ந்து 79 அடியை எட்டியது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 64.30 அடி ஆனது. மற்ற அணைகளின் நீர்மட்டமும் உயர்ந்தது. குற்றாலத்தில் வெள்ளம் : குற்றாலத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 2:00 மணிக்கு, அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. சரளை கற்கள் வெள்ளநீரில் அடித்து வரப்பட்டது. பழைய குற்றாலத்தில் படிகள் வழியாகவும் தண்ணீர் வழிந்தது.

## மழை நீடிப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி

மதுரை: மதுரை உட்பட தென்மாவட்டங்களில், மழை சில நாட்களாக தொடர்ந்து பெய்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து, அடுத்த சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். பெரியாறு, வைகை நீர்பிடிப்பு பகுதிகளிலும் மழை பெய்வதால், அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்து வருகிறது.

மழையளவு (மி.மீ.,): பெரியாறு 41, தேக்கடி 68, கூடலூர் 33, உத்தமபாளையம் 64, வீரபாண்டி 40, வைகை 28, மஞ்சளாறு 18, மருதாநதி 34, சோத்துப்பாறை 36, பேரணை 18, ஆண்டிப்பட்டி 12, மதுரை 11, சாத்தையாறு 26, மேட்டுப்பட்டி 35, கள்ளந்திரி 32, சிட்டாம்பட்டி 25, மேலூர் 16, இடையபட்டி 12, விரகனூர் 14. பெரியாறு அணையின் நீர்மட்டம் 111.10 அடி. நீர்வரத்து வினாடிக்கு 1,535 கன அடி, வெளியேற்றம் 250 கன அடி. வைகை நீர்மட்டம் 21.06 அடி, நீர்வரத்து வினாடிக்கு 52 கனஅடி, வெளியேற்றம் 40 கன அடி.

## நெல்லை, குமரியில் அதிகபட்ச மழை

**சென்னை**: "குமரிக் கடல் பகுதியில் நிலவி வந்த, தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி, தெற்கு கேரளா பகுதியில் நிலை கொண்டுள்ளது. எனவே, தமிழகத்தின் உள்பகுதியில், அனேக இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன், தென்மேற்கு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை, தீவிர

காற்றழுத்த தாழ்வு பகுதியாக, குமரிக்கடல் பகுதியில், நிலை கொண்டிருந்தது. இதன் காரணமாக, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், கனமழை பெய்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி, காற்றழுத்த தாழ்வு பகுதி, கரையைக் கடந்து, தெற்கு கேரளாவில் நிலை கொண்டுள்ளது.

இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர், ரமணன் கூறியதாவது: தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதியின் காரணமாக, கடந்த, 24 மணி நேரத்தில், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பெரும்பாலான பகுதிகளில் கனமழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, நெல்லை மாவட்டம், பாபநாசத்தில், 30; மணிமுத்தாறில், 27 செ.மீ., மழை பதிவானது. அடுத்த, 24 மணிநேரத்தில், தமிழகத்தின் உள்மாவட்டங்களில், அனேக இடங்களில், மழை பொழிய வாய்ப்புள்ளது. சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. சனிக்கிழமை முதல், வெப்பநிலை அதிகரிக்கும். இவ்வாறு, அவர் கூறினார்.

## விவசாய படிப்புகளுக்கு எதிர்காலம் : வேளாண் பல்கலை துணைவேந்தர் தகவல்

**கோவை**: ""விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த படிப்புகளுக்கு, நல்ல எதிர்காலம் உள்ளது," என, தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர், ராமசாமி தெரிவித்தார். கோவை, தமிழ்நாடு வேளாண் பல்கலையில், வேளாண்மை, வேளாண்மை சார்ந்த இன்ஜினியரிங், பி.டெக்., தோட்டக்கலை உட்பட, பாடப்பிரிவுகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. பல்கலையில், பல்வேறு துறைகளில் மாணவர்கள் ஆராய்ச்சி மேற்கொண்டு, வேளாண்மை சார்ந்த, புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி வருகின்றனர்.

வேளாண் படிப்புகள் குறித்து, வேளாண் பல்கலை துணைவேந்தர், ராமசாமி கூறியதாவது: வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த படிப்புகளுக்கு, நல்ல எதிர்காலம் உள்ளது. இதை, மாணவர்கள் நன்றாக உணர்ந்து உள்ளனர். கிராமங்களில் வேளாண் வங்கி திட்டம், உணவு பாதுகாப்பு சட்டம் போன்ற, வேளாண்மை சார்ந்த பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதில், வேளாண் பட்டதாரிகளின் பங்களிப்பு, அதிகளவு தேவைப்படும் என்பதில் சந்தேகமில்லை. இத்துறைகளில், நாடு முழுவதும், அடுத்த ஐந்தாண்டுகளில், 25 ஆயிரம் பட்டதாரிகளுக்கு, வேலை வாய்ப்பு கிடைக்கும். உணவு சார்ந்த

பொருட்களின் தரக் கட்டுப்பாடு, தர நிர்ணயம், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், எதிர்காலத்தில் அதிக முக்கியத்து வம் பெறும். தமிழகத்தில், 48 விதை பண்ணைகள் உள்ளன. இவற்றில், வேளாண் பட்டதாரிகள் பங்களிப்புடன், விதை உற்பத்தி செய்யும் வாய்ப்புள்ளது. தமிழக வேளாண் பட்டதாரிகளை, நார்வே, பின்லாந்து நாட்டு நிறுவனங்கள் விரும்பி தேர்வு செய்கின்றன. நாடு முழுவதும், கடந்தாண்டை காட்டிலும், வேளாண் நுழைவு தேர்வுக்கு விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவ்வாறு, துணைவேந்தர் கூறினார். வேளாண் பல்கலையில், இளங்கலை, முதுகலை, ஆராய்ச்சி மாணவர்களுக்கு படிக்கும் காலத்திலேயே, ஆய்வகங்களில், ஊக்கத் தொகையுடன் வேலை தரப்படுகிறது. ஆராய்ச்சிகளில் வேளாண் சார்ந்த தொழில்நுட்பத்துக்கு, அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது.

முதலிடம் பெற்றால் ஊக்கத்தொகை : வேளாண் பல்கலையில், மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், "இன்ஸ்பயர்' என்ற திட்டம் உள்ளது. இதன்படி, பள்ளி அளவில் முதலிடம், கல்லூரிகளில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு, ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இந்தாண்டு, "அஸ்பயர்' என்ற பெயரில், மாதந்தோறும் ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில், மாணவர்களுக்கு, எட்டு முதல், 22 ஆயிரம் ரூபாய் வரை ஊக்கத்தொகை வழங்கப்படும்.

## சென்னை, தர்மபுரியில் மழை

**சென்னை**:சென்னை மற்றும் தமிழகம் முழுவதும் பரவலாக கனமழை பெய்து வருகிறது. சென்னை நுங்கம்பாக்கம், ஆழ்வார் பேட்டை, வியாசர்பாடி, திருவல்லிக்கேணி, வில்லிவாக்கம் , நங்கநல்லூர், திருநின்றவூர் மற்றும் தர்மபுரி பென்னாகரம் பாலக்கோடு , பாப்பாரப்பட்டி, ஆகிய இடங்களிலும் மழை பெய்துள்ளது.

## பெரியாறு அணையில் நீர்மட்டம் உயர்வு

**தேனி** : முல்லைபெரியாறு அணைப்பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் மூன்று அடி உயர்ந்துள்ளது.

அணையில் 111.04 அடியாக இருந்த நீரின் அளவு 3 அடி உயர்ந்து 114.04 அடியாக உயர்ந்துள்ளது.அணைக்கு வரும் நீரின் அளவு 1, 535 கன அடியிலிருந்து 6, 649 கன அடியாக உயர்ந்துள்ளது. அதே போல் தமிழகத்திற்கு திறந்து விடப்படும் நீரின் அளவு 250 கன அடியில இருந்து 500 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் அணைப்பகுதியில் 28 மி.மீ அளவிலும், தேக்கடியில் 51 மி.மீ அளவிலும் மழை அளவு பதிவாகியுள்ளது.

## சேலம் மாவட்டத்தில் 242 மி.மீ., மழை கொட்டி தீர்த்தது : சாலைகளில் பெருக்கெடுத்து ஓடிய வெள்ளம்

**சேலம்**: கோடை வெயில் கொளுத்தி வந்த நிலையில், குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால், வெயிலின் தாக்கம் குறைந்து, மழையின் வேகம் அதிகரிக்க துவங்கி உள்ளது. நேற்று முன்தினம், இடை விடாது பெய்த மழையால், சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சேலம் மாவட்டம் முழுவதும், 242.7 மி.மீ., மழை பதிவாகி உள்ளது.

கடந்த, மார்ச், 20ம் தேதி துவங்கிய கோடை வெயில், ஏப்.,30ம் தேதி வரை அதிகப்படியாவே காணப்பட்டது. லோக்சபா தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த வேட்பாளர்கள், வெயிலை பொருட்படுத்தாமல், வீதிகளில் அலைந்து ஓட்டு சேகரித்தனர். நாளுக்கு நாள் வெயிலின் அளவு அதிகரித்துக் கொண்டே சென்றதால், பொதுமக்கள் சிரமத்துக்குள்ளாகினர்.. வேலூர், திருச்சி, சேலம், நாமக்கல் உள்ளிட்ட இடங்களில், 40 டிகிரி செல்ஷியசை தாண்டி வெயில் கொளுத்தியது. அனல் காற்று வீசியதால், வீட்டை விட்டு வெளியில் செல்வதற்கே தயங்கினர். இதனிடையே, மே, 4ம் தேதி துவங்கிய, அக்னி நட்சத்திரத்தை கண்டு மிரட்சியடைந்தனர்.ஆனால், இயற்கைக்கு மாற்றாக, வெயிலின் வேகம் குறைந்து, மழையின் தாக்கம் அதிகமானது.

வங்கக்கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால், தமிழகம் முழுவதும், இரு நாட்களாக நல்ல மழை பெய்து வருகிறது. விடிய, விடிய மழை பெய்தபடியே இருந்தது. வெயிலில் காய்ந்த மக்களுக்கு, மழை பொழிவு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. சேலம் மாவட்டத்தில், ஆத்தூர், வாழப்பாடி, நங்கவள்ளி, ஜலகண்டாபுரம், இடைப்பாடி, ஏற்காடு, மேட்டூர் உள்ளிட்ட இடங்களில் மழை பெய்து கொண்டே இருந்தது. காலையில் விட்டு விட்டு

பெய்தபோதும், இரவு நேரத்தில் விடாமல் பெய்து கொண்டே இருந்தது. ஏற்காட்டில் குளுகுளு சீதோஷ்ண நிலை நிலவியது.

சேலம் மாநகரப் பகுதியில், கிச்சிப்பாளையம், அஸ்தம்பட்டி, அம்மாபேட்டை, மணியனூார், ஐந்து ரோடு, அரிசிபாளையம், குகை உள்ளிட்ட பகுதிகளில், சாலைகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான இடங்களில், மழை நீர் குட்டை போல் தேங்கி கிடந்தது. பெரும்பாலான மண் சாலைகள், சகதி காடாக மாறியிருந்தது. மழையால், சாலைகள் குண்டும், குழியுமாக மாறியிருந்தன. சாக்கடை கால்வாய்களில் அடைப்பு ஏற்பட்டதால், கழிவுகள் தெருக்களில் தேங்கியபடி கிடந்தன. தண்ணீர் செல்ல வழியில்லாததால், சாலைகளில் தேங்கியிருந்த நீரில் வாகனங்கள் மிதந்தபடி சென்றன. குடிநீர் பிரச்னையால் தவித்த மக்களுக்கு, தற்போது பெய்து வரும் மழை நிம்மதியை கொடுத்துள்ளது. சேலம் மாவட்டத்தில்,நேற்று காலை 8 மணியுடன் முடிந்த, 24 மணி நேரத்தில் பதிவான மழைப் பொழிவு விபரம்(மி.மீ.,): சேலம் - 34.4, ஏற்காடு - 30.2, வாழப்பாடி - 20.11, ஆத்தூர் - 21.4, தம்மம்பட்டி - 37.2, சங்ககிரி - 24.2, இடைப்பாடி - 29, ஓமலூர் - 17, மேட்டூர் - 29.2, மொத்தம் 242.7. சராசரி மழையளவு - 26.97.

## நீர்வழி திட்டத்திற்கு முன்னுரிமை கொடுப்போம்!



கடந்த இரு நாட்களாக, இந்தியாவின் நீர் பயன்பாடு மற்றும் தமிழக ஆறுகளை எவ்வாறு இணைக்கலாம் என்பது குறித்து பார்த்தோம்.இனி, தமிழகம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா ஆகிய நான்கு மாநிலங்களையும் உள்ளடக்கக் கூடிய தென்னக இணைப்பை, எப்படி உருவாக்குவது எனப் பார்ப்போம்.

இந்த மாநிலங்கள் அனைத்தும், கிருஷ்ணா, கோதாவரி, காவிரி, தாமிரபரணி, முல்லைப் பெரியாறு, வைகை, பாலாறு ஆகிய ஆறுகளையே, நீர்பாசனத்துக்கு பெரிதும் சார்ந்திருக்கின்றன. வெள்ளம் ஏற்படும்போது, இம்மாநிலங்களில், நீருக்கு பிரச்னை இருப்பதில்லை. 30, ஜனவரி 2013 அன்றைய மத்திய நீர் ஆணையத்தின் தரவுகளின்படி, தென்னிந்திய ஆறுகளின் மொத்த நீர் கொள்திறன், 15 ஆயிரத்து 300 கோடி கன அடி தான். அவற்றில், தற்போதுள்ள நீர் சேகரிப்பு இடங்கள் அனைத்தும் சேர்ந்து, 4,800 கோடி கன அடி நீரை மட்டுமே, தேக்கக் கூடிய வசதிகளைக் கொண்டிருக்கின்றன.

## மாநிலங்களின் நீர்த்தேக்க அளவு

ஆனால், வெள்ளப் பெருக்கின்போது, கோதாவரி, கிருஷ்ணா நதிகளில் மட்டும், 2,000 - -3,000 டி.எம்.சி., நீர் ஆந்திராவின் அணைகள், நீர்த் தேக்கங்கள், ஏரிகள் ஆகியவற்றை நிரப்பிய பிறகும், கடலில் சென்று கலக்கிறது. அதே நேரத்தில், தெலுங்கானாவில் பல பகுதிகளில், நீர்ப்பற்றாக்குறை நிலவுகிறது.வறட்சி பருவங்களில், தென் மாநிலங்கள் அனைத்துமே வறண்டு விடுகின்றன. இந்தப் பிரச்னை, மாநிலங்களில் அரசியல் மயமாகிறது. அரசுகளும், கட்சிகளும், கடுமையான நிலைப்பாடுகளை எடுத்து, மாநிலங்களுக்கிடையில் பதற்றத்தை உருவாக்குகின்றன. முன் முடிவுடன் இந்தப் பிரச்னையை அணுகினால், பேரம் பேசுவதற்கான சந்தர்ப்பம் அமையாமல் போய் விடும்.நீதிமன்ற வழக்குகள், தீர்ப்பாய முடிவுகள், கோரல்கள், எதிர்கோரல்கள் என, இந்தப் பிரச்னைகள் நீள்வதால், நீதிமன்ற உத்தரவுகளை மதிக்காமல் போகும் நிலை ஏற்படுகிறது. நீதிமன்ற உத்தரவை நிராகரிக்கும் முடிவுகள், சட்டமன்ற தீர்மானங்கள் மூலம் எடுக்கப்படுகின்றன.மோசமான நீர் மேலாண்மை காரணமாக ஏற்படும் இந்தநிலை, குழப்பத்துக்கு காரணமாகி, யாருக்கும் எந்த மாநிலத்துக்கும், நன்மை உருவாக்கக் கூடிய வாய்ப்பையும் கெடுக்கிறது. இறுதியாக, எல்லா மாநிலங்களிலும் உள்ள விவசாயிகளும், மக்களுமே பாதிக்கப்படுகின்றனர்.இந்த நிலையை தவிர்க்க, ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் தமிழக மாநிலங்களில் உருவாகும் வெள்ளப் பெருக்கை, அதி -திறன் நீர்வழிகளில் செலுத்தி, சேகரித்து, வறட்சி ஏற்படும் போதெல்லாம் பகிர்ந்து கொள்ளலாம். ஆந்திர பிரதேச அதி - திறன் நீர்வழிகளும், தமிழக அதி -திறன் நீர்வழிகளும் ஒரே மட்டத்தில் இணையக்

கூடியவையாகவும், தமிழக - -ஆந்திர எல்லையில், வேலுார் அருகே இணையக் கூடியதாகவும் இருக்கின்றன. கட்டுக்கடங்காத வெள்ளப் பெருக்கையும், இந்த இணைப்பு தவிர்க்கும். வெள்ள காலத்தில், 3,000 முதல் 4,000 டி.எம்.சி., நீரை, தென்னக நீர்வழி இணைப்பு பெற முடியும். இது, எல்லா பருவ காலங்களிலும், எல்லா மாநிலங்களுக்குமான தேவையைப் பூர்த்தி செய்யும்.

## ஆந்திரா

ஆந்திராவில், வெள்ளப் பெருக்கு காலத்தில், 2,500 டி.எம்.சி., நீரையும், வழக்கமான மழைக் காலத்தில், 750 டி.எம்.சி., நீரையும், கோதாவரி ஆறு கடலுக்கு அனுப்புகிறது. இந்த நீரைச் சேமிக்க, நீர்ப் பாசன வாய்க்கால்களும் ஏரி, குளங்கள் உள்ளிட்ட நீர்த்தேக்க நிலைகளையும் உருவாக்க வேண்டும். இதன் மூலம், கோதாவரி படுகையில், வேளாண் நிலங்களின் பரப்பு, 30 சதவீதம் அதிகரிக்கும்.மின் இணைப்பு போல, நீர் வழிகளிலும் இரண்டு திசைகளிலும், நீர் செல்லும். கோதாவரியிலிருந்து காவிரிக்கும், காவிரியிலிருந்து கோதாவரிக்கும், நீர் பரிமாற்றம் சாத்தியமாகும். அதே சமயத்தில், தற்போதுள்ள எந்த நீர்த் திட்டத்தையும் இது பாதிக்காது. எந்த இடத்திலும், 'பம்ப்பிங்' மூலம் நீரை ஏற்றுவது கிடையாது. இதை, பொதுத்துறை- - தனியார் துறை கூட்டு முயற்சியாக செய்தால், அரசு செலவிடத் தேவையில்லை. 5 முதல் 7 ஆண்டுகளில், இந்தத் திட்டத்தை முடித்து விடலாம். இந்தத் திட்டத்தால், 10 கோடி பேருக்கு, தடையற்ற நீர் வழங்கல் சாத்தியமாகும். இது, ஆந்திராவில், 3.1 கோடி பேருக்கு வேலை வாய்ப்பையும் வழங்கும். அந்த மாநிலத்தில், 1.75 கோடி ஏக்கர் நிலம், கூடுதலாக நீர்ப்பாசன வசதி பெறும்.

இதன் மூலம் ஆண்டுக்கு, 5,000 மெகாவாட் மின்சாரம், சுற்றுச்சூழல் மாசுபாடு இன்றி கிடைப்பதுடன், நிலத்தடி நீர் மேலேற்றம் காரணமாக, 2,850 மெகாவாட் மின்சாரம் மிச்சமும் ஆகும்.எனவே, மொத்தமாக, 7,290 மெகாவாட் நீர் மின்சக்தி நமக்கு கிடைக்கிறது. கூடுதல் மீன் வளர்ப்பு, சுற்றுலா, நீர் விளையாட்டு வசதிகளும் கிடைக்கின்றன.ஆந்திராவையும் தமிழகத்தையும் இணைத்து பார்க்கையில், 2,000 கி.மீ., நீள, நீர் வழி அமைகிறது. எனவே, இந்த நீர் வழி, இரு மாநிலங்களுக்கும், சம அளவில் ஆதாயமாகும். குடிநீர், மின்சாரம், நீர்ப்பாசனம், போக்குவரத்து என, எல்லாவற்றுக்கும், இரு மாநிலங்களுக்கும், இந்தத் திட்டம் பயனளிக்கும்.

## கேரளா, கர்நாடகா

இந்த முறையிலேயே, கேரளாவும், கர்நாடகமும், அதி -திறன் நீர்வழிகளை உருவாக்கலாம். புதுவை உட்பட, தென்னகம் முழுவதிலும், 4,000 டி.எம்.சி., நீரை, இவ்விதமாக பகிர்ந்து கொள்ளலாம். எல்லா மாநிலங்களிலும், நீர்த் தேக்கங்களில் நீர் நிரம்பியிருக்க, இரண்டு போகம் விவசாயம் செய்ய முடியும்.

## எல்லா மாநிலங்களுக்கும் வெற்றியே

பேராசிரியர் ஏ.சி.காமராஜும் அவரது அணியினரும், இத்திட்டம் பற்றி, எல்லா மாநில அரசுகளுக்கும் எடுத்துரைத்திருக்கின்றனர். தங்களுடைய நலன் பாதிக்கப்படாமல், அதே சமயம் தங்களுக்கு ஆதாயம் கிடைக்கிறது என்பதாலும், தங்களுடைய இருப்பு நீரை இழக்காமல், கடலில் வீணாக கலக்கும் வெள்ள நீரையே கூடுதலாக பெறப் போகின்றனர் என்பதாலும், இம்மாநிலங்கள், இதில் ஆர்வம் காட்டின.

## சாத்தியமுள்ள தீர்வு: தேசிய அதிதிறன் நீர்வழிகள் கிரிடு

இந்த நீர் இணைப்பு, 15 ஆயிரம் கி.மீ., நீள, தேசிய நீர்த் தேக்க அமைப்பாக மாறும். 60 கோடி பேருக்கு, குடிநீரை வழங்கும்; 15 கோடி ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசனத்தை வழங்கும்; 60 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும். நிலத்தடி நீர் மட்டத்தை, 'ரீசார்ஜ்' செய்வதால், 4,000 மெகாவாட் மின்சாரத்தை மிச்சப்படுத்தவும் முடியும்.சாலைப் போக்குவரத்துடன் ஒப்பிடுகையில், 10 முதல் 20 சதவீத அளவே செலவாகும், நீர்வழிப் போக்குவரத்து, இதன் மூலம் சாத்தியமாகி, அனைத்து மாநில அளவில், ஓராண்டுக்கு, 1.5 லட்சம் கோடி எண்ணெய் உற்பத்தி குறையும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற, ஒவ்வொரு மாநிலமும், 6 - 7 ஆண்டுகளுக்கு, ஒட்டுமொத்தமாக, 50 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும்.ஏற்கனவே, சொன்னது போல், BOOT முறையில் இதை அமல்படுத்தினால், பத்தாண்டுகளுக்குள் இதை முடித்து விடலாம்.

மத்தியில், தீர்க்க தரிசனம் மிக்க தலைமை இருந்ததால், தங்க நாற்கரம் என்ற மிகப் பெரிய, நல்ல திட்டம் எப்படி சாத்தியமாயிற்றோ, அந்த வகையில், இதுவும் சாத்தியமாகும். அதற்கான லட்சிய நோக்கம், நமக்கு வேண்டும்.

## அதிதிறன் நீர்வழி திட்டம் பொருளாதாரத்தைப் பெருக்கும்

கடந்த, 2010, செப்டம்பரில், நாங்கள் கனடா நாட்டிற்கு சென்றிருந்தபோது, இரு நாடுகளின் பிரதான செய்திறன்களின் அடிப்படையில், குறைந்த பட்சம், இரண்டு மாநிலங்களிலாவது (தமிழகம், பீகார்) பொதுத் துறை- - தனியார் துறை நிதி முதலீட்டுடன், இத்திட்டத்தை அமல்படுத்துவது குறித்து விவாதித்தோம். கனடா அரசும், அதன் தொழிற்துறையும், தம் ஆர்வத்தை வெளிப்படுத்தின.இந்த பயணத்துக்கு பின், இதற்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில், மத்திய - மாநில அரசுகளின் நிபுணர் குழு ஒன்று அமைக்கும்படி, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதினேன். இத்திட்டம் தொடர்பாக, இதன் பிரதான கர்த்தாவான, ஏ.சி.காமராஜுடன் இணைந்து, கனடாவிலிருந்து வந்த பிரதிநிதிகள் குழு ஒன்று, சம்பந்தப்பட்ட மாநிலங்களின் செயலர்களையும் அதிகாரிகளையும், மத்திய அரசையும் சந்தித்தன.மேலும், கனடா - இந்தியா பவுண்டேஷனும், இது பற்றி விவாதித்து வந்தது. அவர்கள் என்னிடம் வைத்த வேண்டுகோளுக்கு இணங்க, பொன்ராஜும் கூடுதல் விவாதத்துக்காக நியமிக்கப்பட்டார். தமிழக அரசுக்கும் உள்நாட்டு நீர்வழிகள் ஆணையத்துக்கும், இத்திட்டம் பற்றி ஏற்கனவே தகவல் தெரிவித்திருந்தோம். தங்கள் மாநிலங்களில், இத்திட்டம் குறித்த சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொள்ளுமாறு பீகார், ஆந்திரா, தமிழகம், கர்நாடகா, கேரளா ஆகியவற்றுக்கும் வலியுறுத்தியிருந்தோம்.மத்திய அரசு, உள்நாட்டு நீர்வழி ஆணையம் ஆகியவை, தேசிய அதி- திறன் நீர்வழிச் சாலை இணைப்பை உருவாக்க தேவையான ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும். இந்த திட்டமானது, இந்திய தொழில்துறை, கல்வித்துறை ஆகியவற்றுக்கு வலுசேர்க்கும். அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், மேலாண்மையியல், மனிதவியல் துறைகளில் பயிலும் லட்சக்கணக்கான மாணவர்களுக்கு, நல்ல மதிப்புடனான வேலையை உருவாக்கும். பல்வேறு நாடுகளுடன் இந்தியா, இதன் மூலம் மேற்கொள்ளும் உறவு, இரு தரப்பினருக்குமே பலன் தரும்.

## பொருளாதாரத்தை வலுப்படுத்தும் தேசிய அதிதிறன் நீர்வழிகள்

நம் விவசாயிகள், இப்போது, 25 கோடி டன் உணவை உற்பத்தி செய்கின்றனர். ஆனால் அவற்றை சேமிக்க, வினியோகிக்க, பெரிய வசதிகள் இல்லை. வேளாண்மைக்கான நீர்ப்பாசன வசதிகளும், பின் தங்கியவையாகவே இருக்கின்றன. எனவே வேளாண்- உணவுப் பதன கூட்டுத் திட்டத்தை உருவாக்கி,

சம்பந்தப்பட்ட, தொழில்துறை, சேவைத்துறை இணைப்புகளை ஏற்படுத்தி, விவசாயத்தை இந்தியாவின் பிரதான செய்திறன் கொண்ட துறையாக உருவாக்க வேண்டும்.உணவுப் பாதுகாப்பு பிரச்னையும், பொருளாதார நெருக்கடிகளும், கடந்த சில ஆண்டுகளாக நிலை பெறு வேளாண்மைக்கான, உடனடி அத்தியாவசியத் தேவையை வலியுறுத்தியிருப்பதாக, உலக பொருளாதார அமைப்பு அறிக்கை ஒன்று கூறுகிறது. உலகிலுள்ள, 600 கோடி மக்களில், 100 கோடி மக்கள், தேவையான உணவும், ஊட்டச்சத்துமின்றி உழல்கின்றனர்.வரும் 2050ல், உலக மக்கள் தொகை, 900 கோடியாக இருக்கும். வேளாண் பொருட்களுக்கானத் தேவை, இரு மடங்காக ஆகும். ஆனால், வேளாண் துறையோ, நீர் பற்றாக்குறை, காலநிலை மாற்றம், உற்பத்தி வீழ்ச்சி ஆகிய பெரும் பிரச்னைகளுக்குள் சிக்கியிருக்கும்.இந்தியா தன் பிரதான செய்திறன் சார்ந்து, உலகின் வேளாண் மையமாக உருவாவது மிக அவசியம். இதற்குத் தீர்வு, இந்திய தேசிய அதி- திறன் நீர்வழி இணைப்பு திட்டமே!

## முடிவுரை

நம் நாட்டில், மகத்தான இயற்கைச் செல்வங்களும் பேரளவுக்கான நீர் ஆதாரங்களும், எல்லையற்ற சூரிய வெளிச்சமும் கிடைக்கின்றன. இவற்றை, நாம், ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவதில்லை. எனவே, பாதுகாப்பான குடிநீருக்காகவும் நிலக்கரிக்காகவும், பெட்ரோலிய பொருட்களுக்காகவும், இரும்பு தாதுக்காகவும், சூரிய ஒளி பேனல்களுக்காகவும், நாம் அன்னிய நாடுகளைச் சார்ந்திருக்கிறோம்.நாம் நம் இயற்கை வளங்களான, கிரானைட்களையும் கனிமங்களையும் ஏற்றுமதி செய்து, அவற்றுக்கு வெளிநாட்டில் வைத்து மதிப்பு கூட்டி, பின் இந்தியாவுக்கு இறக்குமதி செய்து கொள்கிறோம். அந்த மதிப்புக் கூட்டுப் பணியை, இந்தியாவிலேயே செய்வதற்காக, இந்திய தொழில் துறைக்கு, நாம் ஊக்கமளிப்பதில்லை. அதற்கான முன்முயற்சி சார்ந்த, உள்ளடக்குகிற கொள்கைகள் நம்மிடமில்லை.

பிரிட்டிஷ்காரர்கள், இந்தியாவை ஆக்கிரமித்தபோது, என்ன நடந்ததோ, அதுவே இப்போதும் நடக்கிறது.வளர்ச்சிக்கு தேவையான உள்ளடங்கு கொள்கைகளை முன்முனைந்து அமல்படுத்தாமல், இந்திய நிறுவனங்களுக்கு, சம மட்டத்திலான செயல்திறனை உறுதிப்படுத்தாமல், நாம் இந்தியாவின் உற்பத்தி சார்ந்த முக்கிய துறைகளை, பாதுகாப்பற்ற நிலையில் வைத்தபடியே, அத்துறைகளை

தாராளமயமாக்கி விட்டோம்.எனவே, உலகளாவியப் போட்டிக்கு முன்னால், புதிய தொழில்நுட்பங்கள் இல்லாத, நிதி ஆதார பலம் இல்லாத, திறன் தொழிலாளர்கள் இல்லாத, நம் உள்நாட்டு நிறுவனங்கள், முதலில் வீழ்ச்சி அடைந்தன; பின், இழுத்து மூடப்பட்டு விட்டன.நம் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி, பிரதான செய்திறன் துறைகளை, நாம் உள்ளடங்கு கொள்கைகளோடு மேம்படுத்தியிருந்தால், உலகப் போட்டியை சமாளிக்கும் திறனை, நம் தொழில் துறையினருக்கு அளித்திருக்க முடியும். நிலைபெறு நீர், மின்சாரம், உள்கட்டமைப்பு, வேளாண்மை இல்லையேல், நிலைபெறு செல்வமும் செழிப்பும் இல்லை. எனவே, முதலில் நீர் மீது கவனம் குவிப்போம்.'நாம், நிலைபெறு வளர்ச்சிக்காகவே நிற்கிறோம்; எனவே இதை முதலில் நடைமுறைப்படுத்துவோம்' என, மக்களிடம் நாம் உறுதி கொடுக்க வேண்டும். தனி மனிதர்களை விட, நாடு முக்கியம் என்பதை சூளுரையாக ஏற்க, தேசத்தின், மாநிலங்களின், புதுமை நாடும் தலைவர்களை வலியுறுத்துவோம். தேசிய மற்றும் மாநில அளவிலான அதி- திறன் நீர்வழித் திட்டத்தை அமல்படுத்த, முன்னுரிமை கொடுக்கச் சொல்வோம். தேசிய அதி- திறன் நீர்வழி இணைப்புத் திட்டத்தின் வளர்ச்சியே, நாட்டின் நிலைபெறு வளர்ச்சிக்கு நம்மை அழைத்துச் செல்லும்!

**டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம்**

**(apj@abdulkalam.com)**

**வெ.பொன்ராஜ்**

**(vponraj@gmail.com)**

## கோடை மழை: உழவு பணி துவக்கம்

கோடை மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நெல் விதைப்புக்கு இப்போதே, வயலில் உழவு பணியை விவசாயிகள் துவக்கியுள்ளனர். புயல் சின்னம் : நிலத்தடி நீர் மட்டம் குறைவு; பருவ மழை பொய்ப்பு; ஏரிகளில் தண்ணீர் வறட்சி உள்ளிட்ட, பல்வேறு காரணங்களால், காஞ்சிபுரம் மாவட்டத்தில், விவசாயிகள் கோடையில் நெல் பயிரிடுவதற்கு தயக்கம் காட்டி வந்தனர்.இந்த நிலையில், கடந்த 4ம் தேதி அக்னி நட்சத்திரம் துவங்கியது. இந்த வெயில் மக்களை வாட்டி வதைக்கும் என, எதிர்பார்க்கப்பட்டது. அதற்கு மாறாக, வங்கக்கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, அக்னி நட்சத்திரம்

துவங்கிய நாளிலிருந்து, நேற்று வரையில் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவலாக லேசான மழை பெய்து வருகிறது.

வெப்பம் தணிந்தது : காஞ்சிபுரத்தில் கடந்த மூன்று நாட்களாக மேக மூட்டத்துடன் கண்ணாமூச்சி காட்டி வந்த மழை, நேற்று முன்தினம் இரவு முதல் கருணையாக பொழிந்தது. நேற்று காலை 9:00 மணிக்கு லேசான துாறலுடன் ஆரம்பித்த மழை, சிறிது நேரத்தில் கன மழையாக மாறி கொட்டியது. 25 நிமிடங்கள் மட்டுமே மழை பெய்தாலும், பேருந்து நிலையம், மேட்டுத் தெரு, விளக்கடிகோவில் தெரு, காமராஜர் சாலை ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகளில் மழைநீர் ஆறாக ஓடியது.மழைநீர் வடிவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த, வழித்தடங்களில் அடைப்பு ஏற்பட்டிருந்ததால், மழைநீர் செல்ல முடியாமல் சாலையில் தேங்கி நின்றது. வாகனங்கள் மழைநீரில் நீந்தி சென்றதால், கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால், அலுவலக பணிக்கு சென்றவர்கள் சரியான நேரத்திற்கு பணிக்கு செல்ல முடியாமல் பாதிக்கப்பட்டனர். பல மாதங்களாக வாட்டி வதைத்த வெப்பம் தணிந்தது. இந்த மழையால் மக்களும் விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சொர்ணவாரி உழவு : மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், புரிசை, களியனுார், கிதிரிப்பேட்டை, புத்தாகரம், ஈஞ்சம்பாக்கம், விஷகண்டிக்குப்பம், புள்ளலுார் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில், கிணற்று நீர் பாசனம் வசதி பெறும் விவசாயிகள் தங்கள் நிலங்களை உழவுப்பணியை மேற்கொண்டு வருகின்றனர்.இதுகுறித்து, விஷகண்டிகுப்பத்தை சேர்ந்த விவசாயிகள் கூறுகையில், 'அக்னி வெயிலுக்கு பின்னரே, சொர்ணவாரி பருவத்தில், நெல்லை நடவு செய்வது வழக்கம். தற்போது, அக்னி வெயிலில் மிதமான மழை பெய்து வருவதால், உழவு பணிகளை உடனடியாக துவக்கியுள்ளோம்' என்றனர்.

நேற்று காலையுடன் முடிவடைந்த கடந்த, 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் பதிவான மழை அளவு (மி.மீட்டரில்):

செங்கல்பட்டு................ 1.00

மாமல்லபுரம்................. 3.20

தாம்பரம்....................... 4.00

மதுராந்தகம்.................. 5.75

கேளம்பாக்கம்................ 5.80

திருக்கழுக்குன்றம்......... 6.70

## ரூ.85 லட்சம் மதிப்பீட்டில் நான்கு ஏரிகள் சீரமைப்பு

**திருத்தணி** : பொதுப்பணி துறையின் கீழ் உள்ள, நான்கு ஏரிகள், 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சீரமைக்கும் பணிகள், துரிதமாக நடந்து வருகின்றன. திருத்தணி பொதுப்பணி துறை கட்டுப்பாட்டில், மொத்தம், 79 ஏரிகள் உள்ளன.இதில், பெரும்பாலான ஏரிகளின், நீர்வரத்து கால்வாய்கள், துார்வாரப்படாமல் அடைப்பு ஏற்பட்டும், ஏரி கரைகள் பலவீனம் அடைந்தும், மதகுகள் உடைத்தும் உள்ளன.இதனால், மழை காலத்தில் ஏரிகளில் நீர் சேகரமாகாமல், வீணாகும் வாய்ப்பு இருந்தது.இதையடுத்து, பொதுப்பணி துறையினர், ஏரிகளின் கரைகளை பலப்படுத்தவும், மதகுகள், கலக்கல் (மிகை நீர் போக்கி) மற்றும் நீர்வரத்து கால்வாய்களை சீரமைக்க முடிவு செய்தனர்.இதற்காக, மரபு சார்ந்த ஏரிகள் புனரமைப்பு திட்டம், 2012-13ம் ஆண்டின் கீழ், திருத்தணி, திருவாலங்காடு ஒன்றியங்களில் உள்ள, நான்கு ஏரிகள், 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சீரமைக்கும் பணிகளில், பொதுப்பணி துறையினர் ஈடுபட்டு உள்ளனர்.இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத பொதுப்பணி துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "திருத்தணி ஒன்றியம் வேலஞ்சேரி, அலுமேலுமங்காபுரம், நாபளூர் மற்றும் பூனிமாங்காடு ஆகிய நான்கு ஏரிகள், 85 லட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டு வருகின்றன. "இந்த பணிகள் மூன்று மாதத்திற்குள் முடிக்கப்படும். மேலும், நீர்வரத்து கால்வாய்களில் உள்ள செடி, கொடிகளும் அகற்றி சுத்தப்படுத்தப்படும்," என்றார்.

ஏரி பரப்பளவு நீர்பாசனம் தொகை (ஏக்கர்) (ஏக்கர்) (லட்சத்தில்)
வேலஞ்சேரி 101.27 370.38 35

ஏ.எம்.புரம் 148.02 121.91 12

நாபளூர் 74.01 133.40 13

பூனிமாங்காடு 167.96 437.04 25

## மானாவாரி பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி

**கண்டாச்சிபுரம்**: கண்டாச்சிபுரம் பகுதியில் பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். கண்டாச்சிபுரம் மற்றும் சுற்றியுள்ள பகுதியில் பெய்த திடீர் மழையால், மானா வாரி நிலத்தில் மணிலா, எள் போன்ற பயிர்களிட்ட விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி தெரிவித்தனர். கிணற்றுப் பாசன விவசாயிகள் தண்ணீர் வற்றியதால் கவலையடைந்தனர். தற்போது பெய்த மழை குறைந்த பட்சம் 15 நாட்களுக்கு நிலத்தை ஈரப்பதத்துடன் வைத்திருக்கும் என்பதால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## மாவட்டத்தில் பரவலாக மழை உளுந்தூர்பேட்டையில் அதிகம்

**விழுப்புரம்**: விழுப்புரம் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. உளுந்தூர்பேட்டையில் அதிகபட்சமாக 40 மி.மீ., மழை அளவு பதிவானது. விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கோடை மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை முதல் நேற்று காலை வரை பெய்த மழை அளவு வருமாறு: செஞ்சியில் 8 மி.மீ., மழை, திருக்கோவிலூரில் 12.50 மி.மீ., திண்டிவனத்தில் 12, விழுப்புரத்தில் 26, வானூர் 7, சங்கராபுரம் 12.50, கள்ளக்குறிச்சி 25, மரக்காணம் 10 மி.மீ., மற்றும் அதிகபட்சமாக உளுந்தூர்பேட்டையில் 40 மி.மீ., மழை அளவும் பதிவானது. மாவட்டம் முழுவதும் 153 மி.மீ., மழையும், சராசரியாக 17 மி.மீ., மழை அளவும் நேற்று முன்தினம் பதிவானது.

## கரும்பு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

**விழுப்புரம்**: விழுப்புரம் மாவட்டத்தில் கரும்பு சாகுபடியில், விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர். தமிழகத்தில் கரும்பு சாகுபடியில் முதலிடம் பெறும் மாவட்டமாக விழுப்புரம் உள்ளது. இந்த மாவட்டத்தில் விளைவிக்கப்படும் கரும்பு,

20க்கும் மேற்பட்ட சர்க்கரை ஆலைகளுக்கு சப்ளை செய்யப்படுகின்றன. இடையில் கட்டிங் ஆர்டர் கிடைப்பதில் தாமதம் மற்றும் ஆட்கள் பற்றாக்குறை போன்ற காரணத்தால், கரும்பு சாகுபடியில் சுணக்கம் ஏற் பட்டது. இந்நிலையில் களை எடுப்பதற்கும், கரும்பு அறுவடைக்கும் இயந்திரங்கள் பயன்படுத்துவதால், செலவு குறைந்து விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தின் பல பகுதிகளிலும் விவசாயிகள், கரும்பு சாகுபடியில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இதனால் நெல் போன்ற தானியப் பயிர்களின் சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது.

## விக்கிரவாண்டியில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

**விக்கிரவாண்டி**: விக்கிரவாண்டி ஒன்றியத்தில் பரவலாக பெய்து வரும் கோடை மழையால் பொது மக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். விக்கிரவாண்டி ஒன்றியத்தில் கோடை வெயிலால் பொது மக்கள் அவதியடைந்தனர். அக்னி நட்சத்திரம் துவங்கியதில் இருந்து வானம் மேக மூட்டத்துடன் வெயிலின் தாக்கத்தை குறைத்த நிலையில் கடந்த இரண்டு நாட்களாக ஒன்றியத்தில் பரவலாக மழை பெய்கிறது. இதனால் பூமி சற்று குளிர்ந்த நிலையில் உ<ள்ளதால் இதமான காற்று வீசுகிறது. தற்போது நிலவி வரும் மின் பற்றாக்குறையை போக்க கோடை மழை பெய்வதால் பயிர்களுக்கு ஒரு வாரத்திற்குண்டான அளவிற்கு தண்ணீர் பாசனம் பெற் றுள்ளது. இதனால் இப்பகுதியிலுள்ள பொது மக்கள் , விவசாயிகள் மகிழ்ச்சியில் ள்ளனர்.

## கரும்பு பயிரை காப்பாற்றிய மழை

**செஞ்சி**: செஞ்சி பகுதியில் அடைமழை காலத்தில் பொழியாத மழை அக்னி நட்சத்திர நாளில் பெய்து காய்ந்து வந்த கரும்பு பயிர்களை காப்பாற்றி உள்ளது.

ஐப்பசியில் அடை மழை என்பதை பொய்யாக்கி கடந்த இரண்டு ஆண்டுகளாக செஞ்சி பகுதியில் மழை இல்லாமல் போனது. ஏரி, குளங்களில் தண்ணீரின்றி, கிணறுகளும் வற்றின. இந்த ஆண்டு சாகுபடி பாதியாக குறைந்தது. பயிரிடப்பட்ட நெல், கரும்பு பயிர்களில் 20 சதவீதம் வரை காய்ந்து போயின. அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் கரும்பு பயிர்களும் அடுத்த சில

நாட்களில் காய்ந்து விடும் நிலை உருவானது. வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியால் நேற்று முன் தினம் இரவு துவங்கி நேற்று காலை வரை செஞ்சி பகுதியில் மழை பெய்தது. காய்ந்து வந்த கரும்பு பயிர்கள் தற்போது பெய்த மழையால் தப்பின. இந்த மழை செஞ்சியில் 7.5 மி.மீ., பதிவானது. அக்னி நட்சத்திர வெப்பத்தின் தாக்கம் துவங்கிய நிலையில், இதில் இருந்து தப்பிக்கும் வகையில் பெய்த மழை சாதாரண மக்களையும் நிம்மதியடைய செய்துள்ளது.

## மரக்காணம் பகுதியில் கனகாம்பரம் சாகுபடி

**மரக்காணம்**: மரக்காணம் ஒன்றியத்தில் விவசாயிகள் பலர் நீண்ட நாட்கள் பலன் தரக்கூடிய பூச்செடிகளை பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மரக்காணம் ஒன்றியம் நடுக்குப்பம், ஆத்திக்குப்பம், குறும்பரம், அனுமந்தை, செய்யாங்குப்பம் ஆகிய கிராமங்களில் கனகாம்பரம் பூச்செடி வளர்ப்பில் ஈடுபடுகின்றனர். பத்து நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. நாற்றுகள் வேளாண்துறை பண்ணைகளிலும், தோட்டக்கலை பண்ணைகளிலும், தனியார் பண்ணைகளிலும் கிடைக்கிறது . 25 சென்ட் நிலத்தில் 1500 செடிகளை பயிரிட முடியும். நடுவதற்கு முன்பு நிலத்தை நன்கு உழுது தண்ணீர் பாய்ச்ச கால்வாய் அமைத்து போதிய இடைவெளி விடவேண்டும். தொழு உரம் ரசாயன உரம் கலந்து தேவையான அளவில் இடவேண்டும். நீர் பற்றாக்குறை இருந்தால் சொட்டுநீர் பாசன முறையை பின்பற்றியும் பயிர் செய்ய முடியும். மல்லி, முல்லை பூக்களை தினமும் பறிக்க வேண்டும். ஆட்கள் கிடைக்காத நாட்களில் பூக்கள் வீணாகும். இந்த பிரச்னை கனகாம்பரத்தில் இல்லை. ஆட்கள் வரவில்லை என்றாலும் மறுநாள் பறித்து கொள்ளலாம்.

## மூங்கில்துறைப்பட்டில் சாரல் மழை

**மூங்கில்துறைப்பட்டு**: மூங்கில்துறைப்பட்டு பகுதியில் பெய்த மழையால் விவசாயிகள், மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். மூங்கில்துறைப்பட்டு பகுதியில் கடும் வெயிலால் பொது மக்கள் வெளியில் செல்வதற்கு தயங்கினர். நேற்று முன் தினம் மாலை நேரத்தில் மழை பெய்தது. இரவு முழுக்க சாரல் மழையும் பெய்தது. மூங்கில் துறைப்பட்டு, சவரியர்பாளையம், மேல்சிறுவளூர், வடகீரனூர், வடபொன்பரப்பி,

பிரம்மகுண்டம், பவுஞ்சிப்பட்டு, பொரசப்பட்டு, புதுப்பட்டு பகுதிகளில் மழை பெய்ததால் அப்பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## 20 ஆயிரம் ஏக்கர் கரும்பு தப்பியது

**தியாகதுருகம்**: கள்ளக்குறிச்சி பகுதியில் பெய்த மழை காரணமாக தண்ணீரின்றி கருகிய நிலையில் இருந்த 20 ஆயிரம் ஏக்கர் கரும்பு பயிர்கள் தப்பியது.கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், சின்னசேலம், தியாகதுருகம், கச்சிராயபாளையம், ரிஷிவந்தியம் ஆகிய பகுதியில் 1.30 லட்சம் ஏக்கர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆண்டு பயிரான இதற்கு தொடர்ந்து தண்ணீர் தேவைப்படுவதால் கோடை காலங்களில் சிக்கல் ஏற்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக பருவ மழை பொய்த்ததால் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. இதனால் கிணற்று நீர் பாசனம் பாதித்து கரும்புக்கு போதிய தண்ணீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் திண்டாடி வருகின்றனர். கடந்த ஆண்டு கோடையில் ஏற்பட்ட வறட்சி காரணமாக 25 ஆயிரம் ஏக்கர் கரும்பு பயிர்கள் தண்ணீரின்றி கருகின. இது விவசாயிகளுக்கு கடும் நஷ்டத்தை ஏற்படுத்தியது. சில விவசாயிகள் வேறு பயிருக்கு மாறி விட்டனர். தொடர் வறட்சி காரணமாக கடந்த பிப்.,மாதம் முதல் வறட்சி அதிகரித்ததால் கரும்பு விவசாயிகள் தவித்தனர். இந்நிலையில் திடீரென ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையில் அக்னி நட்சத்திரம் துவங்கிய நாளில் இருந்து மழை பெய்து வருகிறது.நேற்று முன்தினம் இரவு விடிய விடிய கள்ளக்குறிச்சி பகுதியில் மழை கொட்டியது. இதனால் வாடிய நிலையில் இருந்த கரும்பு பயிர்கள் புத்துணர்ச்சி பெற்றன. மழை பெய்யும் என்று வானிலை மையம் நம்பிக்கை தெரிவித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். எள், வேர் கடலை, கேழ்வரகு, மக்காச்சோளம் பயிரிட்டவர்களும் நிம்மதியடைந்துள்ளனர்.

## மக்காசோளம் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் தவிப்பு

**சின்னசேலம்**: சின்னசேலம் அருகே ராயர்பாளையத்தில் மழை பெய்ததால் மக்காசோளம் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.

சின்னசேலம் அருகே ராயர்பாளையத்தைச் சேர்ந்த விவசாயிகள் கிணற்று நீரை பயன்படுத்தி 500க்கும் மேற்பட்ட ஏக்கரில் மக்காசோளம் பயிரிட்டனர். மூன்று மாத பயிரான மக்காசோளத்தை கடந்த பிப்ரவரி மாதம் பயிரிட்டனர். கடும் வறட்சியிலும் மிகவும் சிரமப்பட்டு மக்காசோளத்தை காப்பாற்றினர். சில தினங்களாக பெய்த மழையினால் மக்காசோளத்தை அறுவடை செய்ய விவசாயிகள் முடியாமல் தவித்தனர். காற்று வீசியதால் மக்காசோள பயிர்கள் கீழே சாய்ந்துள்ளது. அப்பகுதி விவசாயிகள் மக்கா சோளத்தை உலரவைப்பதற்கு மட்டும் சில நாட்கள் தேவைப்படும். மற்றபடி மக்காசோளத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது . சின்னசேலம் பகுதிக ளில் பெய்த லேசான மழையி னால் மக்காசோளம் பயிர் களை அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்தனர்.

### கி.கிரியில் பரவலான மழை: மா விவசாயிகள் மகிழ்ச்சி

**கிருஷ்ணகிரி**: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நேற்று முன்தினம் இரவு பரவலாக மழை பெய்துள்ளதால், மா விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த ஃபிப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் போதிய மழை பெய்யாததால், கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால், மேட்டுப்பாங்கான நிலங்களில் விவசாயம் பாதிக்கப்பட்டது. குறிப்பாக, மானாவாரி நிலங்களில் இருந்த மா மரங்களில், வறட்சியால் மாங்காய் வெதும்பி கீழே விழுந்தது. இதனால், மழை பெய்தால் மட்டுமே, மரங்களில் உள்ள மாங்காய் பெருக்கம் அடையும் என்ற நிலையில் மா விவசாயிகள் மழையை எதிர்பார்த்து இருந்தனர்.

இந்நிலையில், வங்க கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, தமிழகத்தில் ஆங்காங்கே கனமழை பெய்து வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், கடந்த மூன்று நாட்களாக மாலை மற்றும் இரவு நேரங்களில், மழை பெய்து வருகிறது.

நேற்று முன்தினம் இரவு, மாவட்டத்தில், பல இடங்களில் பரவலாக இடியுடன் கூடிய கன மழை பெய்து. நேற்று காலை, நிலவரப்படி மாவட்டத்தில் அதிகபட்சமாக தேன்கனிக்கோட்டையில், 56 மி.மீட்டர் மழை பதிவானது. இதனையடுத்து, மாவட்டத்தில் ராயக்கோட்டை, 55, ஊத்தங்கரை, 47, அஞ்செட்டி, 30, கிருஷ்ணகிரி, 24.20, சூளகிரி, 15, தளி, 11, பெனுகொண்டாபுரம், 10.20, நெடுங்கல், 7.40, போச்சம்பள்ளி, 7, பாரூர் மற்றும் ஓசூரில், 5 மி.மீட்டர் மழை

பதிவானது. இதன்படி, மொத்தம் மாவட்டத்தில், 273.60 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. சராசரி மழையளவு, 22.80 ஆகும்.

இந்நிலையில், மாவட்டத்தில் பரவலாக மழை பெய்துள்ளதால், ஒரு சில இடங்களில், மா தோப்புகளில் தண்ணீர் தேங்கி ஈரப்பதம் அதிகரித்துள்ளது. ஈரப்பதம் அதிகரித்துள்ளதாலும், இனி வரும் நாட்களிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாலும், மழையை எதிர்பார்த்திருந்த மா விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தொகரப்பள்ளியை சேர்ந்த மா விவசாயி சரவணன் கூறியதாவது:

தொகரப்பள்ளி பகுதியில் அதிக பரப்பில் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வழக்கமாக, ஏப்ரல் மாதத்தில், மழை பெய்யும் போது, ஈரப்பதம் அதிகரித்து, மாங்காய்கள் பெருக்கும். இந்த ஆண்டு, ஏப்ரல் மாதத்தில், மழை பெய்யவில்லை. இதனால், மா பிஞ்சுகள் வெதும்பி கீழே விழுந்தது. இதனை, வந்த விலைக்கு விற்பனை செய்தோம்.

கடந்த இரண்டு நாட்களாக, இரவு நேரங்களில் மழை பெய்து மாந்தோப்புகளில் தண்ணீர் தேங்கி ஈரப்பதம் அதிகரித்து உள்ளதால், மத்திய பருவ ரகமான பெங்களூரா, தோத்தாபுரி, ஆகிய மாங்காய்கள் வெதும்பி உதிராமல் பெருக்கம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இனி வரும் நாட்களில் சூறாவளி காற்று வீசாமல் மழை பெய்ய வேண்டும் என்று மா விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர், என்றனர்.

## முத்தூரில் அதிகபட்சமாக 56 மி.மீ., மழை பதிவு

**ஈரோடு**: ஈரோடு மாவட்டம் முழுவதும், நேற்று பரவலாக மழை பெய்தது. முத்தூரில் அதிகபட்சமாக, 56 மி.மீ., மழை பதிவாகி இருந்தது. தமிழகத்தில் காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக, மாநிலம் முழுவதுமாக பரவலாக மழை பெய்து வருகிறது. ஈரோடு மாவட்டத்தில், நேற்று முன்தினம் மாலை, நான்கு மணிக்கு துவங்கிய மழை, அவ்வப்போது கனமழையாக பெய்தது. நேற்று காலை நிலவரப்படி, ஈரோட்டில், 20 மி.மீ., ஒரத்துப்பாளையம்,12, அரச்சலூர், 12, சத்தியமங்கலம், 12, கொடிவேரி,12, மொடக்குறிச்சி,18, எலந்தக்குட்டைமேடு,18, கோபி,16, கவுந்தப்பாடி, 30, பவானி,15.4, பவானிசாகர், 9.2, பெருந்துறை,10, ஓலப்பாளையம்,11, சென்னிமலை,19, புங்கம்பாடி,20, காங்கேயம்,20, சிவகிரி,28, வெள்ளோடு, 35.2, மங்களப்பட்டி,52, அதிகபட்சமாக முத்தூரில், 56 மி.மீட்டர் என,

மொத்தம், 425.8 மி.மீ., மழை பதிவானது. நீண்ட நாட்களுக்கு பின், கோடையில், அக்னி நட்சத்திரத்தில், மழை பெய்ததால், விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## ஊட்டியில் 10ல் ரோஜா கண்காட்சி துவக்கம்; 4 ஆயிரம் வகை மலர்களின் வர்ணஜாலம்

**ஊட்டி** : ஊட்டி ரோஜா பூங்காவில், இரண்டு நாள் ரோஜா கண்காட்சி, வரும் 10ல் துவங்க உள்ளது.

ஊட்டி விஜயநகரம் பகுதியில் அமைந்துள்ள ரோஜா பூங்கா, கடந்த 2006ல், ஜப்பானில் நடந்த, சர்வதேச ரோஜா கருத்தரங்கில், 'கார்டன் ஆப் த எக்ஸலன்சி' என்ற உயரிய விருதை பெற்றது.நீலகிரி மாவட்டத்தில் நடந்து வரும் கோடை விழாவின் தொடர்ச்சியாக, தோட்டக்கலை துறை சார்பில், ஊட்டி ரோஜா பூங்காவில், வரும் 10, 11 ஆகிய தேதிகளில், ரோஜா கண்காட்சி நடத்தப்பட உள்ளது.

மொத்தம் 10 ஏக்கர் பரப்பளவிலான பூங்காவில், 4,000 வகை ரோஜா செடிகளில், மலர்கள் மலர்ந்துள்ளன. ரோஜா மலர்கள் மற்றும் இதழ்களால் பல வகை அலங்காரங்கள் அமைக்கப்பட உள்ளன.இம்முறை, முதன் முறையாக, பூங்காவின் முகப்பில், ரோஜா மலர்களால், அலங்கார வளைவு அமைக்கப்பட உள்ளது. பூங்கா முகப்பில், 15 ஆயிரம் பல வண்ண ரோஜா மலர்களை கொண்டு, 18 அடி நீளம், 6 அடி அகலம் கொண்ட, வீணை வடிவிலான அலங்காரம் அமைக்கப்பட உள்ளது.தவிர, தோட்டக்கலை துறை சார்பில், பல வண்ண ரோஜா மலர்களால் அலங்கரிக்கப்பட்ட காட்சி அரங்குகள் அமைக்கப்பட உள்ளன.சிறந்த ரோஜா தோட்டம், பூந்தொட்டிகளில் வளர்க்கப்படும் ரோஜா மலர் செடிகள், ரோஜா ரகங்கள் சேகரிப்பு, கொய்மலர் ரோஜா வகைகள், வணிக ரீதியாக பயிர் செய்யப்படும், ரோஜா ரகங்கள், தனியார் மற்றும் அரசு நிறுவன பூங்காக்களில் இருந்து கொண்டு வரப்பட்ட ரோஜா மலர் அலங்காரங்கள், ரோஜா இதழ்களில் தயாரான பொருட்கள் என, பலவகை பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசு கோப்பைகள் வழங்கப்பட உள்ளன. ரோஜா கண்காட்சி நடத்தப்படும் இரு நாட்களும், இன்னிசை கச்சேரி நடத்தப்பட உள்ளன.

கட்டண விபரம்: ஊட்டி பஸ் ஸ்டாண்டில் இருந்து 3 கி.மீ., தொலைவில் உள்ள ரோஜா பூங்காவுக்கு, ஊட்டி சேரிங்கிராஸ், -ஏ.டி.சி., சாலை மார்க்கமாக செல்ல வேண்டும். அரசு போக்கு வரத்து கழகம் சார்பில் 'சர்கியூட்' பஸ்கள் இயக்கப்படுகின்றன. பூங்காவில் நுழைவு கட்டணமாக பெரியவர்களுக்கு 30 ரூபாய், சிறியவர்களுக்கு 15, கேமராவுக்கு 50, வீடியோ கேமராவுக்கு 100 ரூபாய் வசூலிக்கப்படுகிறது.

## நீலகிரியில் ஒரே இரவில் 333 மி.மீ., மழை பதிவு

**ஊட்டி** : நீலகிரி மாவட்டத்தில், இரவு முழுக்க பெய்த மழையில், 333 மி.மீ., மழை பதிவானது. புயல் பாதுகாப்பு மையங்கள், தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்தில், நேற்று முன்தினம் துவங்கி, இரவு முழுக்க பரவலாக மழை பெய்தது. அதிகபட்சம் கோத்தகிரியில் 64 மி.மீ., கேத்தியில் 52, கோடநாடில் 26.40, குன்னூரில் 25.80, ஊட்டியில் 25 மி.மீட்டர் என, மாவட்டம் முழுக்க 333.20 மி.மீட்டர் மழை பெய்தது. மழையால், குன்னூர் சிம்ஸ்பூங்கா சாலை, கோடநாடு சாலையில் மரம் விழுந்து, சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது; பெரியளவிலான சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.மழையால், காலநிலையிலும் மாற்றம் ஏற்பட்டது. ஊட்டியில் 23 டிகிரியாக இருந்த அதிகபட்ச வெப்பநிலை 19 டிகிரி செல்சியசாகவும், குறைந்தபட்ச வெப்ப நிலை 9 டிகிரி செல்சியசாகவும் இருந்தது.மழை தொடரும் பட்சத்தில், மண் சரிவு, நிலச்சரிவு பாதிப்புகள் ஏற்படும் அபாயம் உள்ளதால், மாவட்ட நிர்வாகம் உஷார் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது. ஊட்டியில் புயல் பாதுகாப்பு மையம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.மாவட்ட கலெக்டர் சங்கரிடம் கேட்ட போது, "மழை தொடரும் பட்சத்தில், மாவட்டத்தில் உள்ள, புயல் நிவாரண கூடங்கள், பாதுகாப்பு மையங்கள் திறக்கப்பட்டு, முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்," என்றார்.

## மழை தொடர்வதால் தேயிலை வரத்து அதிகரிக்க வாய்ப்பு

**கோத்தகிரி** : கோத்தகிரி, மஞ்சூர் பகுதிகளில் கொட்டித்தீர்த்த மழையால் சிறு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கோத்தகிரி மற்றும் சுற்றுவட்டாரப்

பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு, இடியுடன் துவங்கிய கனமழை, விடியவிடிய கொட்டித் தீர்த்தது.நேற்று அதிகாலை முதல், வானம் மேகமூட்டத்துடன், அவ்வப்போது மழைப் பெய்தது. மழையின் காரணமாக, கோடநாடு உட்பட சில இடங்களில் மரங்கள் விழுந்ததால், அரை மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. கடந்த பல நாட்களாக வெயிலின் உக்கிரத்தில் தவித்திருந்த மக்கள், நிம்மதியடைந்துள்ளனர். குறிப்பாக, தேயிலை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

* மஞ்சூர் சுற்றுப்புற பகுதிகளில் வறட்சியின் பிடியில் சிக்கி இருந்த தேயிலை தோட்டங்களில் தற்போது, பசுந்தேயிலை துளிர் விட துவங்கி உள்ளது. இதனால், வரும் நாட்களில் தேயிலை வரத்து அதிகரித்து, தொழிற்சாலைகளில் கொள்முதல் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனினும், நீர் தேக்கங்களில் போதிய அளவில் நீர் மட்டம் உயராக காரணத்தால், மக்களுக்கான குடிநீர் பிரச்னையில் தொடர்ந்து தட்டுப்பாடு நிலவுகிறது.

## அரவக்குறிச்சியில் அதிகபட்ச மழை மகிழ்ச்சியில் மக்கள், விவசாயிகள்

**கரூர்**: கரூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல், நேற்று காலை வரை பரவ லாக மழை பெய்தது. அரவக்குறிச்சியில் அதிகப்பட்சமாக,79.4 மி.மீ., மழை பெய்துள்ளது. கரூர் மாவட்டத்தில் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை ஆண்டு சராசரியாக, 652.20 மி.மீட்டர் பெய்ய வேண்டும். கடந்தாண்டு வடகிழக்கு பருவமழை மற்றும் தென்மேற்கு பருவ மழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. வழக்கமாக மே மாத இறுதி அல்லது ஜூன் மாதம் தொடக்கத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கும். ஆனால், கரூர் மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் மாததத்தில் எதிர்பார்த்த மழை பெய்யவில்லை. மே மாதம் துவங்கிய பிறகும், பலமான காற்று மட்டுமே வீசி வந்தது. ஆனால், மழை பெய்ய வில்லை. ஏற்கனவே, மேட்டூர் அணையில், குறைந்தளவே நீர் இருப்பதால், எதிர்பார்த்த அளவில் தண்ணீர் திறக்கப்படவில்லை. குடிநீருக்காக மட்டும் தண்ணீர் திறக்கப்பட்டு ள்ளது. இதனால், கரூர் மாவட்ட காவிரியாற்றில் போதுமான தண்ணீர் இல்லாமல் பெரும் பலான பகுதிகள் பாலைவனம் போல் காட்சியளிக்கிறது. அமராவதி ஆற்றின் நிலையும் அது தான். போதிய மழை இல்லாததால் வரும் ஆடிப்பட்டத்தில் மானாவாரி பயிர்களின் சாகு படியும் கேள்வி குறியானது. வங்க கடலில் உருவான

காற்றழுத்த தாழ்வு நிலை காரமாக தமிழகம் முழுவதும் கடந்த இரண்டு நாட்களாக மழை பெய்து வருகிறது. ஆனால், கரூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பலமான சூறாவளி காற்று மட்டுமே வீசியநிலையில், நேற்று முன்தினம் இரவு, 10.30 மணி முதல் நேற்று அதிகாலை, 6.30 மணி வரை பரவலாக மழை பெய்தது. மழையளவு விவரம் (மி.மீ.,) க.பரமத்தி 24.4, குளித்தலை 14.2, கரூர் 30, மாய னூர் 21, அணைப்பாளையம் 35, பஞ்சப்பட்டி 23.2, பாலவிடுதி 40, கடவூர் 26.2, கிருஷ்ண ராயபுரம் 20, மைலம்பட்டி 53.3 ஆகிய அளவுகளில் மழை பதிவாகியுள்ளது. கரூர் மாவட்ட த்தில் மொத்த மழையளவாக 371.90 மி.மீ., மழையும், சராசரியாக 30.99 மி.மீ., மழையும் பதி வாகியுள்ளது. கரூர் மாவட்டத்தில் தொடர்ந்து வீசி வரும் குளிர்ந்த காற்றால், நடப்பு மே மாத த்தில் பெய்ய வேண்டிய தென் மேற்கு பருவமழையின் அளவு அதிகரிக்கும் நிலை உள்ள தால் மானாவாரி விவசாயிகள், வருண பகவானின் கருணையை எதிர்பார்த்து மகிழ்ச்சி யுடன் காத்திருக்கின்றனர். கரூரில் நேற்று முன்தினம் இரவு, 10.30 மணி முதல் விடிய விடிய மழை பெய்தது. இதனால், ஜவஹர் பஜார் உள்ளிட்ட முக்கிய ரோடுகளில் தண்ணீர் பெருக் கெடுத்து ஓடியது. கரூர் டவுன் போலீஸ் ஸ்டேஷனில் வடிகால் வசதி சரிவர இல்லாததால், மழை நீர் தேங்கி நின்றது. இதனால், பணிக்கு வந்த போலீஸாரும், புகார் கொடுக்க வந்த மக்களும் அவதிப்பட்டனர்.

## விவசாயிகள் மகிழ்ச்சி மழையால் முந்திரி மரங்களில் பசுமை

**கந்தர்வக்கோட்டை**: புதுகை மாவட்டம், கந்தர்வக்கோட்டை சுற்றுவட்டாரத்தில் ஆயிரம் ஏக்கர் பரப்பில் முந்திரி தோப்புகள் அமைந்துள்ளன. தற்போது கோடை வெயில் காரணமாக, முந்திரி மரங்களில் பூக்கள் கருகும் சூழல் நிலவியது. இதனால், முந்திரி விவசாயிகள் கவலையில் ஆழ்ந்தனர். அக்னி நட்சத்திரத்துக்கு முன்பும், பின்பும் எதிர்பாராத வகையில் மழை பெய்து வருகிறது. இதனால், முந்திரி மரங்கள் செழித்து, நல்ல பயன் தரும். கூடுதலாக, முந்திரி கொட்டைகள் உற்பத்தியாகும் என, முந்திரி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். முந்திரி காடுகளுக்கு இடையே ஊடுபயிராக துவரை, கடலை உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்யும் முயற்சியில் விவசாயிகள் இறங்கியுள்ளனர். வயலில் தண்ணீரின்றி கடந்த பல மாதங்களாக காய்ந்து, அழியும் நிலையிலிருந்து

கரும்பு பயிர்கள் உயிர்பிடித்து, பச்சை பசேல் என, காட்சியளிக்கின்றன. சுற்றுவட்டாரத்தில் பெய்த மழையால் கிணறு, போர்வெல்களில் நீர்மட்டம் கணிசமான அளவு உயர்ந்துள்ளது. வறண்டு காட்சியளித்த பெரும்பாலான கிணறுகளில், 5 அடி முதல், 6 அடி வரை நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் முந்திரி மற்றும் ஊடுபயிர் சாகுபடி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## வேளாண்மை பட்டதாரிகள் மாநில நிர்வாகிகள் கூட்டம்

**பெரம்பலூர்**: பெரம்பலூரில், 11வது மாநில அளவிலான வேளாண்மை பட்டதாரிகள் சங்க நிர்வாகிகள் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாநில தலைவர் ஸ்டேன்லி தலைமை வகித்து, உறுப்பினர்களின் ஊதிய விகிதம் குறித்த பிரச்னைகள், துறை மறு சீரமைப்பு, புதுப்பொலிவு பெறுதல், புதிய பணியிடங்களை உருவாக்குதல், பதவி உயர்வு போன்றவை குறித்து விரிவாக பேசினார். மாநில செயலாளர் சுரேஷ் சங்க உறுப்பினர்களின் பணிவரன் முறை, தகுதி காண்பவரும், ஒழுங்கு நடவடிக்கை" பி ' பிரிவு அலுவலர்களுக்கான பயிற்சி மற்றும் சங்க நடவடிக்கைகள் குறித்து பேசினார். மாநில இணை செயலாளர் அய்யம்பெருமாள் சங்கத்தின் வரவு-செலவுகள் குறித்து பேசினார். இதைத்தொடர்ந்து மாநில பொருளாளர் விவேகானந்தன், இணை செயலாளர் ராதாகிருஷ்ணன், வேளாண்மை விற்பனை துறை தவசுமுத்து, விதைச்சான்று துறை கோபாலகிருஷ்ணன், தோட்டக்கலை துறை நாகராஜ் மற்றும் பெரம்பலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் அழகிரிசாமி, அரியலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் குணசேகரன் ஆகியோர் பேசினர். கூட்டத்தில் அரசு வழிமுறைகளின் படி தமிழ்நாட்டின் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை உயர அனைவரும் அயராது பணியாற்றுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் தமிழ்நாட்டில் 2013-14ம் ஆண்டில் உணவு உற்பத்தியில், 103 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு சாதனை புரிந்த அனைத்து வேளாண்மை பட்டதாரிகளை பாராட்டியும், பணி ஓய்வு பெற்ற, பெறுவோர்களுக்கு பொன்னாடை போர்த்தி கவுரவிக்கப்பட்டது. இதில் பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்ட சங்க நிர்வாகிகள் பழனிசாமி, அசோகன், கீதா, தெய்வீகன், ரமேஷ், சாந்தி, விஜயலட்சுமி, ராமலிங்கம், சுகந்தி உட்பட மாநில, மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக பெரம்பலூர் மாவட்ட தலைவர்

செந்தமிழ்செல்வன் வரவேற்றார். அரியலூர் மாவட்ட தலைவர் முரளிதரன் நன்றி கூறினார்.

**நாட்டுப்படகு மீனவர்கள் முடக்கம் கறம்பக்குடியில் 79 மி.மீ., மழைப்பதிவு**

**புதுக்கோட்டை**: புதுக்கோட்டை மாவட்டத்தில் கோடை மழை கொட்டி தீர்த்தது. அதிகபட்சமாக கறம்பக்குடியில், 79 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. 3வது நாளாக நேற்றும் மீன்பிடிப்பதற்காக கடலுக்குள் செல்வதை நாட்டுப்படகு மீனவர்கள் தவிர்த்தனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாக கோடையை மிஞ்சும் விதத்தில் வெயில் வாட்டி வதைத்தது. வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக மாவட்டம் முழுவதும் பரவலாக கோடை மழை பெய்துவருகிறது. நேற்றுமுன்தினம்(6ம் தேதி) பகலில் அவ்வப்போது சாரல் மழையும், இரவு விடிய, விடிய பலத்த மழையும் பெய்தது. 3வது நாளாக நேற்று காலையும் சாரல் மழை நீடித்தது. நேற்றுமுன்தினம் காலை, 8 மணி முதல் நேற்று காலை 8 மணி முடிய 24 மணி நேரத்தில் மாவட்டம் முழுவ தும், 1,067 மி.மீ., மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக கறம்பக்குடியில், 79 மி.மீ., மழையும், சராசரியாக 42.68 மி.மீ., மழையும் பதிவாகியுள்ளது. மாவட்டத்தின் இதர பகுதிகளில் பெய்துள்ள மழையளவு(மி.மீ) கீழ்வருமாறு: புதுக்கோட்டை - 53, பெருங்களூர் - 50, ஆதனக்கோட்டை - 41, இலுப்பூர்- 64, அன்னவாசல் - 48, குடுமியான்மலை - 60, விராலிமலை -0 38, கீரனூர் - 21, உடையாலிப்பட்டி - 19, திருமயம் - 39, அரிமளம் - 58, கீழாநிலைக்கோட்டை - 20, காரையூர் - 51, பொன்னமராவதி - 47, ஆலங்குடி - 59, மழையூர் - 15, கந்தர்வக்கோட்டை - 53, அறந்தாங்கி - 19, ஆயிங்குடி - 18, நாகுடி - 20, மணமேல்குடி - 49, கட்டுமாவடி - 20, ஆவுடையார்கோவில் - 25, மீமிசல் - 48.

கடலோரக் கிராமங்களில் பலத்த காற்றுடன் அவ்வப்போது மழை பெய்துவருவதால் பருவநிலை மாற்றம் காரணமாக கடல் கொந்தளிப்பாக உள்ளது. இதையடுத்து மீன்பிடிப்பதற்காக கடலுக்குள் செல்லவேண்டாம் என மீனவர்களுக்கு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன்காரணமாக 3வது நாளாக நேற்றும்(7ம் தேதி) நாட்டுப்படகு மீனவர்கள் கடலுக்குள் செல்லவில்லை. விசைப்படகுகள் மூலமான மீன்பிடி தொழில் முடங்கியுள்ள நிலையில், நாட்டுப்படகுகள் மூலமான மீன்பிடித் தொழிலும்

முடங்கிவருவதால் மாவட்டத்தில் மீன் உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. கடற்கரை பகுதிகள் மட்டுமின்றி உள்ளூர் மீன் மார்கெட்டுகளிலும் மீன்வரத்து அறவே குறைந்துள்ளதால் இவற்றின் விலை ஜெட் வேகத்தில் எகிறியுள்ளது. கோடை மழை மீன்பிடி தொழிலை முடக்கினாலும், விவசாயிகளை மகிழ்வித்துள்ளது. விவசாய நிலங்கள் ஈரபதத்துடன் உள்ளதால் பயறுவகை பயிர்கள் சாகுடி செய்வதற்காக மானாவாரி நிலங்களில் கோடை உழவுக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். நிலத்தடி நீர்மட்டமும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் இந்த மழை அனைத்து தரப்பினருக்கும் பயனளிப்பதாக உள்ளது.

## விவசாயிகள் கொண்டாட்டம்

**மேலூர்** : பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்த சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டதை வரவேற்று, மேலூரில் விவசாயிகள் சங்கத்தினர் பட்டாசு வெடித்தும், இனிப்பு கொடுத்தும் கொண்டாடினர்.மாட்டுத்தாவணி நெல், மலர், பூச்சி மருந்து வியாபாரிகள் ஒருங்கிணைந்த சங்கம் சார்பில் விவசாயிகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. சங்கத் தலைவர் ராஜா, செயலாளர் சோ.ராமச்சந்திரன், பொருளாளர் பாண்டியராஜன், நிர்வாகிகள் சாத்துாரப்பன், சிங்கராஜா, பச்சையப்பன் உள்ளிட்டோர் இனிப்பு வழங்கினர்.

## வைக்கோல் காலக்கெடு முடிவு; தொடருவது குறித்து பரிசீலனை

**திண்டுக்கல்**: மானிய விலையில் வினியோகிக்கப்படும் வைக்கோலுக்காக அரசு அறிவித்திருந்த காலக்கெடு முடிய இருப்பதால், திட்டத்தை தொடருவதா, வேண்டாமா என்பது குறித்து ஆலோசிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கான தீவன பற்றாக்குறையை தவிர்ப்பதற்காக மானிய விலையில் வைக்கோல் வினியோகிக்கும் திட்டம் அரசால் துவக்கப்பட்டது. அனைத்து மாவட்டங்களிலும் இதற்கான மையங்கள் திறக்கப்பட்டன. பதிவு செய்த விவசாயிகளுக்கு தீவன அட்டைகள் வழங்கப்பட்டன.

இந்த திட்டம் 3 மாதங்கள் மட்டுமே செயல்படுத்தப்படும் என கால்நடைத்துறையினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.வறட்சி நீடித்தால், திட்டத்தை தொடருவது குறித்து அரசுக்கு பரிந்துரைக்க கால்நடைத்துறையினர் முடிவு

செய்திருந்தனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் மானிய விலை வைக்கோலை பெறுவதில் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்தினர். வைக்கோல் தரமானதாக இருந்ததால், கால்நடைகளுக்கும் இது வரப்பிரசாதமாக இருந்தது. இதனால், இரண்டாவது கட்டமாக பதிவு செய்திருந்த விவசாயிகள், தங்களுக்கு தீவன அட்டைகள் வழங்க கேட்டு, ஒவ்வொரு மையங்களிலும் வாக்குவாதங்களில் ஈடுபடுகின்றனர்.கால்நடை துறையினர் கூறுகையில்,"மூன்று மாதங்களுக்கு மட்டுமே இந்த திட்டம் அமல்படுத்தப்படுவதாக ஆரம்ப கட்டத்திலேயே தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது கோடை மழை பரவலாக பெய்ய துவங்கியிருப்பதால், தீவன பற்றாக்குறை தவிர்க்கப்படும் நிலை உருவாகியுள்ளது. இருப்பினும், விவசாயிகள் மானிய விலை வைக்கோலை பெறுவதில் அதிக ஆர்வம் காட்டுவது குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்,' என்றனர்.

**வைகை அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு**

**ஆண்டிபட்டி** : பெரியாறு, வைகை அணைகளின் நீர் பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், வைகை அணைக்கான நீர் வரத்து அதிகரித்து வருகிறது.

கடந்த சில நாட்களாக, வைகை அணையின் நீர் பிடிப்பு பகுதிகளான வருஷநாடு மலைப்பகுதியில் பலத்த மழை பெய்தாலும், மழை நீர் இன்னும் அணைக்கு வந்து சேரவில்லை. அணையின் நீர் வரத்து பகுதி வழியாகவும், பெரியாறு அணையில் இருந்தும் தொடர்ந்து நீர் வரத்து ஏற்பட்டுள்ளது. நேற்று அணை நீர் மட்டம் 21.06 அடியாக இருந்தது. மொத்த உயரம் 71 அடி. அணையில் இருந்து மதுரை, ஆண்டிபட்டி-சேடபட்டி குடிநீருக்காக, வினாடிக்கு 40 கன அடி திறக்கப்பட்டுள்ளது. நேற்று காலை 6 மணிக்கு வினாடிக்கு 52 கன அடியாக இருந்த நீர் வரத்து, பகல் 1 மணிக்கு 152 கனஅடியானது. பெரியாறு அணையில் இருந்து வரும் நீரின் அளவு அதிகரித்து வருகிறது. வைகை அணை நீர் பிடிப்பு பகுதிகளில் மழைக்கான சூழல் தொடர்கிறது. வருஷநாடு மலைப்பகுதியில் இருந்து, கடமலைக்குண்டை கடந்து வரும் நீர், நாளை அல்லது நாளை மறுநாள் அணைக்கு வந்து சேரும்போது, நீர் வரத்து இன்னும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாக பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

## உத்தமபாளையத்தில் 64 மி.மீ., மழை; அக்னி நட்சத்திரத்தில் பூமி குளிர்ந்தது

**தேனி** : உத்தமபாளையத்தில் அதிகபட்சமாக 64 மி.மீ., மழை பெய்துள்ளது. அக்னி நட்சத்திரத்தில் பூமி குளிர்ந்ததுள்ளது.

தேனி மாவட்டத்தில், ஏப்ரல் மாதம் கடும் வெயில் வாட்டியது. அனல் காற்று வீசியது.குடிநீர் தட்டுப்பாடு நிலவியது. கால்நடைகளுக்கு தீவனம் கிடைப்பது பெரும் திண்டாட்டமாக இருந்தது.இந்நிலையில், கடந்த 4 ம் தேதி முதல், அக்னி நட்சத்திரம் துவங்கி, இம் மாதம் 28ம் தேதி வரை இருக்கும். இதனால், கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும், என பொதுமக்கள் அஞ்சினர். மாறாக, வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலையால் கன மழை பெய்து வருகிறது. தேனி மாவட்டத்தில், தொடர்ந்து, சாரல் மற்றும் கன மழை பெய்து வருகிறது. இதனால் பூமி குளிர்ந்தது. அணைகளுக்கு, நீர் வரத்து ஏற்பட்டுள்ளது. குடிநீர் தட்டுப்பாடும், வெப்பமும் ஓரளவு குறைந்தது. நேற்று காலை 8 மணிக்கு முன், 24 மணி நேரத்தில் பதிவான மழை (மி.மீ.,):ஆண்டிபட்டி 23.2, அரண்மனைபுதூர்-23.6, போடி-24.6, கூடலூர் -33, மஞ்சளாறு - 18, பெரியகுளம்-45, பெரியாறு-41, சோத்துப்பாறை-36, தேக்கடி 68, உத்தமபாளையம்- 64, வைகை அணை-28, வீரபாண்டி-40, என 456.27 மி.மீ., மழை பெய்துள்ளது. சராசரி மழையளவு 38.03 மி.மீ.

## பென்னிகுவிக் மணிமண்டபத்தில் குவிந்த பொதுமக்கள்-விவசாயிகள்

**கூடலூர்** : பெரியாறு அணை நீர்மட்டத்தை, 142 அடியாக உயர்த்தலாம், என சுப்ரீம் கோர்ட் நேற்று தீர்ப்பு வழங்கியதைத் தொடர்ந்து, லோயர்கேம்பில் உள்ள பென்னிகுவிக் மணிமண்டபத்திற்கு பொதுமக்கள் திரண்டு, பென்னிகுவிக் சிலைக்கு மாலை அணிவித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பெரியாறு அணை நீர்மட்டத்தை உயர்த்துவது தொடர்பான சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை, நேற்று அதிகாலையில் இருந்தே, விவசாயிகள் ஆர்வமுடன் எதிர்பார்த்திருந்தனர். அணையில் 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம், என தீர்ப்பு வெளியானவுடன், பொதுமக்களும், விவசாயிகளும், தன்னார்வு தொண்டு நிறுவனங்களும் லோயர்கேம்பில் உள்ள பென்னிகுவிக் மணி மண்டபத்திற்கு சென்றனர். பென்னிகுவிக்கிற்கு மாலை அணிவித்து, அனைவருக்கும் இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

## உரங்கள் இருப்பு நிலவரம்

**தேனி** : தேனி மாவட்டத்தில், போதுமான அளவு உரங்கள் இருப்பு உள்ளதாக விவசாயத்துறை தெரிவித்துள்ளது. விவசாயத்துறை அதிகாரிகள் கூறியதாவது: தேனி மாவட்டத்தில் மானாவாரி உழவு, விதைப்பு பணிகள் நடந்து வருகின்றன. அனைத்து தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களிலும் பொட்டாஷ், யூரியா, 20க்கு 20 காம்ப்ளக்ஸ் உரங்கள் இருப்பு உள்ளது. வெளி மார்க்கெட்டிலும் உரங்கள் தேவைக்கு ஏற்ப உள்ளன. எனவே, விவசாயிகள் உரம் வாங்க கூடுதல் விலை, தர தேவையில்லை. கூடுதல் விலை கேட்பவர்கள் குறித்து தகவல் தரலாம், என விவசாயத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வட்டாணத்தில் 132 மி.மீ., கொட்டி தீர்த்த மழை

**ராமநாதபுரம்** : ராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி நிலவரப்படி அதிகபட்சமாக வட்டாணம்-132, கமுதி-106 மி.மீட்டர் மழை பெய்தது. இதர இடங்களில் பெய்த மழை அளவு(மி.மீட்டரில்) பரமக்குடி 80, பாம்பன் 67.1, தங்கச்சிமடம் 67.2, திருவாடானை 64.4, ராமநாதபுரம் 41.4 , ராமேஸ்வரம் 32.2, மண்டபம் 38.6 , தொண்டி 48.7, பள்ளமோர்குளம் 12 , வாலிநோக்கம் 22.4 , கடலாடி 33.2 , முதுகுளத்தூர் 3 மி.மீ., மழை பெய்துள்ளது. திருவாடானை: திருவாடானை, தொண்டி பகுதியில் இரு நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. கடும் வெப்பம் குறைந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். கிராமங்களில் உள்ள கண்மாய்களில் சிறிது தண்ணீர் தேங்கியிருப்பதால் கால்நடைகளுக்கு பயனாக உள்ளது. இது குறித்து விவசாயிகள் கூறுகையில், ""இந்த மழை 6 மாதத்திற்கு முன்பு பெய்திருந்தால் விவசாயத்திற்கு பயனாக இருந்திருக்கும். காலம் கடந்து பெய்ததால் எந்த பயனும் இல்லை. கோடை விவசாயத்திற்கும் இம்மழை பயன் இல்லை'' என்றனர்.

## வைகை - பரளையாறு கால்வாய் ரூ. 19.50 கோடியில் இணைப்பு பணி

**பரமக்குடி** : பரமக்குடி, முதுகுளத்தூர் பகுதிகளில் பரளையாறு மூலம், பாசன வசதிகள் கிடைக்கும் வகையில் இணைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை உலக வங்கி நிபுணர்கள் குழுவினர் ஆய்வு செய்தனர்.

பரமக்குடி, முதுகுளத்தூர் பகுதிக்குட்பட்ட, 12 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், 19 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இணைப்பு பணிகள் நடந்து வருகிறது. இதன்படி, வைகை ஆற்றில் இருந்து பிரியும், பரளையாறு இணைப்பு கால்வாய் மேம்படுத்தப்படுகிறது. உலக வங்கி நிதியோடு நடந்து வரும் இப்பணியினை, பொதுப்பணித்துறையினர் மேற்கொண்டுள்ளனர். இங்கு 3.84 கி.மீ., தூரத்திற்கு சிமிண்ட் கான்கிரீட் வாய்க்கால் அமைக்கப்படுகிறது. இதன் மூலம் வைகையில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் சமயங்களில், கிடைக்கும் உபரி நீர் பரளையாற்றிற்கு திருப்பி விடப்படும். இதன் மூலம் 54 கண்மாய்கள் பாசன வசதி பெறும் வகையில் 12 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன் பெறும். இப்பணியினை உலக வங்கி நிபுணர் குழுவைச் சேர்ந்த மல்கோத்ரா நேரில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, மாநில நீர் மேலாண்மை இயக்குநர் ராஜகோபால், மதுரை மண்டல பொறியாளர் தமிழரசன், சிவகங்கை வட்ட கண்காணிப்பு பொறியாளர் அன்பழகன், நீர்வள நிலவள திட்ட குழும ஆலோசகர் ராஜகோபால், செயற்பொறியாளர் ராமச்சந்திரன் உடன் இருந்தனர்.

## நெல்லையில் தொடர் மழை; பாபநாசம் அணை 10 அடி உயர்ந்தது; சேர்வலாறு அணை 32 அடி உயர்வு

**திருநெல்வேலி** : காற்றழுத்த தாழ்வு மண்டல மழையினால் நெல்லை மாவட்டத்தில் அணைகளின் நீர்மட்டம் ஒரே நாளில் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக பரவலாக மழைபெய்துவருகிறது. நேற்று முன்தினம் இரவில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பலத்த மழை பெய்தது. மாவட்டத்தின் பெரிய அணையான பாபநாசம் அணைக்கு வினாடிக்கு 4 ஆயிரம் கன அடிவீதமும், சேர்வலாறு அணைக்கு 21 ஆயிரம் கனஅடி வீதமும் தண்ணீர் வந்தது. மணிமுத்தாறு அணை பகுதியிலும் பலத்த மழை பெய்தது. பாபநாசம் கீழ் அணையில் 408 மி.மீ.,மழையும், மேல் அணையில் 300 மி.மீ.,மழையும் பதிவானது. நேற்றுமுன்தினம் 6ம் தேதி காலையில் பாபநாசம் அணையின் நீர்மட்டம் 32.50 அடியாக இருந்தது. நேற்று மாலையில் 10 அடி<உயர்ந்து 42.80 அடிக்கு <உயர்ந்தது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் நேற்றுமுன்தினம் 47.50 அடியாக இருந்தது ஒரே நாளில் 32 அடி

அதிகரித்து 79 அடியை எட்டியது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் மூன்று அடி உயர்ந்து 64.30 ஆனது. மற்ற அணைகளின் நீர்மட்டமும் உயர்ந்தது. குற்றாலத்தில் வெள்ளம்: குற்றாலத்தின் மலைப்பகுதியிலும் பலத்த மழை பெய்தது. இதனால் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 2 மணியளவில், அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. சரள்களும், கற்களும் கூட வெள்ளநீரில் அடித்துவரப்பட்டது. குற்றாலம் அருவி தண்ணீரால் உருவாகும் சிற்றாறு நதியின் வெள்ளப்பெருக்கெடுத்து ஓடியது. பழைய குற்றாலத்தில் வெள்ளத்தினால் படிகள் வழியாகவும் தண்ணீர் வழிந்தது. நேற்றும் பகலில் மழை பெய்தது. இந்த மழையினால் நிலத்தடி நீர்மட்டம் உயரும் வாய்ப்புள்ளது.

## தூத்துக்குடியில் கொட்டி தீர்த்தது மழை; நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்பு

**தூத்துக்குடி** : தூத்துக்குடி மாவட்டத்தில் மழை கொட்டி தீர்த்தது. மாவட்டம் முழுவதும் பரவலாக மூன்று நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால், நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்புள்ளது. கனமழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கனமழை: தென் வங்க கடல் பகுதியில் புயல் சின்னம் காரணமாக தொடர்ந்து தென் மாவட்டங்களில் மழை கொட்டி வருகிறது.தூத்துக்குடியில் கடந்த மூன்று நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று முன் தினம் இரவு துவங்கிய மழை விட்டு, விட்டு பெய்து வருகிறது.

நேற்று காலை 10 மணிக்கு துவங்கிய மழை மதியம் 2 மணி கொட்டி தீர்த்தது. ரோடுகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. தாழ்வான பகுதிகளில் மழை வெள்ளம் தேங்கியுள்ளதால் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர். நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்பு: தொடர்ந்து மழை பெய்து வருவதால் வறட்சியின் பிடியில் சிக்கியிருந்த தூத்துக்குடி மாவட்டத்தில், குடி நீருக்கு பொதுமக்கள் அல்லாடி கொண்டிருந்தனர்.

தற்போது பெய்துள்ள கனமழை காரணமாக நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்புள்ளது. தொடர் மழை காரணமாக விவசாயிகள் மானாவாரி கோடை பயிர்கள் பயிரிட வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால், மகிழ்ச்சியடைந்துள்ளனர். அக்னி நட்சத்திரம் துவங்கும் வேளையில் மழை பெய்து குளிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதால், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நேற்று முன் தினம்(மே 6) முதல் நேற்று(மே7) காலை 6 மணி வரை பெய்த மழை

நிலவரம்(மி.மீ.,ல் ): கோவில்பட்டி 46,ஓட்டப்பிடாரம் 56, சாத்தான்குளம் 62,ஸ்ரீவைகுண்டம் 81.2, தூத்துக்குடி 34.6,திருச்செந்தூர் 19,விளாத்திகுளம் 45,கயத்தாறு 70,காயல்பட்டிணம் 79.4,குலசேகரபட்டிணம் 29,கீழ அரசரடி 32.2,எட்டயபுரம் 3,கடம்பூர் 59,மணியாச்சி 24,வேடநத்தம் 10,சூரங்குடி 48,காடல்குடி 25,வைப்பாறு 60,கழுகுமலை 52. மொத்தமாக மாவட்டத்தில் 835.6 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. 43.98 சதவீதம் மழை பதிவாகியுள்ளது.

**பைபர் படகு மீனவர்கள் வலையில் அதிகளவில் பிடிபட்ட மத்தி மீன்கள்**

**புதுச்சேரி**: புதுச்சேரியில், பைபர் படகு மீனவர்கள் வலையில், 5 டன் மத்தி மீன்கள் சிக்கின.

மீன் இனப்பெருக்கத்திற்காக, கடந்த ஏப்., 15ம் தேதி முதல் மே 30ம் தேதி வரை மீன்பிடி தடைக்காலம் அமல்படுத்தப்பட்டுள்ளது. ஆழ்கடல் பகுதியில் மீன்பிடிக்கும் விசைப்படகுகள், மீன்பிடி துறைமுகங்களில் பராமரிப்பு பணிக்காக நிறுத்தப்பட்டுள்ளன.

பைபர் மற்றும் நாட்டு கட்டுமரப் படகுகள், கடற்கரையோரமாக மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. நேற்று புதுச்சேரி கடல் பகுதியில் பைபர் படகில் மீன்பிடித்த மீனவர் வலையில், அதிக அளவில், மத்தி மீன்கள் சிக்கின. தேங்காய் திட்டு துறைமுகத்திற்கு, கொண்டுவரப்பட்ட 5 டன் மத்தி மீன்களை, கேரள வியாபாரிகள், டன்னுக்கு, 20 ஆயிரம் ரூபாய் விலை கொடுத்து, வாங்கி சென்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### உச்சநீதிமன்றம் வரலாற்று தீர்ப்பு

**முல்லைப்பெரியாறு நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த அனுமதி....**



**டெல்லி**: முல்லைப் பெரியாறு அணையில் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடிக்கு உயர்த்தலாம் என்று உச்ச நீதிமன்றம் வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பு அளித்துள்ளது. கடந்த 27022006ல் அளித்த தீர்ப்பை அமல்படுத்த மறுத்து, கேரள அரசு கொண்டு வந்த கேரள பாசனம்தண்ணீர் பாதுகாப்பு (திருத்தம்) சட்டம் செல்லாது; அணை வலுவாகத்தான் உள்ளது. முதல் கட்டமாக நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தலாம். அணையை பலப்படுத்தும் பணி முழுமை அடைந்ததும், 152 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. கடந்த 35 ஆண்டாக இழுபறித்த இந்த வழக்கில் தமிழகத்துக்கு பெரும் வெற்றி கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆர்.எம்.லோதா தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன பெஞ்ச் அளித்த தீர்ப்பில், கேரளா அரசு கடந்த 2006ம் ஆண்டில் கொண்டு வந்த கேரள பாசனம்தண்ணீர் பாதுகாப்பு (திருத்தம்) சட்டம் செல்லாது. அரசியல் சாசனத்திற்கு முரணான இந்த சட்டத்தை அமல்படுத்தக் கூடாது. மாநிலங்களுக்கு இடையிலான பிரச்னையில், மற்றொரு மாநிலத்தை பாதிக்கும்

வகையில் ஒரு மாநிலம் தானாகவே முடிவு எடுக்க முடியாது என்றும் உத்தரவில் குறிப்பிட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன பெஞ்சில் நீதிபதிகள் எச்.எல்.தத்து, சி.கே.பிரசாத், மதன் பி லோகூர், எம்.ஒய்.இக்பால் ஆகியோரும் இடம் பெற்றனர்.

முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பை குறிப்பிட்ட கால இடைவெளியில் கண்காணித்து பராமரிக்க மூன்று உறுப்பினர் குழு ஒன்றையும் உச்ச நீதிமன்றம் அமைத்துள்ளது. இந்த குழுவில் மத்திய நீர்வள ஆணையத்தின் (சிடபிள்யுசி) பிரதிநிதி மற்றும் தமிழ்நாடு, கேரள அரசுகளின் பிரிதிநிதிகள் உறுப்பினர்களாக இருப்பர். உயர் அதிகாரம் படைத்த இந்த குழு, அணையை குறிப்பிட்ட கால இடைவெளியில் பார்வையிட்டு, அணையின் பாதுகாப்பை உறுதி செய்யவும் பராமரிக்கவும் தேவையான உத்தரவுகளைப் பிறப்பிக்கும். இந்த குழுவின் தலைவராக மத்திய நீர்வள ஆணையத்தின் பிரதிநிதி இருப்பார். அலுவலகம் அமையும் இடத்தை இந்த குழு தேர்வு செய்யும், அதற்கான இடத்தை கேரளா வழங்க வேண்டும். குழுவின் செலவு முழுவதையும் தமிழக அரசு ஏற்க வேண்டும். கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் தேதி தீர்ப்பை ஒத்திவைத்த உச்ச நீதிமன்றம் நேற்று இந்த பரபரப்பு தீர்ப்பை வழங்கியுள்ளது.

வழக்கு விவரம்: ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் சென்னை மாகாணம் திருவிதாங்கூர் சமஸ்தானம் இடையே 999 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு, 1895ல் முல்லைப் பெரியாறு அணை கட்டி முடிக்கப்பட்டது. இந்த அணையை நம்பியே மதுரை, தேனி உள்பட 5 மாவட்டங்களில் விவசாயம் உள்ளது. அணையின் நீர்மட்ட உயரம் 152 அடி. நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, மொழிவாரி மாநிலங்களை பிரித்தபோது, முல்லைப் பெரியாறு அணை கேரளா எல்லைக்குள் அமைந்து விட்டது.

ஆனால், அணை நிர்வாகம் தமிழக பொதுப்பணித் துறையிடம் உள்ளது. அணை கேரள எல்லைக்குள் உள்ளதால் அந்த மாநில அரசு அடிக்கடி பிரச்னை செய்தது. 1979ல் அணை பலமிழந்து விட்டதாகக் கூறி பெரும் பிரச்னையை ஏற்படுத்தியது. இரு மாநிலங்களின் எல்லைப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிக்க இரு மாநிலங்களுக்கு இடையே சமரச பேச்சுவார்த்தைக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்தது. இதையடுத்து, அணையை 3 கட்டங்களாக பலப்படுத்துவது என்றும் அதுவரையில் நீர்மட்ட அளவை 152 அடியிலிருந்து 136 அடியாக குறைத்துக்

கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. அணையை தமிழக அரசு, மத்திய அரசின் மேற்பார்வையில் பலப்படுத்தியவுடன் அணையில் நீர்மட்டத்தை மீண்டும் முந்தைய நிலைப்படியே 152 அடியாக உயர்த்திக் கொள்வது என்றும், இதற்கு கேரள அரசு முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

‘தீர்ப்பு நகல் கிடைத்ததும் நீர்மட்டம் உயர்த்தப்படும்’:

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் நகல் கிடைத்ததும் தமிழக அரசு உத்தரவுப்படி, அணையில் 142 அடி தண்ணீர் தேக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக பொதுப்பணித்துறை அதிகாரி தெரிவித்துள்ளார். முல்லைப் பெரியாறு அணை பராமரிப்பு பணியில் ஈடுபட்டுள்ள தமிழக பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் ராஜேஷ் கூறுகையில், ‘‘சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு நகல் கிடைத்ததும், தமிழக அரசின் உத்தரவுப்படி அணையின் ஷட்டரை இறக்கி 142 அடி தண்ணீரை தேக்குவது உள்ளிட்ட தேவையான நடவடிக்கைகள் உடனே மேற்கொள்ளப்படும்,‘‘ என்றார்.

ஏன் 136 அடி?: அணையின் வெள்ள நீர்போக்கியின் தளமட்டம் (சில் லெவல்) 136 அடி. அதில் 16 அடி திறப்புக் கதவுகள் வைத்து 152 அடியாக தண்ணீர் தேக்கப்படுகிறது. காப்பு திறப்புக் கதவுகளை உயர்த்தி நீர்மட்டத்தை 136 அடியாகக் குறைக்கலாமே ஒழியே அதற்கு கீழே குறைக்க முடியாது.) ஒப்பந்தத்தின்படி, குறிப்பிட்ட கால இடைவெளியில் அணையை தமிழக அரசு பலப்படுத்திய பின்னரும் அணையில் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து உயர்த்த கேரள அரசு மறுத்து முரண்டுபிடித்து வந்தது.

இதையடுத்து, தமிழக முல்லைப் பெரியாறு பாசன விவசாய சங்கங்களால் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அணையின் நீர்மட்டத்தை உயர்த்தக் கூடாது என கேரள அணை பாதுகாப்பு சங்கங்கள் சார்பில் கேரள உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. பின்னர், அனைத்து வழக்குகளும் உச்ச நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது, கேரள அரசும், தமிழக அரசும் வழக்கில் தங்களை இணைத்துக் கொண்டன. உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி மத்திய அரசு 10 பேர் அடங்கிய நிபுணர் குழுவை நியமித்தது. இந்த குழுவினர் அணையை 10102000ல் பார்வையிட்டு

அணை பலமாக இருப்பதாக மத்திய அரசிடம் 04112000ல் அறிக்கை சமர்ப்பித்தது. அதன் பிறகு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி, மத்திய அரசு, மத்திய மண்வள ஆய்வுக்குழு நிபுணர்களை அனுப்பி அணையின் கட்டுமானப் பணி பொருட்களின் மாதிரிகளை எடுத்து சோதனை கூடங்களில் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தது.

இந்த வழக்கில், உச்ச நீதிமன்றத்தின் விசாரணை 2006ம் ஆண்டு வரை நீடித்தது. கேரளாவின் வாதங்கள் எல்லாம் மிகைப்படுத்தப்பட்டவை என்றும், விதண்டாவாதம் எனவும் அணையின் பலத்தைப் பொறுத்த வரையில் நிபுணர் குழுக்கள் அளித்த அறிக்கையின் படியும் 27022006ம் தேதி உச்ச நீதிமன்றம் ஒரு நியாயமான தீர்ப்பை வழங்கியது.

அந்த தீர்ப்பு (சுருக்கம்) விவரம்: “நிபுணர் குழுக்கள் அளித்த அறிக்கையின் அடிப்படையில், அணை யின் நீர்மட்டத்தை உடனடியாக 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தலாம். பேபி அணையை பலப்படுத்திய பிறகு 152 அடிக்கு உயர்த்திக் கொள்ளலாம். பேபி அணையைப் பலப்படுத்தும் பணிக்கு கேரள அரசு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை அமல்படுத்த சிறிதும் மனம் இல்லாத கேரள அரசு, ஏற்கனவே 2003ல் போடப்பட்ட “கேரள நீர்பாசன மற்றும் நீர்பாதுகாப்பு சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வந்து சட்டப் பேரவையில் சட்டமாக்கியது. இந்த சட்டத்தின்படி, கேரளாவில் உள்ள 22 அணைகளின் முழுகொள்ளளவு நீர்மட்டத்தை வரையறுப்பதற்கு கேரள அரசிற்குத்தான் முழு அதிகாரம் உள்ளது. கேரள அரசு நினைத்தால் அந்த மாநிலத்தில் உள்ள எந்த அணையின் செயல்பாட்டையும் நிறுத்தி விடலாம். இதில் மற்ற எந்த அரசும் மற்றும் நீதிமன்றங்களின் ஆணையும் குறுக்கிட முடியாது. 15032006ல் கேரள சட்ட மன்றத்தில் இந்த சட்டத் திருத்த மசோதா சட்டமாக்கப்பட்டது. இதன்படி, கேரளாவில் உள்ள 22 அணைகளில் முதலாவது முல்லைப் பெரியாறு அணை என்றும் அதன் அதிகபட்ச நீர்மட்டம் 136 அடி எனவும் சட்டப்பதிவு செய்தது. இதன் பிறகு கேரள அரசு உச்ச நீதிமன்றத்தில் ஏப்ரல் 2006ல் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரி தாக்கல் செய்த மனு, உச்ச நீதிமன்ற பெஞ்சால் 2006 ஜூலையில் தள்ளுபடி செய்யப்பட்டது.

இதற்கிடையில், கேரளாவின் நீர்ப்பாசனம் மற்றும் நீர்பாதுகாப்பு சட்டத் திருத்தம் உச்ச நீதிமன்றத் தின் தீர்ப்புக்கு எதிராகவும் அதை நடைமுறைப்படுத்த தடை செய்வதாகவும் உள்ளதால் அதை ரத்து செய்யக் கோரி தமிழக அரசால் உச்ச நீதிமன்றத்தில் 31032006ல் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவின் மீது உச்ச நீதிமன்றம் எடுத்த நடவடிக்கைகள் தொடர்ந்தன.

அணையின் உண்மை நிலையை அறிந்து அறிக்கை அளிக்க உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஆனந்த் தலைமையில், உயர் நிலை குழுவை உச்ச நீதிமன்றம் அமைத்தது. இதில் தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ஏ.ஆர்.லட்சுமணன், மத்திய அரசு சார்பில் மத்திய நீர்வளத்துறை முன்னாள் செயலாளர் தத்வே, மத்திய நீர்வள முன்னாள் தலைமை பொறியாளர் மேத்தா, கேரளா அரசு சார்பில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி தாமஸ் ஆகியோர் இடம்பெற்றனர். இந்த குழுவுக்கு மத்திய அரசின் பல்வேறு நிபுணர் குழுக்கள் உதவியாக இருந்தன.

கடந்த 2010ம் ஆண்டு டிசம்பர் 21ம் தேதி உயர் நிலைக்குழுவினர், முல்லைப் பெரியாறு அணையை நேரில் பார்வையிட்டு ஆய்வு நடத்தினர். உயர் நிலைக்குழுவின் உத்தரவின் பேரில், மேலும் பல்வேறு சோதனைகள் அணையில் மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆய்வு அறிக்கைகள் உயர் நிலைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டன. அந்த ஆய்வு அறிக்கைகளை விரிவாக பரிசீலனை செய்த பிறகு தனது அறிக்கையை உயர் நிலைக்குழு, 2012 ஏப்ரலில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அந்த அறிக்கையில், முல்லைப் பெரியாறு அணை பலமாக இருப்பதாகவும், அணையில் நீர்மட்டத்தை உயர்த்திக் கொள்ளலாம் என்றும் பரிந்துரை செய்திருந்தது.

இதன் பின்னர், உயர் நிலைக்குழுவின் அறிக்கையை இரு மாநில அரசுகளுக்கும் வழங்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதன் பின்னர், தங்கள் தரப்பு வாதங்களை இரு மாநில அரசுகளும் உச்ச நீதிமன்றத்தில் முன்வைத்தன. கடந்த ஓர் ஆண்டாக வாதங்கள் நீடித்து முடிந்தன. இரு தரப்பு வாதங்களை கேட்ட பின்னர் வழக்கின் தீர்ப்பு தேதியை குறிப்பிடாமல் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 20ம் தேதி உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்தது.

இந்நிலையில், உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஆர்.எம். லோதா தலைமையில் 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன பெஞ்ச் நேற்று காலையில்

தீர்ப்பை வழங்கியது. தீர்ப்பில், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை அமல்படுத்த தடையாக இயற்றப்பட்ட கேரள அரசின் அணைகள் பாதுகாப்பு சட்டத்தை ரத்து செய்தது. அணை பலமாக இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதால், அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தலாம் என்று அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளது. அணை முழுமையாக பலப்படுத்தியதும் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்தலாம் தனது தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

**நெல்லை மாவட்டத்தில் உள்ள பாபநாசம் அணை நீர்மட்டம் ஒரேநாளில் 4.8 அடி உயர்வு**



**நெல்லை:** நெல்லை மாவட்டத்தில் உள்ள பாபநாசம் அணை நீர்மட்டம் ஒரேநாளில் 4.8 அடி உயர்ந்துள்ளது. பாபநாசம் அணைக்கு வினாடிக்கு 1,200 கன அடி நீர் வந்து கொண்டு இருக்கிறது.

20மி. மீட்டர் மழை பதிவாகியுள்ள நிலையில் அணையின் நீர்மட்டம் 44.90 அடியாக உள்ளது. தொடர்ந்து பெய்துவரும் மழையால் சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 72.18 அடியாகஉள்ளது.

மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 64.90 அடியாகவும் அணைக்கு நீர்வரத்து 660 கனஅடியாக உள்ளது.

**தாமிரபரணியில் வெள்ளப்பெருக்கு, தமிழகத்தில் மழை நீடிப்பு: 3 பேர் பலி**



**சென்னை:** தமிழகத்தின் பல்வேறு இடங்களில் நேற்றும் பரவலாக மழை நீடித்தது. மழைத்து 2 முதியவர்கள் மற்றும் சிறுவன் பலியானார்கள். தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில், கடந்த ஒரு வாரமாக பல்வேறு மாவட்டங்களில் பரவலாக கோடை மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், கன்னியாகுமரி அருகே காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. இத்தாழ்வு நிலை தற்போது வலுப்பெற்றதால் நேற்றும் பல்வேறு இடங்களில் மழை கொட்டித் தீர்த்தது. இதனால், பெரும்பாலான நீர்நிலைகள், அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகின்றன.

குமரி: கன்னியாகுமரி மாவட்டத்தில், நேற்று முன்தினம் மாலையில் தொடங்கி நேற்று காலை வரை மழை பெய்தது. பின்னர் காலை 10 மணிக்கு சிறிது வெயில் தென்பட்டது. மழை ஓய்ந்தது என இருந்த நிலையில் பகல் 11 மணிக்கு மீண்டும் மழை பெய்ய தொடங்கியது. பின்னர் இடைவிடாமல் தொடர்ந்து மழை பெய்தது. இதனால், ஆறுகளில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கரையோர பகுதி மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டு உள்ளனர். குளச்சல் அருகே வாணியக்குடி சமாதானபுரத்தில் மழைக்கு வீட்டுகூரை இடிந்து விழுந்ததில் 3 பேர் காயம் அடைந்தனர்.

நெல்லை: நெல்லை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் விடிய விடிய கனமழை கொட்டியது.

இதனால் குற்றாலம் அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மெயினருவியில் பாதுகாப்பு வளைவைத் தாண்டி தடாகத்தில் அசுர வேகத்தில் தண்ணீர் கொட்டியது. மலைப் பகுதிகளில் இருந்த மரம், கிளைகள், சிறிய மற்றும் பெரிய கற்கள் ஆகியவை மெயினருவியில் அடித்து வரப்பட்டது. பழைய குற்றாலத்திலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதனால், மெயினருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவி ஆகியவற்றில் தொடர்ந்து 2வது நாளாக நேற்றும் குளிக்க தடை விதிக்கப்பட்டது.

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் கொட்டி தீர்க்கும் கனமழையால் தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. தாமிரபரணியை ஆற்றையொட்டியுள்ள குறுக்குத்துறை பகுதியில் மண்டபத்தை மூழ்கடித்து தண்ணீர் செல்கிறது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 32 அடியும், பாபநாசம் நீர்மட்டம் 8 அடியும் உயர்ந்துள்ளது.

ராமநாதபுரம் ராமநாதபுரம் மாவட்டத்தில், நேற்றுமுன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. அப்போது, பரமக்குடி அருகே பெருமாள்கோவிலில் 4 குடிசை வீடுகளில் மழைநீர் புகுந்தது. இதில் ஒரு வீட்டில் தனியாக இருந்த ராமச்சந்திரன் (60) வெளியே தப்பி வர முடியாமல் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இதுதவிர, கடலாடி அருகே கருங்குளம் கிராமத்தை சேர்ந்தவர் காளி மனைவி ராக்கி (80) என்பவரது மண் வீடு நேற்று காலை சரிந்து விழுந்தது. இதில், ராக்கி உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தார். தேனி மாவட்டம், கும்பக்கரை அருவியில் தண்ணீர் அதிகளவில் கொட்டுவதால் சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறையினர் தடை விதித்துள்ளனர். இதுதவிர, மதுரை, விருதுநகர், சிவகங்கை, திண்டுக்கல் ஆகிய இடங்களிலும் மழை நீடித்தது.

சேலம்நாமக்கல்: சேலம் மாவட்டத்தில் நேற்று 2வது நாளாக மழை தொடர்ந்தது. பகல் முழுவதும் பல இடங்களில் லேசான தூறல் மழை நீடித்தது. நாமக்கல் மாவட்டத்தில் ராசிபுரம், பரமத்திவேலூர் ஆகிய இடங்களிலும் மழை பெய்தது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு தேன்கனிக்கோட்டை, ராயக்கோட்டை பகுதியில் பலத்த மழை பெய்தது. தேன்கனிக்கோட்டை பகுதியில் பல கிராமங்களில் மின் வினியோகம் அடியோடு நிறுத்தப்பட்டது.

டெல்டா மாவட்டங்கள்: காவிரி டெல்டா பகுதிகளான நாகை, திருவாரூர், தஞ்சை, திருச்சி, பெரம்பலூர், கரூர், புதுக் கோட்டை மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் இரவு முதல் விடிய விடிய மழை கொட்டியது.

ஒரு சில இடங்களில் விட்டு விட்டு லேசாக மழை பொழிந்தது. நாகை, திருவாரூர், தஞ்சையில் நேற்று பகலில் மழை இல்லை.

திருச்சியில் மதியம் வரை தொடர்ந்து பலத்த மழை பொழிந்தது. அதேபோல், கரூரிலும் நேற்று காலை பலத்த மழை பெய்தது.

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை, திருமயம், பொன்னமராவதி, அறந்தாங்கி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நேற்று காலை முதல் மாலை வரை விட்டுவிட்டு பலத்த மழை பெய்தது.

இதனால் வறண்ட கண்மாய், குளங்களில் தண்ணீர் தேங்கியது. மழை காரணமாக மணமேல்குடி, கட்டுமாவடி, பொன்னகரம், புதுக்கடி பகுதிகளை சேர்ந்த 700க்கும் மேற்பட்ட நாட்டுப்படகு மீனவர்கள் நேற்று 3வது நாளாக கடலுக்கு செல்லவில்லை.

சிறுவன் பலி: சென்னை அண்ணாநகர் எம்ஜிஆர் காலனி நேரு தெருவில் மழையால் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் விஜயகுமார்(5) என்ற சிறுவன் உயிரிழந்தான்.

மேட்டூருக்கு நீர்வரத்து அதிகரிப்பு:

மேட்டூர்: தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் மேட்டூர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு பெய்த கனமழையால் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் விநாடிக்கு 677 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 8 மணி நிலவரப்படி விநாடிக்கு 1209 கனஅடியாக அதிகரித்தது. அப்போது, அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 1000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

நீர்மட்டம் 32.30 அடியாகவும், நீர் இருப்பு 8.47 டிஎம்சியாகவும் உள்ளது.

**தென் மாவட்டத்தில் இன்றும் கனமழை பெய்யும்..!**



**சென்னை**: குமரிக் கடல் பகுதியில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு உருவான காற்றழுத்தம் வலுப்பெற்று காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாறியது. இதன் காரணமாக தென் மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை அந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி மேலும் வலுவடைந்ததால் பரவலாக கனமழை பெய்தது. அதிகபட்சமாக நேற்று பாபநாசம் பகுதியில் 300மிமீ மழை பெய்துள்ளது. சென்னையில் லேசான மழை பெய்தது. இந்நிலையில் குமரிக்கடல் பகுதியில் நிலை கொண்டு இருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி நேற்று வட மேற்கு திசையில் நகர்ந்து தெற்கு கேரளா மற்றும் அதை ஒட்டிய பகுதியில் நிலை கொண்டு இருக்கிறது. இதனால் இன்றும் நாளையும் தென் மாவட்டங்களில் அனேக இடங்களில் கனமழை பெய்யும். இதுதவிர தமிழகத்தில் பிற இடங்களில் பரவலாக மழை பெய்யும். ஒரு சில இடங்களில் கனமழை பெய்யவும் வாய்ப்புள்ளது. உள் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யும்.

**தீர்ப்பு மகிழ்ச்சி அளிக்கிறது**

**அணை பராமரிப்பு தமிழகத்தின் கட்டுப்பாட்டில் நடக்க வேண்டும் : விவசாய சங்கத் தலைவர் யோசனை**

கம்பம்: இரு மாநிலங்களுக்கு இடையே கடந்த 35 ஆண்டுகளாக நீடித்து வந்த பிரச்னையில் நேற்று நியாயமான தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளது. இந்த தீர்ப்பு தமிழக விவசாயிகளுக்கும் மக்களுக்கும் மகிழ்ச்சியை தந்துள்ளது. அதே

நேரத்தில், எதிர்காலத்தில் சர்ச்சைகளை தவிர்க்க அணையின் பராமரிப்பு பணிகள் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் மட்டும் நடக்க வேண்டும். இதற்கு தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்க வேண்டும் என்று 5 மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் கம்பம் கே.எம். அப்பாஸ் தெரிவித்தார்.

முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி உயரத்திற்கு தண்ணீர் தேக்க அனுமதித்து உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது. தீர்ப்பு குறித்து ஐந்து மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் அப்பாஸ் கூறுகையில், ''142 அடியாக தண்ணீரை உயர்த்திக் கொள்ள சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்துள்ளது. தமிழக மக்கள் சார்பில் இந்த தீர்ப்பை வரவேற்கிறோம். கேரள அரசின் அணைகள் பாதுகாப்பு சட்டத்தை செல்லாது என அறிவித்ததும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. ஆனாலும் அணை பராமரிப்பை தமிழக, கேரள அதிகாரிகள், மத்திய அரசின் நீர்வள ஆணைய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என தீர்ப்பில் கூறப்பட்டுள்ளதை ஏற்க முடியாது.

அணை பராமரிப்பில் ஈடுபடும் அதிகாரிகளை கேரள அரசு 6 மாதங்களுக்கு ஒரு முறை மாற்றும். அப்போது பாதுகாப்பு இல்லை, கூடுதல் பராமரிப்பு தேவை, அணை உடைய வாய்ப்பு என்பது போன்ற புதுப்புது பிரச்னைகள் திட்டமிட்டே எழுப்புவர். மத்திய அரசு இதை விசாரிக்க குழு அமைக்கும். இதுபோன்ற சர்ச்சைகளை தவிர்க்க தமிழக அரசின் கட்டுப்பாட்டில் மட்டுமே அணை பராமரிப்பு பணிகள் நடக்க வேண்டும். அணையின் ஷட்டரை இறக்கி, 142 அடி தண்ணீர் தேக்கும் வகையில் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார்.

**மிளகு விலை அதிகரிப்பு**



**கொச்சி**: இந்தியாவில் மிளகு விளைச்சல் குறைந்துள்ளதால் அதன் விலை அதிகரித்துள்ளது என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர். கேரளாவில் மிளகு அதிகளவில் கிடைக்கிறது. இந்நிலையில், கொச்சி சந்தையில் கடந்த சில தினங்களாக வரத்து குறைந்துள்ளது என்றும், அதன் காரணமாக ஒரு கிலோ மிளகு ரூ.500ஐ எட்டியதாகவும் வர்த்தகர்கள் குறிப்பிட்டனர். நாடு முழுவதும் மிளகு தேவை அதிகரித்து வருவதால் இறக்குமதியும் அதிகரித்துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

**பரவலாக மழை மக்கள் மகிழ்ச்சி**

**திருவள்ளூர்**, : திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக பருவ மழை இல்லாமல் வறட்சி நிலவி வருகிறது. இதனால் மழை வேண்டி பல்வேறு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன. இந்நிலையில் வறட்சியை அதிகரிக்கும் வகையில் கோடை வெயில் முன்னதாகவே தொடங்கியது. இந்நிலையில், வங்கக்கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்தது. ஆனால் திருவள்ளூர் பகுதியில் மழை பெய்யவில்லை. இதனால் விவசாயிகளும் பொதுமக்களும் ஏமாற்றத்தில் இருந்தனர்.

நேற்று காலை கோடை வெயிலை தணிக்கும் வகையில் உடுமலை மற்றும் கடம்பத்தூர், பேரம்பாக்கம் உட்பட பல்வேறு பகுதிகளில் 2 மணி நேரம் பலத்த மழை பெய்தது. நீண்ட நாட்களுக்கு பிறகு பெய்த மழையால் பொதுமக்களும் விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**பலத்த மழை எதிரொலி குந்தா கெத்தை அணைகளுக்கு நீர் வரத்து அதிகரிப்பு**

**மஞ்சூர்**, : நீலகிரி மாவட்டத்தில் 12 நீர் மின்நிலையங்கள் இயங்கி வருகிறது. அப்பர்பவானி, அவலாஞ்சி, எமரால்டு, பைக்காரா, கிளன்மார்கன் உள்ளிட்ட பல்வேறு அணைகளில் தேக்கி வைக்கப்படும் தண்ணீரை கொண்டு மேற்படி மின் நிலையங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த மின் நிலையங்கள் மூலம் மொத்தம் 833.65 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. தமிழகத்தின் மொத்த மின் உற்பத்தியில் 10 சதவீதம் மின்சார

உற்பத்தி நீலகிரி மாவட்டத்தில் உள்ள மின் நிலையங்களில் மேற் கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், நீலகிரி மாவட்டத்தில் கடந்த 7 மாதங்களுக்கும் மேலாக மழை அறவே பெய்யாததால் கடும் வறட்சி நிலவியது.

ஆறுகள், சிற்றோடைகளில் நீரோட்டம் குறைந்ததால் நீர்வரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் மஞ்சூர் அருகே உள்ள குந்தா, எமரால்டு, அவலாஞ்சி உள்பட மாவட்டத்தில் மின்சார உற்பத்திக்கு நீர் ஆதாரங்களாக உள்ள பெரும்பாலான அணைகளிலும் தண்ணீரின் இருப்பு பெருமளவு குறைந்தது. அணைகளில் இருப்பில் உள்ள தண்ணீரை கொண்டே பெரும்பாலான மின் நிலையங்களும் இயக்கப்பட்டு வந்ததால் நீர் இருப்பு மேலும் குறைந்தது.

தற்போது, நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பரவலாக பலத்த மழை பெய்து வருகிறது. மஞ்சூர் சுற்றுபுற பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் குந்தா, கெத்தை அணைகளில் நீர் வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளது. மழை பெய்யாததால் மின் நிலையங்களில் மின்சாரம் உற்பத்தி தொடர்ந்து மேற்கொள்வதில் பாதிப்பு ஏற்படும் என அஞ்சப்பட்டு வந்த நிலையில் எதிர்பாராமல் பலத்த மழை பெய்ததால் மின் வாரியத்தினர் மத்தியில் ஆறுதலை ஏற்படுத்தியுள்ளது.

தினத் தந்தி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு**



**புதுடெல்லி,**

முல்லைபெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தக்கோரியும், கேரள அரசின் அணை பாதுகாப்பு சட்டத்தை ரத்து செய்ய உத்தரவிட வலியுறுத்தியும் சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு தொடர்ந்த வழக்கின் இறுதி தீர்ப்பை 5 பேர் அடங்கிய அரசியல்சாசன அமர்வு இன்று தீர்ப்பு வழங்கியது. முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம் என்று சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு வழங்கியுள்ளது.

<u>முல்லை பெரியாறு அணை</u>

கடந்த 2006–ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு அளித்த தீர்ப்பின்படி முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த கேரள அரசு தவறியது. மாறாக, அணையின் நீர்மட்டத்தை 136 அடியாக குறைத்து கேரள அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

அணை பலவீனமாக இருப்பதாக கூறி, முல்லை பெரியாறு அணையின் அருகே புதிய அணை ஒன்றை கட்டுவதற்கு ஏதுவாக கேரள சட்டசபையில் அணை பாதுகாப்பு சட்டம் என்ற ஒரு புதிய சட்டத்தை அம்மாநில அரசு நிறைவேற்றியது. இதன் மூலம் ஒரு மாநில அரசின் முடிவுகளில் அண்டை மாநிலங்கள் தலையிடக்கூடாது என்றும் அந்த சட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனந்த் குழு ஆய்வு

இந்நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழக அரசு சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இதையடுத்து சுப்ரீம் கோர்ட்டின் ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையில் குழு ஒன்றை நியமித்து அணையில் ஆய்வு மேற்கொள்ள உத்தரவிட்டது.

அதன்படி ஆனந்த் தலைமையிலான குழு அளித்த அறிக்கையில், அணை மிகவும் பலமாக உள்ளது என்றும், நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தலாம் என்றும், அதனால் எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும் அறிக்கை தரப்பட்டது.

இன்று இறுதி தீர்ப்பு

இந்த அறிக்கையை ஏற்க கேரள அரசு மறுப்பு தெரிவித்ததோடு புதிய குழுவை நியமிக்க வேண்டுமென கோர்ட்டில் வலியுறுத்தியது. கேரள அரசின் இந்த வாதத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்த நீதிபதிகள், சுப்ரீம் கோர்ட்டு நியமித்த இந்த குழுவானது ஏசி அறையில் அமர்ந்து அறிக்கை தயாரிக்கவில்லை என்றும், நேரடியாக களத்தில் இருப்பதை கண்டறிந்து அறிக்கையாக தாக்கல் செய்தனர் என்றும் நீதிபதி ஆர்.எம்.லோதா தெரிவித்து இருந்தார்.

இந்த வழக்கின் மீதான இறுதிக்கட்ட விசாரணை கடந்த ஆண்டு ஆகஸ்டு 20–ந் தேதி முடிவடைந்த நிலையில், 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல்சாசன அமர்வு இன்று தீர்ப்பு வழங்கியது.

நீர்மட்டத்தை உயர்த்தலாம்

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம் என்று தலைமை நீதிபதி உள்பட 5 நீதிபதிகள் கொண்ட சுப்ரீம் கோர்ட்டு பெஞ்ச் தீர்ப்பை வழங்கியுள்ளது. முல்லை பெரியாறு அணை தொடர்பான கேரள அரசு கொண்டு வந்த சட்டம் செல்லாது. கேரள அரசு கொண்டுவந்த சட்டம் அரசியல் சாசனத்திற்கு புறம்பானது. கோர்ட்டு தீர்ப்புகளை சட்டம் மூலம் தடுக்க முடியாது என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். மேலும், முல்லை பெரியாறு அணையை பராமரிக்க 3 பேர் கொண்ட குழுவையும் அமைத்து சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

**தமிழகம் மற்றும் புதுவையில் அடுத்த 24 மணி நேரத்தில் கன மழைக்கு வாய்ப்பு சென்னை வானிலை மையம் தகவல்**




**சென்னை,**

தமிழகம் மற்றும் புதுவையில் அடுத்த 24 மணி நேரத்திற்கு கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது குறித்து இயக்குனர் ரமணன் கூறியதாவது;

'வங்க கடலில் உருவாகி உள்ள புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேலும் வலுவிழந்து வடகிழக்காக நகர்ந்து கேரளா, கர்நாடகாவை நோக்கி செல்கிறது. அதனால் தமிழகத்தின் உள் மாவட்டங்களிலும் மற்றும் கடலோர மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் மழை பெய்ய கூடும்.

தமிழகம் மற்றும் புதுவையில் அடுத்த 24 மணி நேரத்தில் பல இடங்களில் கனமழையோ, அல்லது இடி மின்னலுடன் கூடிய கனமழையோ பெய்யக்கூடும். சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும், ஆங்காங்கே ஒரு சில இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக ரமணன் தெரிவித்துள்ளார்.

**தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் அணைகளின் நீர்மட்டம் உயர்வு- விவசாயிகள் மகிழ்ச்சி**



**நெல்லை,**

தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் நெல்லை மாவட்ட அணைகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. நெல்லை பாபநாசம் அணையின் நீர்மட்டம் 8 அடி உயர்ந்து 40,10 அடியாக உள்ளது. சேர்வலாறு அணை நீர்மட்டம் 2 நாளில் 33 அடி உயர்ந்து 79,40 அடியாக அதிகரிப்பு. மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 2 நாட்களில் 2 அடியாக உயர்ந்து 63 அடியை எட்டியுள்ளது. நெல்லை மாவட்டத்தில் அதிகபட்சமாக பாபநாசம் பகுதிகளில் 300மி.மீ. மழை பெய்துள்ளது.

<u>முல்லை பெரியாறு நீர்மட்டம்</u>

தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் முல்லை பெரியாறு அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. முல்லை பெரியாறு நீர்வரத்து 841 கன அடியில் இருந்து 1,535 கன அடியாக அதிகரித்துள்ளது. பெரியாறு அணை நீர்மட்டம் 111.01 அடியாக நீர் வெளியேற்றபட்டுவருகிறது.வினாடிக்கு 250 கன அடியாக

வந்துகொண்டிருக்கிறது.

பெரியாறு அணைப்பகுதியில் 41 மி.மீ தேக்கடியிலும் 68 மி,மீ மழை பதிவாகியுள்ளது.

<u>மேட்டூர் அணையின் நீர் மட்டம் அதிகரிப்பு</u>

காவிரி நீர்பிடிப்பி பகுதிகளில் பெய்யும் கனமழையால் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 677 கன அடியில் இருந்து வினாடிக்கு 1,208 கன அடியாக உயர்ந்துள்ளது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 32.33 அடி,நீர் இருப்பு 8,74 டிஎம்சி ஆக உள்ளது. மேட்டூர் அணையில் இருந்து வினாடிக்கு 1000 கன அடி தண்ணீர் வெளியேற்றம் செய்யபட்டுவருகிறது.

**மத்திய அரசுக்கு கோதுமை ஏற்றுமதி மூலம் ரூ.2,590 கோடி கிடைக்கும்**



**புதுடெல்லி,**

இந்திய உணவுக் கழகத்தின் சேமிப்புக் கிடங்குகளில் உபரியாக உள்ள கையிருப்பிலிருந்து 20 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதுவரை 15 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதிக்கு டெண்டர் விடப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ.2,590 கோடி வருவாய் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இனி சிறிது காலத்திற்கு டெண்டர் விடப்பட மாட்டாது என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மத்திய அரசு, 2013–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் உபரி கோதுமையில் 20 லட்சம் டன் ஏற்றுமதி செய்ய இந்திய உணவுக் கழகத்திற்கு அனுமதி அளித்தது. இதனையடுத்து எஸ்.டி.சி., எம்.எம்.டி.சி. மற்றும் பி.இ.சி. ஆகிய பொதுத் துறை நிறுவனங்கள் மூலம் ஒரு டன் கோதுமை 300 டாலர் என்ற அடிப்படை விலையில் ஏற்றுமதி செய்வதற்கான நடைமுறைகள் தொடங்கின. பின்னர் பிற நாடுகளின் போட்டியால் இந்த விலை 260–டாலராக குறைக்கப்பட்டது. எனினும் தற்போது விடப்பட்ட டெண்டர்களால் ஒரு டன் கோதுமைக்கு சராசரியாக 283 டாலர் கிடைக்கும் என தெரிகிறது. இதன் அடிப்படையில் மத்திய அரசுக்கு ரூ.2,590 கோடி கிடைக்க வாய்ப்புள்ளது.

கடந்த 2012–13–ஆம் ஆண்டில் பொதுத் துறை நிறுவனங்கள் 42 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்தன. இதனால் மத்திய அரசுக்கு 140 கோடி டாலர் அன்னிய செலாவணி வருவாய் கிடைத்தது. ஏற்றுமதியான கோதுமையில் பெரும் பகுதி வங்காளதேசத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. எத்தியோப்பியா, ஏமன், தென் கொரியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கும் ஓரளவு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

கோதுமை கொள்முதல் பருவம் ஏப்ரல் 1–ந் தேதி தொடங்கியது. அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை நீடிக்கும் இந்த பருவத்தில் மொத்தம் 3.10 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**வேலூர் அங்கக வேளாண்மையில் பயிர் பாதுகாப்பு**



இயற்கை வேளாண்மையில் பயிர்களை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த நான்கு விதமான முறைகளை கடைப்பிடிக்கலாம்.

உழவியல் முறை

கோடை உழவு செய்வதன் மூலம் மண்ணில் காணப்படும் பூச்சி முட்டைகள் மற்றும் லார்வா பருவங்களை அழிக்க முடியும். நோயற்ற விதைகளை தேர்வு செய்தல், சான்று விதைகளை விதைத்தல், பூச்சி நோய் எதிர்ப்பு தன்மையுள்ள ரகங்களை தேர்வு செய்து விதைப்பது போன்ற நடவடிக்கைகள் பூச்சி தாக்குதலை குறைக்க உதவும்.

கடலை வயலில் சோளம் மற்றும் கம்பு அல்லது மக்காச்சோளம் பயிர் சுழற்சி முறையில் சாகுபடி செய்தால் சிவப்பு கம்பளிப் புழுவின் தாக்குதலைத் தவிர்க்கலாம். பொறி பயிர் மற்றும் ஊடுபயிர், வரப்பு பயிர் சாகுபடி செய்தல், புகையானிலிருந்து தப்பிக்க நீர்மறைய நீர் கட்டுதல், வரிசைப்பயிர் உகந்த முறை ஆகிய உத்திகளால் பூச்சித் தாக்குதல் கட்டுப்படும்.

கைவினை முறைகள்

பூச்சிகளால் பாதிக்கப்பட்ட செடிகளை பிடுங்கி அழித்தல், இளம் புழுக்களை சேகரித்து அழித்தல், வயலில் பறவை இருக்கைகள் அமைப்பது, இரவில் விளக்குப் பொறி வைத்து பூச்சியின் நடமாட்டத்தை கண்காணிப்பது, இனக்கவர்ச்சி பொறி அமைப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். துவரை காய் துளைப்பான்களை கட்டுப்படுத்த ஹெலிகோவெர்பா இனக்கவர்ச்சி பொறி 12 எண்கள் ஒரு எக்டருக்கு பயன்படுத்தலாம்.

உயிரியல் முறைகள்

ஊன் விழுங்கிகள் மற்றும் நன்மை செய்யும் பூச்சிகளை பெருகச் செய்வதால் தீமை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கையை குறைக்க முடியும். உதாரணமாக, நெல் புகையானைக் கட்டுப்படுத்த மைரிட் ஊன் விழுங்கிகளை வயலில் விடலாம். அசுவினிப் பூச்சிகளை அழிக்க பொறிவண்டுகளை விடலாம்.

பூச்சி விரட்டி மற்றும் பூச்சிக் கொல்லிகள்

வேப்பங்கொட்டை 5 கிலோவை இடித்து தூளாக்கி சாக்கில் சிறு மூட்டைகளாக கட்டி 1 லிட்டர் தண்ணீரில் சுமார் 8 மணி நேரம் ஊறவைத்து இத்துடன் 300 மி.லி ஒட்டும் திரவத்தை சிறிது சிறிதாக கலக்கிக் கொண்டே ஊற்றவும். இந்த கலவையை ஒரு எக்டருக்கு 500 லிட்டர் அளவு என்ற அளவில் பயன்படுத்தலாம். வேப்பம் புண்ணாக்கு சாறும் பூச்சிகளை கட்டுப்படுத்தும். வேப்பம் புண்ணாக்கு 10 கிலோவை இடித்து தூளாக்கி ஒரு சாக்கில் சிறு மூட்டையாக கட்டி 100 லிட்டர் தண்ணீரில் 8 மணி நேரம் ஊற வைத்து அதனுடன் 300 மில்லி ஒட்டும் திரவம் சேர்க்கவும். இதனை எக்டருக்கு 500 லிட்டர் என்ற அளவில் பயன்படுத்தலாம். வேப்பெண்ணெய் கரைசலை கொண்டும் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். ஒட்டும் திரவம் 1 லிட்டரை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து அந்த கலவையில் 2 லிட்டர் வேப்பெண்ணையை சிறிது சிறிதாக கலக்கிக் கொண்டே ஊற்றவும். இந்த கலவையை எக்டருக்கு 500 லிட்டர் பயன்படுத்தி பூச்சிகளை விரட்டலாம்.

<u>தஸ்பர்னி சாறு</u>

வேம்பு இலை 5 கிலோ, நொச்சி, ஆடுதின்னாபாலை, சீந்தில், ஆமணக்கு, செவ்வரளி, எருக்கு இலை ஒவ்வொன்றும் 2 கிலோ எடுத்து நன்றாக நசுக்கி அத்துடன் 2 கிலோ பச்சை மிளகாய் பேஸ்ட், பூண்டு பேஸ்ட் 250 கிராம், பசுஞ்சாணம் 3 கிலோ, பசுங்கோமியம் 5 லிட்டருடன் சேர்த்து 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு மாத காலம் நொதிக்க வைக்கவும். ஒரு நாளைக்கு மூன்று முறை கலக்கி விடவும். பின்னர் பிழிந்து வடிகட்டி ஆறு மாதங்களுக்கு வைத்துக் கொள்ளலாம். இந்த அளவு ஒரு ஏக்கருக்கு போதுமானது.

மிளகாய் பூண்டு சாறு

1 கிலோ நெய்வேலி காட்டாமணக்கு இலை, 500 கிராம் பச்சை மிளகாய், 500 கிராம் பூண்டு, 5 கிலோ வேம்பு இலையை நன்றாக நசுக்கி 10 லிட்டர் பசுங்கோமியம் சேர்க்கவும். இதை 5 முறை இடைவெளி விட்டு பாதியளவு ஆகும் வரை காய்ச்சவும். பின்னர் இதை பிழிந்து வடிகட்டி கண்ணாடி அல்லது பிளாஸ்டிக் பாட்டில்களில் சேமித்து வைக்கவும். ஒரு ஏக்கருக்கு 2 முதல் 3 லிட்டர் சாற்றை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து பயன்படுத்தவும். இலை மடக்கு புழு, தண்டு, பழம், காய்த் துளைப்பான்களை இந்த சாறு கட்டுப்படுத்தும்.

தசகாவ்யா

வேம்பு, எருக்கம், கொளுஞ்சி, நொச்சி, ஊமத்தை, காட்டாமணக்கு, ஆடாதோடா, புங்கம் ஆகிய இலைகளை நறுக்கி 1 கிலோ இலைக்கு 1 லிட்டர் பசுங்கோமியம் சேர்த்து 10 நாட்கள் ஊறவைக்கவும். இந்த சாறு 1 லிட்டருடன் 5 லிட்டர் பஞ்சகாவ்யா சேர்த்து 25 நாட்கள் வைத்திருந்து நன்றாக கலந்து வடிகட்டவும். இதை 30 மில்லி சாறுடன் 1 லிட்டர் நீர் கலந்து பயிர்களுக்குதெளிக்கலாம். மேலும் நாற்றுக்கள் மற்றும் விதைகளை இந்த சாற்றில் 20 நிமிடங்கள் மூழ்க வைப்பதால் விதை மற்றும் வேரின் வளர்ச்சி அதிகமாகும். சாறு உறிஞ்சும் பூச்சிகள், இலைப்புள்ளி, இலைக்கருகல் நோய், சாம்பல் நோய் ஆகியவற்றை இந்த சாறு கட்டுப்படுத்தும்.

பல்நோக்கு கரைசல்

ஒரு தாமிர பாத்திரத்தில் 3 கிலோ நசுக்கிய வேம்பு இலை சாறு மற்றும் 1 கிலோ வேப்பங்கொட்டை பருப்பு பவுடர் எடுத்து 10 லிட்டர் பசுங்கோமியம் சேர்த்து கலக்கி பாத்திரத்தை இறுக மூடி 10 நாட்கள் நொதிக்க விடவும். பின்னர் இந்த கலவை பாதியாகும் வரை ஒரு பாத்திரத்தில் கொதிக்க விடவும்.

அரைத்த மிளகாய் 500 கிராம் 1 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு நாள் இரவு வைத்திருக்கவும். மற்றொரு பாத்திரத்தில் 250 கிராம் பூண்டை தண்ணீர் விட்டு நசுக்கி ஒரு நாள் இரவு வைத்திருக்கவும். மறுநாள் கொதிக்க வைக்கப்பட்ட கரைசலுடன் மிளகாய் சாறு, பூண்டு சாறு இரண்டையும் சேர்த்து நன்றாக கலக்கி வடிக்கவும். இது அனைத்து பயிர்களுக்கு பல்வேறு வகையான பூச்சிகளை கட்டுப்படுத்த பயன்படுகிறது. இதில் 250 மில்லி எடுத்து 15 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க பயன்படுத்தவும்.

கி.ராஜேந்திரன், வேளாண்மை துணை இயக்குநர், நீர் மேலாண்மை நிலையம், விநாயகபுரம்.

**ஈரோடு மாவட்டத்தில் கவுந்தப்பாடியில் 30 மில்லிமீட்டர் மழைப்பதிவு**

ஈரோடு மாவட்டத்தில் விடிய விடிய கொட்டிய மழையில் கவுந்தப்பாடியில் அதிகபட்சமாக 30 மில்லிமீட்டர் மழைப்பதிவாகி உள்ளது.

பலத்த மழை

ஈரோடு மாவட்டத்தில் கோடை காலம் தொடக்கத்தில் இருந்து வெயிலின் தாக்கம் கடுமையாக இருந்தது. பொதுமக்கள் வெளியில் வரமுடியாதபடி அனல் காற்று வீசியது. இதனால் நீண்ட தூரம் இருசக்கர வாகனங்களில் செல்லமுடியாமல் வாகன ஓட்டுனர்கள் சிரமப்பட்டனர்.

இந்தநிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு வங்கக்கடலில் குறைந்த அழுத்த தாழ்வு மண்டலம் உருவானது. கன்னியாகுமரி கடலில் மையம் கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி மேலும் வலுவடைந்து தீவர காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறிஇருப்பதாக சென்னை வானிலை ஆராய்ச்சி மண்டலம் தெரிவித்துஉள்ளது. இதனால் தமிழகத்தில் கனமழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. அதன்படி ஈரோடு மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் பலத்த மழை பெய்தது.

விவசாயிகள் மகிழ்ச்சி

கோபிசெட்டிபாளையத்தில் நேற்று முன்தினம் இரவு முழுவதும் மழை பெய்துகொண்டே இருந்தது. அதேபோல் நேற்றுக்காலை சாரல் மழை தூறிக்கொண்டு இருந்தது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. வேலைக்கு செல்பவர்கள், வெளியூருக்கு செல்வர்கள் குடை பிடித்துக்கொண்டு சென்றனர். பகல் 11 மணிக்கு மேல் சிறிதுநேரம் பலத்த மழை பெய்தது. அதைத்தொடர்ந்து மேகங்கள் கலைந்து மிதமான வெயில் அடித்தது.

அதன்பின்னர் மீண்டும் சிறிது நேரம் மழை பெய்தது. இவ்வாறு நேற்று முழுவதும் விட்டுவிட்டு மழை பெய்து கொண்டு இருந்தது. இந்த மழையால் விவசாயிகள், பொதுமக்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். அக்னிவெயில் தொடங்கிய நேரங்களில் மழை பொழிவது வெப்பம் தணிந்து குளிர்ச்சியை அளிக்கிறது.

<u>மழை அளவு</u>

ஈரோடு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:– (மில்லி மீட்டரில்)

சத்தியமங்கலம் – 12

கொடிவேரி – 12

கோபிசெட்டிபாளையம் – 16

எலந்தகுட்டைமேடு – 18

கவுந்தப்பாடி – 30

பெருந்துறை – 10

பவானி – 15

ஓலப்பாளையம் – 11

புங்கம்பாடி – 20

ஈரோடு – 20

மொடக்குறிச்சி – 20

சென்னிமலை – 19

கொடுமுடி – 12

வெள்ளக்கோவில் – 35.2

பவானிசாகர் அணை – 9.2

**கும்பகோணம், பட்டுக்கோட்டையில் பலத்த மழை; விவசாயிகள் மகிழ்ச்சி**



**கும்பகோணம்,**

கும்பகோணம், பட்டுக்கோட்டையில் பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>பலத்த மழை</u>

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் பகுதியில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால், பொதுமக்கள் மிகவும் அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில் கடந்த சில நாட்களாக கும்பகோணம் பகுதியில் அவ்வப்போது மிதமான மழை பெய்து வருகிறது.

இந்த மழை காரணமாக அக்னி நட்சத்திர வெயிலின் கொடுமையில் இருந்து மக்கள் ஓரளவு தாக்குப்பிடித்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை 3 மணி முதல் 5 மணிவரை பரவலாக பலத்த மழை பெய்தது. நேற்று மாலை 6 மணியளவில் சுமார் 1 மணி நேரம் மழை பெய்தது. இதனால், ரோடுகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. வணிகவரி அலுவலக வளாகம், பஸ் நிலைய பகுதிகள் உள்ளிட்ட தாழ்வான பகுதிகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

<u>பட்டுக்கோட்டை</u>

பட்டுக்கோட்டை, பேராவூரணி தாலுகாக்கள் கல்லணைக் கால்வாய் பாசன கடைமடை பகுதியாகும். கடந்த ஆண்டு கல்லணைக் கால்வாயில் போதிய அளவு தண்ணீர் வராததாலும், கடந்த 5 மாதங்களுக்கு மேலாக மழை இல்லாததாலும்

பட்டுக்கோட்டை பகுதியில் உள்ள ஏரி, குளங்கள், வறண்டு காணப்பட்டன. இதனால் ஆடு, மாடுகள் குடிக்கக் கூட தண்ணீர் இல்லாமல் அவதிப்பட்டு வந்தன. கடலோரப் பகுதிகளில் ஒரு குடம் தண்ணீர் ரூ.10–க்கு விற்கப்பட்டது. விவசாயம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. நெற்பயிர்கள் நீரில்லாததால் கருகி மாடுகளை விட்டு மேய்க்கக் கூடிய அவலநிலை ஏற்பட்டது. சில இடங்களில் பம்புசெட் மூலம் பயிர் செய்தும் நிலத்தடி நீர்மட்டம் 200 அடிக்கு கீழே போய்விட்டதால் மக்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகினர். நெல், நிலக்கடலை, கரும்பு, கோடை சாகுபடி பயிர்கள் கருகி சேதம் அடைந்தன. கடந்த சில மாதங்களாகவே அக்கினி நட்சத்திரத்தை விட அதிக அளவில் அனல் பறக்கும் வெயில் கொளுத்தியதால் மரம், செடி கொடிகள் கருகிவிட்டன.

இந்நிலையில் கடந்த 4–ந் தேதி அக்னி நட்சத்திரம் தினத்தன்று லேசாக மழை தூற தொடங்கி கடந்த 4 நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் வாடி பட்டுப் போகும் நிலையில் இருந்த தென்னை மரங்கள் தப்பின. இதனால் தென்னை சாகுபடியாளர்களும், விவசாயிகளும் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்த மழையினால் சித்திரைப்பட்டத்தில் எள் விதைக்கலாம் என்று விவசாயிகள் கூறினர்.

**தஞ்சை மாவட்டத்தில் 3–வது நாளாக மழை அதிகபட்சமாக அதிராம்பட்டினத்தில் 63 மி.மீ. பதிவானது**



**தஞ்சாவூர்,**

தஞ்சை மாவட்டத்தில் நேற்று 3–வது நாளாக பரவலாக கோடை மழை பெய்தது. அதிகபட்சமாக அதிராம்பட்டினத்தில் 63 மில்லி மீட்டர் மழை பதிவானது.

<u>கோடைகாலம்</u>

கோடைகாலம் தொடங்கியது முதல் வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. இந்த நிலையில் கோடைவெயிலின் உச்சகட்டமான அக்னிநட்சத்திரம் எனப்படும் கத்திரிவெயில் கடந்த 4–ந்தேதி தொடங்கியது. அன்று முதல் பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்தது. தஞ்சை மாவட்டத்தில் அக்னி நட்சத்திரம் தொடங்குவதற்கு முதல் நாள் லேசான மழை பெய்தது. அக்னிநட்சத்திரம் தொடங்கிய நாளில் மழை பெய்வதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. ஆனால் மழை பெய்யவில்லை.

இந்த நிலையில் தஞ்சை மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக பரவலாக கோடை மழை பெய்தது. இந்த நிலையில் நேற்று காலை வெயில் அடித்தது. அவ்வப்போது மழை பெய்வதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. இந்த நிலையில் திடீரென மதியம் 1.30 மணி அளவில் மழை பெய்யத்தொடங்கியது. மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் பலத்த மழையும் பெய்தது. தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடன் காட்சி அளித்தது.

<u>கோடை உழவு</u>

தஞ்சை மாவட்டத்தில் கோடை மழை தொடர்ந்து பெய்து வருவதால் கோடைநெல் சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் குறுவை சாகுபடிக்கு நாற்றங்கால் தயாரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக விவசாயிகள் தற்போது கோடை உழவும் தொடங்கி விட்டனர். தற்போது கோடை மழை பெய்து வருவதால் வெயிலின் தாக்கம் இன்றி குளிர்ந்த காற்று வீசி வருகிறது.

<u>மழைஅளவு</u>

தஞ்சை மாவட்டத்தில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

அதிராம்பட்டினம் 63, கல்லணை 22, கும்பகோணம் 16, பாபநாசம் 11, தஞ்சாவூர் 9.4, திருவையாறு 16, திருக்காட்டுப்பள்ளி 15, வல்லம் 37, அணைக்கரை 35,

அய்யம்பேட்டை 18, திருவிடைமருதூர் 13, மஞ்சளாறு 14, நெய்வாசல் தென்பாதி 19, பூதலூர் 21.6, வெட்டிக்காடு 27, ஈச்சன்விடுதி 60, ஒரத்தநாடு 24, மதுக்கூர் 25, பட்டுக்கோட்டை 61, பேராவூரணி 49.4, குருங்குளம் 32.

**திருவாரூர் மாவட்டத்தில் பரவலாக மழை அதிகபட்சமாக முத்துப்பேட்டையில் 37 மி.மீட்டர் பதிவானது**

**திருவாரூர்,**

திருவாரூர் மாவட்டத்தில் பரவலாக கோடை மழை பெய்தது. நேற்று முத்துப்பேட்டையில் 37 மில்லி மீட்டர் மழை பதிவானது.

5–வது நாளாக மழை

வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் கோடை மழை பரவலாக பெய்யும் என சென்னை வானி லை மையத்தில் இருந்து அறி விப்பு வெளியானது. அதன் படி திருவாரூர் மாவட் டத்தில் கடந்த 5–வது நாளாகநேற்றும் மழை பெய்தது.

முத்துப்பேட்டை, மன்னார்குடி, நீடாமங்கலம், திருவாரூர் உள்ளிட்ட மாவட் டத்தின் அனைத்துப் பகுதி களிலும் பரவலாக மழை பெய் தது. இதனால் கோடை வெயி லின் தாக்கம் தணிந்தது. திரு வாரூரில் நேற்று அவ்வப் போது லேசான தூறல் விழுந்த வண்ணம் இருந்தது. இதனால் வானம் மேக மூட்டத்துடன் காட்சி அளித்தது. முத்துப் பேட்டையில் நேற்று சாரல் மழை பெய்தது. இதேபோல் நீடாமங்கலம், மன்னார்குடி, வலங்கைமான் பகுதிகளில் லேசான மழை பெய்தது.

மழை நிலவரம்

நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் முத்துப்பேட்டையில் அதிக பட் சமாக 37 மில்லி மீட்டர் மழை பதிவானது.

மாவட்டத்தின் மற்ற பகுதி களில் மழை பொழிவு விவ ரம் மில்லி மீட்டர் அளவுகளில் வருமாறு:–

திருவாரூர்–25, பாண்டவையாறு தலைப்பு–25, மன்னார்குடி–24, திருத்துறைப்பூண்டி–15, குடவாசல்–15, நன்னிலம்–14, வலங்கைமான்–13, நீடாமங்கலம்–12.

180 மில்லி மீட்டர்

மாவட்டத்தில் நேற்று பதிவான சராசரி மழை அளவு 20 மில்லி மீட்டர் ஆகும். மாவட்டத்தின் மொத்த மழை அளவு 180 மில்லி மீட்டர் ஆகும்.

**பண்ருட்டி அருகே பலத்த மழையினால் நெற்பயிர்கள் சேதம் விவசாயிகள் கவலை**



**பண்ருட்டி,**

பண்ருட்டி அருகே பலத்த மழையினால் நெற்பயிர்கள் சாய்ந்து சேதம் அடைந்தன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

சொர்ணவாரி நெற்பயிர்

பண்ருட்டி அருகே சின்னப்பேட்டை, ஒறையூர், சிறுவத்தூர், சேமக்கோட்டை, திருத்தூறையூர், புதுப்பேட்டை, அவியனூர், கரும்பூர் உள்பட பல்வேறு கிராமங்களில் ஆண்டு தோறும் பிப்ரவரி மாதத்தில் விவசாயிகள் சொர்ணவாரி பருவத்திற்கான நெற்பயிரினை பயிரிடுவது வழக்கம். அதன்படி நடப்பாண்டிலும் அப்பகுதியில் விவசாயிகள் அதிகளவில் நெற்பயிரை பயிரிட்டு இருந்தனர்.

இருப்பினும் தண்ணீர் பற்றாக்குறையால் நெற்பயிர்கள் அனைத்தும் வாடிய நிலையிலும் விவசாயிகள் போராடி பராமரித்து வந்தனர். இந்நிலையில், தற்போது பயிர்கள் அனைத்தும் நன்கு வளர்ந்து காணப்பட்டது.

பயிர் சேதம்

இந்நிலையில், கடந்த 3 நாட்களாக பரவலாக பெய்த மழையின் காரணமாக சின்னப்பேட்டை, சிறுவத்தூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள சொர்ணவாரி பருவ நெற்பயிர் வயல்களில் மழைநீர் சூழ்ந்தது. இதனால், பெரும்பாலான நெற்பயிர்கள் சாய்ந்து மழைநீரில் மூழ்கியது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இது குறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், கடும் தண்ணீர் தட்டுப்பாட்டுக்கு இடையே தற்போது பண்ருட்டி பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர். எனினும் தற்போது பெய்து வரும் மழையால் நல்ல விளைச்சலை தரக்கூடிய எங்களது நெற்பயிர்கள் சேதம் அடைந்து வருகின்றன. இதனால் என்ன செய்வது என்று தெரியாமல் நாங்கள் தவித்து வருகின்றனர். இதேபோல், மனம்தவிழ்ந்தபுத்தூர் உள்பட பல இடங்களில் பயிரிடப்பட்டுள்ள கேழ்வரகு பயிரும் மழையால் பலத்த சேதம் அடைந்துள்ளது. என்றார்.

**அரவக்குறிச்சி பகுதியில் விடிய, விடிய மழை கொட்டி தீர்த்தது**



**அரவக்குறிச்சி,**

அரவக்குறிச்சி பகுதியில் விடிய, விடிய மழை கொட்டி தீர்த்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள் ளனர்.

**விவசாயிகள்**

அரவக்குறிச்சி மற்றும் சுற்றுவட்டார பகுதி மக்கள் அதிக அளவில் விவசாயத் தொழிலையே நம்பி உள்ளனர். இப்பகுதியில் நெல், கம்பு, சோளம், மக்காச்சோளம், சூரியகாந்தி, கடலை உள்ளிட்ட பயிர் வகைகள் பயிரிட்டு விவசாயம் செய்து வருகின்றனர். சமீபகாலமாக மிகக்கடுமையான வறட்சி நிலவி வருவதால் இப்பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு விவசாயம் மிகவும் பாதிப்படைந்தது. அதனால் அந்தந்த பகுதியில் கிணற்றில் கிடைக்கும் குறைந்த அளவு நீரைக்கொண்ட இப்பகுதி விவசாயிகள் கால்நடை வளர்ப் பதையும் மற்றும் முருங்கை பயிரிடுவதை மட்டுமே செய்து வருகிறார்கள்.

இருந்தபோதிலும் மழை இல்லாமல் கால்நடைகளின் தீவனத்திற்கு மிகுந்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கிணற்றில் நீர் குறைந்துவிட் டது.

இதனால் இப்பகுதி விவசாயிகள் மிகவும் கவலை யடைந்தனர்.

**விடிய விடிய மழை.**

இந்த நிலையில் நேற்று முன் தினம் மாலை ½ மணி நேரம் லேசான மழை பெய்தது. அதற்கு பிறகு வானம் மேக மூட்டமாக காணப்பட்டது.

பின்னர் இரவு 8.00 மணிக்கு லேசான தூறலுடன் ஆரம்பித்த மழை 10 மணியளவில் அதிக அளவில் பெய்ய தொடங்கியது. அது விடிய, விடிய நீடித்து மழை கொட்டித்தீர்த்தது.

நேற்றும் மழை பெய்தது. இதனால் பொதுமக்களும், விவசாயிகளும் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இது தொடர்பாக இப்பகுதி விவசாயிகள் கூறியதாவது:–

தண்ணீரின்றி கஷ்டப்படும் இந்த வேளையில் இந்த மழை பயனுள்ளதாக இருக்கும். காய்ந்து போகும் நிலையில் உள்ள பயிர்கள் உயிர் பிழைத்துக்கொள்ளும். குறிப்பாக ஆடு, மாடுகளுக்கு புல் வளர்ந்து தீவனம் உண்டாகும். இதே போன்று இரண்டு அல்லது மூன்று முறை மழை பெய்தால் இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**தொடர்ந்து பலத்த மழை திருப்பத்தூரில் 47.2 மில்லி மீட்டர் பதிவு**



**சிவகங்கை,**

சிவகங்கை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையில் திருப்பத்தூரில் அதிகபட்சமாக 47.2 மில்லி மீட்டர் பதிவு செய்துள்ளது.

**பலத்த மழை**

வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தீவிரமடைந்து இலங்கை அருகே மையம் கொண்டுள்ளது. இதனால் சிவகங்கை மாவட்டத்தில் கடந்த 3நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இந்தமுறை பருவ மழை உரிய காலத்தில் பெய்யததாலும், கடும் வறட்சியினால் நீர்நிலைகள் வறண்டு காணப்பட்டது. நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்தது.

இந்தநிலையில் தற்போது பெய்து வரும் தொடர் மழையினால் சிவகங்கை மாவட்டத்தில் வறண்டு கிடந்த ஏரி, குளம் மற்றும் கண்மாய்களில் தண்ணீர் தேங்கி நிற்க தொடங்கியது. அத்துடன் நிலத்தடி நீர் மட்டமும் அதிகரித்து வருகிறது.

காரைக்குடி பகுதியில் தொடர்ந்து 4நாட்கள் மழை பெய்து வருகிறது. கடந்த 4நாட்களுக்கு முன் அக்னிநட்சத்திரம் ஆரம்பித்த நிலையில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

சில இடங்களில் குடிதண்ணீருக்கு கூட இல்லாத வகையில் கண்மாய்கள் வறண்டு காணப்பட்டன. இந்தநிலையில் தற்போது பெய்து வரும் மழையால் நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. நிலத்தடி நீர்மட்டமும் உயர்ந்துள்ளதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தொடர் மழை காரணமாக கடந்த 4நாட்கள் எந்த வித வெயில் தாக்கமும் இல்லை.

**அதிக மழை பதிவு**

சிவகங்கை நகரில் நேற்று முன்தினம் இரவு முழுவதும் மழை பெய்தது. இதனால் நகரின் தாழ்வான பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. நேற்று காலை 8மணி வரை மாவட்டத்தில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

காரைக்குடி 27, மானாமதுரை 24, சிவகங்கை 35, திருப்புவனம் 40, திருப்பத்தூர் 47.2, இளையான்குடி 19.6, தேவகோட்டை 44.2, மாவட்டத்தின் உயர்ந்த அளவாக திருப்பத்தூரில் 47.2 மில்லி மீட்டர் மழையளவும், குறைந்த அளவு இளையான்குடியில் 19.6 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## முல்லைப் பெரியாறு வழக்கு: தமிழகத்துக்கு பெரும் வெற்றி



முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தின் அளவை 136 அடியாக குறைத்து கேரள அரசு நிறைவேற்றிய சட்டத்தை உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.

அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதுடன், அதை நிர்வகிக்க மூன்று பேர் கொண்ட குழுவை அமைக்கவும் உத்தரவிட்டுள்ளது.

கேரளாவில் உள்ள முல்லைப் பெரியாறு அணையில் இருந்து தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 21 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதியைப் பெறுகிறது. இந்த அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த 2006-ம் ஆண்டு பிப்ரவரியில் உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இந்த உத்தரவை மீறும் வகையில், அதே ஆண்டு மார்ச் 18-ம் தேதி கேரள சட்டமன்றத்தில், முல்லைப் பெரியாறு அணையின் அதிகபட்ச உயரத்தை 136 அடியாக நிர்ணயித்து சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதை எதிர்த்து தமிழக அரசு தொடர்ந்த வழக்கை உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு விசாரித்தது.

இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆர்.எம்.லோதா, நீதிபதிகள் எச்.எல்.தத்து, சந்திரமவுலி பிரசாத், மதன் லோகுர், எம்.ஒய்.இக்பால் ஆகியோர் அடங்கிய அமர்வு புதன்கிழமை அளித்த தீர்ப்பு விவரம்:

மாநிலங்களிடையே உள்ள நீர் பங்கீட்டு பிரச்சினை குறித்து விசாரித்து இந்த நீதிமன்றம் ஒரு தீர்ப்பளித்த பின், அதை மறுத்து கேரள அரசு சட்டம் நிறைவேற்றி இருப்பது நீதி பரிபாலனத்தில் தலையிடும் செயல். கேரள அரசு 2006-ம் ஆண்டு நிறைவேற்றிய சட்டம் அரசியல் சாசனத்துக்கு எதிரானது. அச்சட்டம் ரத்து செய்யப்படுகிறது.

மத்திய நீர்வளக் குழுவைச் சேர்ந்த ஒருவரை தலைவராகக் கொண்ட மூன்று பேர் குழுவின் கண்காணிப்பில் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடியாக உயர்த்தப்பட வேண்டும். 2006-ம் ஆண்டு உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இக்குழு அமல்படுத்த வேண்டும். இந்த குழுவில் தமிழகம், கேரளம் சார்பில் தலா ஒருவர் உறுப்பினராக இருப்பர். இக்குழு கேரளத்தில் தன் அலுவலகத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். இக்குழுவின் செலவுகளை தமிழக அரசு ஏற்க வேண்டும்.

அணையின் நீர்மட்டத்தை உறுதி செய்வதுடன், பருவமழை காலங்களில் அணையின் நீர்மட்டம், பாதுகாப்பு குறித்து இக்குழு கண்காணிக்கும். உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி, தமிழகம் சார்பில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள இக்குழு அனுமதி அளிக்க வேண்டும். அணையின் பாதுகாப்பு குறித்து இரு மாநில அரசுகளுக்கும் இக்குழு உத்தரவுகளை பிறப்பிக்கலாம். அந்த உத்தரவை இரு மாநில அரசுகளும் நிறைவேற்ற வேண்டும்.

புதிய அணை கட்டும் விஷயத் தில், கேரள அரசு தன் முடிவை தமிழகத்தின் மீது திணிக்க முடியாது. புதிய அணை கட்டுவதென்றால், அது இரு மாநில அரசுகளின் சம்மதத் துடன் நடைபெற வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

## தென் மாவட்டங்களில் கன மழை வாய்ப்பு: 48 மணி நேரத்துக்கு நீடிக்கும்



தமிழகத்தில் தென் மாவட்டங்களில் பல பகுதிகளில் மிக பலத்த மழை பெய்துள்ளது. வட மாவட்டங்களிலும் பல இடங்களில் மழை பெய்துள்ளது. தமிழகத்தில் அடுத்த 48 மணி நேரத்துக்கு மழை நீடிக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் பாபநாசத்தில் ஒரே நாளில் 30 செ.மீ. மழை பெய்துள்ளது. அதே மாவட்டத்தில் உள்ள மணிமுத் தாற்றில் 27 செ.மீ., அம்பையில் 23 செ.மீ., நாங்குநேரியில் 17 செ.மீ., சேரன்மாதேவியில் 15 செ.மீ. மழை பெய்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் மற்றும் ராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் 11 செ.மீ., கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடி, குழித்துறையில் 10 செ.மீ., திருநெல்வேலி மாவட்டம் தென்காசி, கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில், பேச்சிப்பாறை, தக்கலை, கடலூர் மாவட்டம் சிதம்பரம் ஆகிய இடங்களில் தலா 9 செ.மீ. மழை பெய்துள்ளது. இது தவிர புதுக்கோட்டை, திருப்பூர், கரூர், தூத்துக்குடி, நாமக்கல், நீலகிரி, தேனி, தஞ் சாவூர், திண்டுக்கல், கிருஷ்ண கிரி, விருதுநகர், சிவகங்கை, விழுப்புரம், ஈரோடு, திருச்சி, திருவாரூர், மதுரை, திண்டுக்கல், தருமபுரி உள்ளிட்ட பல மாவட்டங் களில் மழை பெய்துள்ளது.

### உள் மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு

தென் மேற்கு வங்கக் கடலில் ஞாயிற்றுக்கிழமை உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை, தற்போது தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாறியுள்ளது.

கன்னியாகுமரி அருகே இருந்த தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி, புதன்கிழமை காலை, வட மேற்கு திசையில் நகர்ந்து தென் கேரளம் அருகே உள்ளது.

இதனால் அடுத்த 48 மணி நேரத்தில் தமிழகத்தின் உள் மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. தென் மாவட்டங் களில் பல இடங்களிலும், வட மாவட்டங்களில் சில இடங்க ளிலும் மழை பெய்யும். தென் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

**மீனவர்களுக்கு எச்சரிக்கை**

வங்கக் கடலில் உள்ள காற்றழுத்த தாழ்வு பகுதியின் காரணமாக, கடல் கொந்தளிப்புடன் காணப்படும். வட தமிழகம் மற்றும் புதுச்சேரி கடற்கரையில் கடல் காற்று மணிக்கு 45 கி.மீ. முதல் 55 கி.மீ. வேகம் வரை வீசும். தென் தமிழகம், லட்சத் தீவு கடற்கரையில் 55 கி.மீ. முதல் 60 கி.மீ. வேகம் வரை காற்று வீசும். எனவே தமிழ்நாடு, புதுச்சேரி, லட்சத்தீவு, கேரள மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப் பட்டிருக்கின்றனர்.